
HALLO! WHAT IS THIS?
THIS IS THE TONIC OF WORLD
WIDE REPUTATION

# MADAN MANJARI PILLS




These pills are prepared by a hereditary Royal Physician for the rejunevation of human kind. These pills are in daily use all over the world for brainfag, debility, nervous exhaustion, and loss of manhood. These pills are indispensable to young and old deserving the retentive power.

**Price per tin of 40 pills Rs. 1.**

---

**OUR FAMOUS AND INVALUABLE**

## 'VAIDYA VIDYA'

A manual containing 144 pages which leads you to perfect health, happy life and lasting wealth is offered to you.

---

### *GRATIS & POST FREE*

Order for a Copy to-day and insure your life, moral, mental and physical dangers.

---

**Raj Vaidya Narayanji Keshavajee,**
**20, China Bazaar Road, MADRAS.**

# LIGHT OF WISDOM

# ஞான தீபிகை

மனித வாழ்க்கை க்ரமத்தை ஸரியாக அமைத்து

தெய்வீகத் தன்மையை அடையச் செய்யும்

ஒரு அருமையான நூல்.


இதன் ஆசிரியர்

குன்னூர், ஆநந்தாச்ரமத்து

ப்ரஹ்மஸ்ரீ ம. வே. சிவஸுப்ரஹ்மண்ய அய்யர் அவர்கள்



மகாமகோபாத்தியாய

டாக்டர். உ. வே. சாமிநாதையர்

நூல் நிலையம்,

சென்னை - 600 0[illegible]



ப்ரசுரித்தவர்

ஆதர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ் ஏஜன்ஸி

சென்னை, ஈ.

1917

விலை ரூ. 1-0-0.]



[*All Rights Reserved*

ஸ்ரீ [illegible] ஐயர்,

[illegible] B.A.

அவர்களின்

அன்பளிப்பு

# முகவுரை

*கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க வதற்குத் தக.*

ஒவ்வொரு பாஷையிலும் எவ்வளவுக்கு அதிகமாக வசன நூல்கள் ஏற்படுகின்றனவோ அவ்வளவுக் கதிகமாக ஜனங்கள் அப்பாஷையின் பயனை அநுபவிப்பதுமன்றி பாஷையும் அபிவிருத்தியடையும் என்பது கற்றறிந்தவர்களது துணிபு. இந்நோக்கத்தைக் கொண்டே தற்காலம் வசன நூல்கள் பெருகத் தலைப்பட்டன. எனினும், நாடகங்களும் கதைகளும் அதிகமாகப் பெருகத் தொடங்கினவேயன்றி ஸன்மார்க்கத்தையும் நீதியையும், கடமையையும் புகட்டும் நூல்கள் மிகச் சில. தற்காலம், பாடசாலைகளில் (Moral Instruction) ஸன்மார்க்க போதனையென்பது கட்டாயமிருக்க வேண்டியதென்று கல்வி இலாகாத் தலைவர்களும் இந்திய மாணவர்களின் உத்தம அபிவிருத்தியில் கருத்துக்கொண்ட ஜனப்பிரதிநிதிகளும் வற்புறுத்தி வருவது பலருக்குந் தெரிந்த விஷயம். அப்போதனாவிஷயமாக மிகச் சில நூல்களே வெளியாயிருக்கின்றன. சிற்சில, வெகு கேவலமான தமிழ் நடையிலுங்கூட எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால், பெரும்பான்மையும் பலருக்கும் பொதுவான நல்லொழுக்க உணர்ச்சிகளையும், மனோதத்துவ வுணர்ச்சிகளையும் அபிவிருத்தி செய்யும் வாக்கியங்களாக இராமல் பட்சபாத வுணர்ச்சியையும், பேதபுத்தியையும் குறுகின நோக்கத்தையும் புகட்டும் நூல்களாகவே ஏற்பட்டிருக்கின்றன. திருவள்ளுவர்போல ஸர்வமத ஸம்மதமாய், யாரும் இலகுவில் அநுஷ்டிக்கக் கூடிய கொள்கைகளையும் நீதிகளையும் புகட்டுவதுதான் சிறந்தது என்று முதிர்ந்த அனுபவம்பெற்ற மேதாவிகளும் ஸன்மார்க்க நீதிபோதகர்களும் ஆங்காங்கு தெரிவித்து வருகின்றனர். அக்கொள்கைக்குத் தக்க வசன நூல் தமிழிலில்லாத குறையைக் கண்டு ம-ள-ள-ஸ்ரீ எஸ். ஆர். கிருஷ்ணையங்கார் B. A. என்ற எம் நண்பர் ஒருவர் எம்மிடத்து அடிக்கடி அதைப்பற்றிப் பேசுவதுண்டு. கடைசியாக அவரே எம்மிடத்து ஸர்வமதத்துக்கும் பொதுவான கொள்கைகளும் நீதிகளுமடங்கிய ஒரு ஆங்கிலப் புத்தகத்

தைத் தந்து அதனை மொழிபெயர்த்து வெளியிடும்படி வேண்டினார். யாமும் அவர் மொழிக்குச் செவிசாய்த்துப் அப்புத்தகத்தில் ஒவ்வொரு தர்மத்தையும் பூர்வ பட்சப்படுத்தி ஸித்தாந்தம் செய்திருக்கும் முறையை வியந்து அதனை முற்றும் படித்துப் பார்க்கவே அது ஆதியில் வடமொழியிலிருந்த நூலென்றும் தீபேத்திலுள்ள மகாலாமாவினது ஆலயத்தில் அருமையறிவாரில்லாது கிடந்ததென்றும் தெரியவந்தது. பிறகு, அங்கிருந்து சீன சக்கரவர்த்தியினது அரண்மனைக்குச் சென்று அங்கு வடமொழி தெரிந்த ஆங்கில வித்வானொருவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் பெயர்போன கல்வியாளராகிய லார்ட் செஸ்டர் பீல்டு அவர்களின் ஆதரணையினால் வெளிவந்ததென்றும், பிறகு ஜன்மதேசமாகிய இந்தியாவுக்கு வந்து உலவியதென்றும் அதன் பூர்வோத்தரம் தெரிந்தது. இந்நூலைப் பார்த்தவர்கள் இதன் பெருமையைக் கொண்டாடாமலிருக்கமாட்டார்கள். நம் ஸ்த்ரீ புருஷர்களது வாழ்க்கை க்ரமத்தை ஸரியாக அமைத்து ஸன்மார்க்கத்தையும் நீதியையும் உண்மையையும் தைர்யத்தையும், ஞானத்தையும் போதிக்க இதுவே தகுந்த நூலென்று யாம் தெரிவிக்கிறோம். இந்நூல் பாடசாலையில் படிக்கும் மாணவர்களுக்கும் ஒரு சிறந்த போதனா நூலாக உபயோகப்படுமென்பது நிச்சயம். இதைப் படிக்கும் யாவரும் அப்படியே உணர்வார்களென்பதற்கு ஸந்தேகமில்லை. இத்தகைய நூலை யாவரும் உபயோகித்து அதன் பயனை உணர்வார்களாயின் இதனிடத்து யாம் எடுத்துக்கொண்ட ச்ரமத்துக்குத் தக்க கைம்மாறாகும்.

இதனை வெளிக்கொணர்ந்த 'பெண்கல்வி' பத்திராதிபர் **ஸ்ரீமான்** அ. சேஷாத்ரி சர்மா அவர்களுக்கு மனதார்ந்த வந்தனமளிப்பது எமது கடமை.

எல்லாம் வல்ல ஈசனது அருள் எங்கும் நிறைந்து ஒழுகுவதாக.

**ஆநந்தாச்ரமம்**
**தன்னூர்,**
**28-2-1917.**

ம. வே. சிவஸுப்ரஹ்மண்ய அய்யர்.

# TABLE OF CONTENTS

# அட்டவணை

## முதற் காண்டம்

### மனிதனது தனிக் கடமைகள்.


| | | பக்கம். Page. |
|---|---|---|
| 1-வது அத்யாயம். | யோசனை—Consideration ... | 1—2 |
| 2-வது ,, | பணிவு—Modesty ... | 2—3 |
| 3-வது ,, | ஊக்கம் அல்லது முயற்சி—Application ... | 4—5 |
| 4-வது ,, | முன்வர முயலுதல்—Emulation | 6—7 |
| 5-வது ,, | விவேகம்—Prudence ... | 7—10 |
| 6-வது ,, | தைர்யம்—Fartitude ... | 10—12 |
| 7-வது ,, | த்ருப்தி—Contentment ... | 12—13 |
| 8-வது ,, | மிதம்—Temperance ... | 14—17 |


## இரண்டாவது காண்டம்.

### மனோவிகாரங்கள்.


| | | |
|---|---|---|
| 1-வது அத்யாயம். | நம்பிக்கையும் பயமும்—Hope and Fear ... | 18—19 |
| 2-வது ,, | ஸுகமும் துக்கமும்—Joy and grief | 19—21 |
| 3-வது ,, | கோபம—Anger ... | 22—23 |
| 4-வது ,, | இரக்கம்—Pity ... | 24—25 |
| 5-வது ,, | ஆசையும் அநுராகமும் — Desire and Love ... | 25—26 |


## மூன்றாவது காண்டம்.


| | | |
|---|---|---|
| 1-வது அத்யாயம். | ஸ்த்ரீ—Woman ... | 27—30 |


## நான்காவது காண்டம்.

### ரக்தசம்பந்தமுள்ள பந்துக்கள்.


| | | |
|---|---|---|
| 1-வது அத்யாயம். | புருஷன்—Husband ... | 31—33 |
| 2-வது ,, | பிதா—Father ... | 33—34 |
| 3-வது ,, | புத்ரன்—Son ... | 34—35 |
| 4-வது ,, | ஸஹோதரர்கள்—Brothers ... | 36 |

## ஐந்தாவது காண்டம்
### மக்களுக்கிடையூறான குணபேதங்களைப் பற்றிய தூர ஆலோசனை.


| | | |
|---|---|---|
| 1-வது அத்யாயம். | அறிவும் பேதமையும் — Wisdom and Ignorance ... | 37—39 |
| 2-வது ,, | வறுமையும் தனவந்தனும்—Rich and Poor ... | 39—42 |
| 3-வது ,, | எஜமானனும் வேலையாளனும் — Master and Servant ... | 42—43 |
| 4-வது ,, | அரசும் குடியும்—Magistrate and Subjects ... | 43—46 |


## ஆறாவது காண்டம்.
### ஜன ஸமூசக் கடமைகள்.


| | | |
|---|---|---|
| 1-வது அத்யாயம். | பரோபகாரம்—Benevolence ... | 47—48 |
| 2-வது ,, | ந்யாயம்—Justice ... | 48—50 |
| 3-வது ,, | தர்மம்—Charity ... | 50—51 |
| 4-வது ,, | நன்றிமறவாமை—Gratitude ... | 51—52 |
| 5-வது ,, | உண்மை அல்லது நேர்மை—Sincerity | 52—54 |


## ஏழாவது காண்டம்.
### மனிதப் போது.


| | | |
|---|---|---|
| 1-வது அத்யாயம். | மனிதயாக்கையும் அதன் அமைப்பும் Human Frame and structure | 55—57 |
| 2-வது ,, | இந்த்ரியங்களின் பயன்—The use of the senses ... | 57—59 |
| 3-வது ,, | ஆத்மா அதன் தோற்றமும் உணர்ச்சிகளும்—The soul its origin and affections ... | 59—64 |
| 4-வது ,, | மனித ஆயுளின் பருவங்களும் உபயோகமும்—Of the period and uses of human life ... | 64—70 |


## எட்டாவது காண்டம்.
### மனிதனது துர்ப்பலமும் அதன் விளைவும்.


| | | |
|---|---|---|
| 1-வது அத்யாயம். | டம்பம்—Vanitv ... | 71—74 |
| 2-வது ,, | கடைப்பிடியின்மை—Inconstancy | 74—78 |

3-வது அத்யாயம். துர்ப்பலம்—Weakness ... 79—83
4-வது ,, பேரறிவின்மை—On the Insufficiency of knowledge ... 83—87
5-வது ,, துன்பம்—Misery ... 87—91
6-வது ,, மதியூகம்—On judgment ... 91—95
7-வது பூர்வபோகம், முன் அபிப்ராயம்—Presumption ... 95—100

## ஒன்பதாவது காண்டம்.

### தனக்கும் பிறர்க்கும் தீங்கிழைக்கும் உணர்ச்சிகளைப்பற்றி.

1-வது அத்யாயம். பிறர்பொருள் நயத்தல்—Covetousness ... 101—104
2-வது ,, ஏராளம்—Profusion ... 104—105
3-வது ,, பழிவாங்குகை—Revenge ... 105—109
4-வது ,, கரூரமும், பகையும், பொறாமையும் Cruelty, Hatred & Envy ... 110—113
5-வது ,, மனோதுக்கம்—Heaviness of Heart 113—117

## பத்தாவது காண்டம்.

### மனிதன் தன் சூணிலைகளினின்று தன்னை உயர்த்திக் கொள்ளக் கூடுமென்பது.

1-வது அத்யாயம். ப்ரபுத்வமும் கண்யமும்—Nobility and Honour ... 118—122
2-வது ,, சாஸ்த்ரமும் படிப்பும் — Science and Learning ... 122—125

## பதினோராவது காண்டம்.

### மனிதனுக்கு நேர்வன.

1-வது அத்யாயம். வாழ்வும் தாழ்வும் — Prosperity and adversity ... 126—128
2-வது ,, வலியும் வ்யாதியும் — Pain and Sickness ... 129—130
3-வது ,, மரணம்—Death ... 130—131

## பன்னிரண்டாவது காண்டம்.

1-வது அத்யாயம். மதம்—Religion ... 132—135

# ERRATA.

## பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 1 | 9 | யோஜிக்கட்டும் | யோசிக்கட்டும் |
| .. | 11 | ,, | ,, |
| 3 | 17 | அப்படியே. | அபபடியே |
| 8 | 14 | கேட்டடுக் | கேட்டுக் |
| 12 | 2 | தனக்கு | தனக்குத் |
| 14 | 10—11 | யுனக்குமுன் | யுன்முன் |
| 15 | 15 | ஸுகம், | ஸுகம் |
| 16 | 9 | யொன்றும் | யொன்று |
| 16 | 15 | அவ்யவங்கள் | அவயவங்கள் |
| 17 | 2 | பிணைத்துவிட்ட | பிணித்துவிட்ட |
| 17 | 9 | நிர்கும்? | நிற்கும் |
| 29 | 16—17 | ஆநந்திக்கிறாள் | ஆநந்திக்கிறான் |
| 29 | 21 | அவர் | அவர்கள். |
| 34 | 20 | ஸ்ருஷ்டி | ச்ருஷ்டி |
| 35 | 2 | தெய்வபக்தி | பிதர்பக்தி |
| 48 | 10 | மனோவிசாலத்தினால் | மனோவிசாலத்தினாலும் |
| 49 | 11—12 | எண்ணத்தினால் | எண்ணத்தினாலும் |
| 63 | 16 | உணடா? | உண்டா? |
| 77 | 20 | களிகூறவும் | களிகூரவும் |
| 79 | 20 | பிறகும்கூட | பிறகுங்கூட |
| 85 | 13 | சூர்யனது | ஸூர்யனது |
| 116 | 4 | அந்தோ | அந்தோ! |
| 120 | 6 | வழிகளெண்ணாதே | வழிகளென்றெண்ணாதே. |
| 121 | 5 | அதை | அதைப் |
| 122 | 6 | தால் உன்னை | தால் அது உன்னை |
| 125 | 11 | ஸ்ருஷ்டிகளைக் | ச்ருஷ்டிகளைக். |
| 125 | 12 | இவை | இவை. |
| 128 | 18 | எப்படித் | எப்படிந் |
| 134 | 3 | எதிரொளிக்கின்றன. | எதிரொலிக்கின்றன. |
| 134 | 7 | ஸமுகத்தில் | ஸமூஹத்தில் |

# LIGHT OF WISDOM.

# ஞான தீபிகை.

## முதற் காண்டம்.

### மனிதனது தனிக்கடமைகள்.

### 1-வது அத்யாயம்.

யோசனை—CONSIDERATION.

ஒவ்வொருவனும் தன்னோடு பேசிக்கொள்ளட்டும். ஆத்மவிசாரம் செய்யட்டும். எதற்காக சிருஷ்டிக்கப்பட்டான் என்று யோஜிக்கட்டும். அவனவனுடைய சக்தி எவ்வளவென்று பரீக்ஷிக்கட்டும். அவனவனது குறைவுகளைப்பற்றியும் ஸம்பந்தங்களைப்பற்றியும் யோஜிக்கட்டும். அப்படிச் செய்வதனால் ஒருவன் தனது வாழ்நாளின் கடமைகளையுணர்ந்து அவற்றிற்கேற்ப நடந்துகொள்ளமுடியும்.

பேசப்புகும் விஷயத்தைப்பற்றி யோசித்து நிதானிக்கு முன்பு ஒருவனும் பேசப்புகவேண்டாம். அம்மாதிரியே எண்ணி ஒரு செய்கையைச் செய்யத்துணியட்டும். அப்படிச் செய்வதனாலேயே வெட்கம் அவனைவிட்டு நீங்கும்; அவனது அகத்தில் வெட்கம் ஒரு அந்யன்போலாகும். பச்சாத்தாபம் என்பது அவனுக்குண்டாகாது. துக்கம் அவனது முகத்தில் குடியிராது.

யோசனையில்லாதவன் நாவைக் காக்கமாட்டான். அவன் வாய்க்கு வந்ததைப் பேசித் தன் வார்த்தைகளால் நேரும் மூடத்தனத்துக்குள் சிக்கிக்கொள்ளுவான்.

அவசரப்பட்டு ஓடி ஒரு வேலியைத் தாண்டினவன் அவ்வேலிக்குப் பின் மறைந்திருந்த குழியில் விழுவது போல, ஒரு காரியத்தின் முடிவை ஆராயாது துணிகரமாய்ச் செய்யப்புகுந்தவன் தீமையில் விழுந்து கெடுவான்.

## 2-வது அத்யாயம்.

### பணிவு—MODESTY.

உன்னை ஞானியென்று மதிக்கிற மகனே! நீ யார்? உன் சொந்தக் கல்வியைப்பற்றிப் பெருமை பேசிக்கொள்ளும் காரணம் என்ன? அறிவாளியாயிருப்பதற்கு முதல் நெறி ஒருவன் தன்னை மூடனென்று அறிவதன்றோ? பிறருடைய நன்குமதிப்பில் நீ கருதப்படவேண்டுமானால் உன் ஞான மேம்பாட்டைப்பற்றிய உயர்வான எண்ணம் உன்னை விட்டு அகலட்டும்.

ரூப யௌவனமுள்ள ஸ்த்ரீக்கு ஸாதாரணமான உடை மிக்க அழகாயிருப்பது போல ஞானிகளுக்கு நல்லொழுக்கம் சிறந்த ஆபரணமாக விளங்குகிறது.

நிறையுள்ள மனிதன் பேசும் பேச்சு உண்மைக்கு ஒளியைக்கொடுக்கிறது; அவன் சொற்களின் பணிவு பிழைகளை மன்னிக்கிறது.

அவன் தன் ஞானத்தின் பெருமையை நம்பி நிற்பதில்லை. அவன் தன் நண்பனது புத்திமதிகளுக்குக் காது கொடுத்து அவற்றின் பயனையடைகிறான்.

அவன் பிறர் தன்னைப் புகழும்போது செவி கொடுப்பதில்லை; அப்புகழ்ச்சியை நம்புவதும் இல்லை; தன் திறமைகளைக் காண்பதில் அநுமானைப்போலக் கடைசியானவன் அவன்.

ஒரு திரையினால் அழகு அதிகப்படுவது போல அவனது தாழ்ச்சி அல்லது பணிவினால் அவனது நற்குணங்கள் அதிகமாக ப்ரகாசிக்கின்றன.

ஆனால், ஒரு டாம்பிகனைப்பார்; அகந்தையுள்ளவனைக் கவனி; அவன் செல்வத்திற் சிறந்த உடையை யுடுத்துக் கொண்டு நடுத்தெருவில் போகும் போது சுற்று முற்றும் பார்க்கிறான்; பிறர் தன்னைக் கவனிக்கிறார்களா வென்று நோக்குகிறான்.

தன் தலையை அடிக்கடி நிமிர்த்துகிறான்; ஏழைகளை அசட்டை செய்கிறான்; தன்னினுந் தாழ்ந்தவர்களை அவமரியாதையாக நடத்துகிறான்; அவனைக்காட்டிலும் பெரியவர்களும் அப்படியே. அவனுடைய கர்வத்தையும் மூடத்தனத்தையும் பார்த்து நகைக்கிறார்கள்.

அன்னவனுக்குப் பிறருடைய ந்யாய மொழிகளைக் கேட்கப் பிடிப்பதில்லை; தான்கொண்ட அபிப்ராயம் மேலென்று கருதி இடர்ப்படுகிறான்.

தன் மனோரதத்தின் டம்பத்தால் கர்வங் கொள்ளுகிறான்; தன்னைப் பற்றி நாள் முழுவதும் பேசக் கேட்பதும், பேசுவதுமே அவனுக்கு ஆநந்தம்.

தனது ஆத்ம ஸ்துதியையே எப்போதும் அவன் ஆவலாக விழுங்குகிறான்; புகழ்ஸ்துதி செய்பவன் அவனையே முடிவாகத் தின்றுவிடுகிறான்—அதாவது அவனுக்கு கேட்டைத் தருகிறான்.

## 3-வது அத்யாயம்.

### ஊக்கம் அல்லது முயற்சி—APPLICATION.

மனிதனே! சென்ற நாளொன்றும் மீளக்கிடைப்பதில்லை; இனி நின்ற நாளும் உன்னுடையவையென்று சொல்ல வாயில்லை; ஆகையால் சென்ற நாள்களுக்கிரங்காதபடியும் நின்ற நாள்களை யதிகம் நம்பியிராமலும் நிகழ் காலத்தை நன்றாய் உபயோகி.

இந்த நிமிஷம் உன்னுடையதே; மறுகணம் யாது தரும் என்று உனக்குத் தெரியாதே; ஆகையால் நீ செய்யத் தீர்மானித்ததை உடனே செய். காலையில் செய்ய நினைத்ததை மாலைவரையில் விட்டுவைக்காதே.

சோம்பல், தரித்ரத்துக்கும் துக்கத்துக்கும் தந்தை. ஆனால், ஸத்கார்ய உழைப்பு ஸுகத்தைத் தருகிறது.

முயற்சியுடையோன் கை தரித்ரத்தைப் போக்கடிக்கிறது. வாழ்வும் ஜயமும் சுறுசுறுப்புள்ளவனது துணைவர்களாம்.

பொருள் ஸம்பாதிப்பவன் யார்? வலி பெற்றவன் யார்? பெருமையும், கீர்த்தியும், பலரது புகழ்ச்சியும் அடைந்தவன் யார்? ராஜ ஸபையில் பலர் மதிக்க வீற்றிருப்பவன் யார்? தன் அகத்தினின்றும் சோம்பலை விரட்டி விட்டவனே. மடமையைத் தனக்குச் சத்துருவெனச் சாற்றினவனே.

அவன் வைகறையாமத்தில் எழுகிறான்; நேரஞ் சென்று படுக்கிறான்; தன் மனதுக்கு அடிக்கடி சிந்தனை கொடுக்கிறான்; தன் சரீரத்தை ஸதா முயக்குகிறான்; தன் மனோஸுகத்தையும் சரீரஸுகத்தையும் காப்பாற்றுகிறான்.

சோம்பேறி தனக்கே சுமையாக விருக்கிறான். அவனுக்கு நேரம் போவதில்லை; அங்குமிங்குமாக அலைந்து திரிகிறான்; என்னசெய்வதென்று தெரியாது விழிக்கிறான்.

அவனது நாள்கள் மேகத்தினது நிழல்போலத் தோன்றி மறைகின்றன. தனது ஞாபகச்சின்னத்தை அவன் தனக்குப்பின் உலகில் வைத்துப் போவதில்லை.

தேகாப்யாஸமில்லாமல் அவன் உடல் நோயடைந்திருக்கிறது. அவன் ஒரு காரியத்தைச் செய்ய எண்ணினாலும் உடலில் செயலில்லாமற் போகிறது. அவனது மனம் இருண்டு கிடக்கிறது. அவன் யோசனைகள் தெளிவிழந்துள்ளன. அவன் அறிவை யடைய விரும்புகிறான்; எனினும், அதற்கு வேண்டிய முயற்சி அவனிடத்திலில்லை. அவனுக்கு வாதாங்கொட்டையைத் தின்னஆசை; ஆனால் கொட்டையை உடைக்கும் கஷ்டத்தையவன் ஸஹிப்பதில்லை. சோம்பேறிக்கு வாழைப்பழம் தோலோடே என்றபடி.

அவனது வீடு ஒழுங்கீனமாயிருக்கிறது. அவனது வேலைக்காரர்கள் பாழ்பண்ணுவதிலும் கலகத்திலும் நாளைச் செலவிடுகிறார்கள். அவன் தன்னை நாசத்துக்குட்படுத்திக் கொள்ளுகிறான். அது அவன் கண்ணுக்கு நன்றாய்ப் படுகிறது. காதிலும் கேட்கிறது. தன் தலையை யசைத்து அதிலிருந்து தப்பித்துக்கொள்ள விரும்புகிறான். ஆனால் அந்நாசம் ஒரு சுழல்காற்றுப்போல வந்து அவனை முறித்துத் தள்ளுகிறவரையில் அதை மாற்றும் உறுதி அவனுக்கில்லை. மரணதருவாயில் அவமானமும் பச்சாத்தாபமும் அவனையுடன் கொள்ளுகின்றன.

## 4-வது அத்யாயம்.

### முன்வரமுயலுதல் அல்லது முன்வருமூக்கம்-EMULATION.

உன் ஆத்மா கௌரவம் அடைய விரும்புவாயாயின், உன் செவிகளுக்கு ஸ்துத்ய பதங்களைக் கேட்கப் பிரியமாயின், உன் சரீரத்துக்குக் கருவியாயிருந்த பௌதிக வ்யவகாரங்களை யொழித்துப் புகழுக்கு ஆதாரமான செயல்களைச் செய்யக் கருது.

அப்படிக் கருதுபவனது இரவெல்லாம் கீர்த்தியாளரது சரிதங்களைக் கவனிப்பதிலேயே கழியும். பகல் முழுவதும் அப்பெரியோர்களது செயல்களைப் பின்பற்றி ஒழுகிக் கழியும்.

பெருங்காரியங்களை எண்ணி அவற்றைச் செய்து முடிப்பதில் அவன் ஸந்தோஷமடைவான். அவன் பெயர் உலகத்தின் கோடி வரையிலும் எட்டும்.

பொறாமைக்காரனது மனது கடுக்காயும் விஷமும் போன்றதாம்; அவன் வாய் விஷத்தைக் கக்குகிறது. அயலானது வாழ்வும் வெற்றியும் அவனது சாந்தியைக் கலைக்கின்றன.

அவன் தன்னறையில் உட்கார்ந்து அழுகிறான். பிறருக்கு நேரும் இன்பம் அவனது துன்பமாகிறது. பகையும் வன்மமும் அவன் மனதில் வளர்கின்றன. அவனுக்கு ஓய்வில்லை.

அவனது மனத்தின்கண் நன்மையினிடத்து நேசம் எழுவதில்லை; அதனால் தன் அயலானையும் தன்னைப்போலவே கருதுகிறான். தன்னிலும் மேம்படுபவர்களை அவன் தாழ்த்த முயலுகிறான். அவர்களது செய்கைகளுக்குக் கெட்ட நோக்கங்களைக் கற்பிக்கிறான்.

அவன் எப்போது ஸமயம் வருமென்று ஸதா காத்திருக்கிறான்; நீங்கிழைக்க யோசிக்கிறான். ஆனால் உலக வெறுப்பு அவனைத்தொடர்கிறது; அதனால் சிலந்தி தன் கூட்டில் அழிவதுபோல அழிகிறான்.

உன் தொழிலில் முதன்மை யாயிருக்கப் பார்; எவ்வகையினதாயிருப்பினும் நன்மை செய்வதில் பிறரை முந்தவிடாதே; அதற்கென்று மற்றொருவனது தகைமையைக் கண்டு பொறாமை கொள்ளாதே; ஆனால் உன் திறமைகளை விருத்திசெய்.

உன்னோடு போட்டிபோடுபவனைத் துன்மார்க்கமான வழிகளால் கெடுக்க நினையாதே. அவனிலும் சிறந்து நின்று அவனைவிட மேலாக உன்னை உயர்த்திக்கொள்ளுக. அவ்விதமாக உனது பந்தயம் ஜயம் பெறாவிட்டாலும் கௌரவத்தையடையட்டும்.

அறநெறிப்பட்ட முயற்சியினால் ஒருவனது ஆண்மை உயருகிறது; அவன் கீர்த்தியடைய ஆசைப்படுகிறான்; ஒரு பந்தய ஓட்டம் ஓடுபவனைப்போலத் தன் காரியத்தை முடிப்பதற்குத் துடிதுடிக்கிறான். எவ்வளவு கஷ்டம் வரினும் அதனை மேற்கொண்டு உயரக் கிளம்புகிறான்.

## 5-வது அத்யாயம்.

### விவேகம்—Prudence.

விவேகத்தின் பேச்சைக்கேள். அவளது புத்திமதிகளுக்குச் செவிசாய். அவற்றை உன் கருத்திலிருத்து. அவளது கொள்கைகள் ஸர்வஜன ஸம்மதமானவை. நற்குணங்கள் யாவும் அவளைச் சார்ந்துள்ளன, மக்களது வாழ்நாளை அடக்கியாளுபவளும் நடத்துபவளும் அவளே. உன்

வாய் உனது சித்தசாந்தியைக் கெடுக்காதபடி உனது நாவுக்கு ஒரு கடிவாளம் போடுக; உன் உதட்டடியில் ஒரு காவல் வைப்பாயாக.

ஒரு அங்கஹீனனை பார்த்துப் பழிப்பவன் தனக்கும் ஒருவேளை அக்கதி வரக்கூடும் என்பதைக் கருதிப் பார்க்கட்டும். மற்றவனது தவறுகளை உல்லாஸமாக எடுத்து மொழிபவன் தன் குற்றங்களைப் பிறர் கூறும்போது அவமானத்தோடு கேட்பான்.

அதிகம் பேசுவது பின் பச்சாத்தாபத்துக்கு ஹேது வாகிறது. ஆனால் மௌனத்தில் ஒருவனுக்கு ஸர்வ ஸாதகமும் ஏற்படுகிறது.

ஒரு வாயாடி பலர் கூடின இடத்தில் இருப்பது பெருந் தொந்தரவாம். அவனது வீண்பேச்சுக்களைக் கேட்டுக் காது சலித்துப்போகிறது. அவன் சொற்களின் கூச்சல் பிறரது ஸம்பாஷணையைக் கெடுத்துவிடுகிறது.

உன்னையே புகழ்ந்து பேசாதே; அது உனக்கு ஏளனத்தைத் தரும். மற்றொருவனை இகழாதே; அது அபாயகரமானது.

மனத்தை அறுக்கும் பரிஹாஸமொழி ஸ்நேகத்தைக் கொல்லும் விஷமாம். தனது நாவையடக்காதவன் கஷ்டத்துக்குள்ளாவான்.

உனது நிலைமைக்கேற்ப உனது விடுதிவசதிகளை ஏற்படுத்திக்கொள். எனினும், உனக்குக் கிடைத்த அவ்வளவையும் செலவிட்டு விடாதே. சிறுவயதில் நீ செய்யும் சிக்கனம் வ்ருத்தாப்யத்தில் உனக்கு ஸௌகர்யத்தையளிக்கட்டும்.

பேராசை கெட்ட க்ருத்யங்களுக்குத் தந்தையாம். ஆனால் செட்டு அல்லது சிக்கனம் ஸத் க்ருத்யங்களுக்குப் போஷகனாம்.

எப்பொழுதும் ஒருவன் தன் வேலையின்பேரிலேயே கண்ணாக விருக்கட்டும். ராஜகார்யங்களை ராஜாங்கத்தார் பார்த்துக்கொள்ளும்படி விட்டு விடுவானாக.

நீ பொழுது போக்குக்காக அதிகப்பணச்செலவு செய்யாதே. அப்படிச்செய்தால், பணச்செலவைப்பற்றி நீ நினைக்கும்போது உனக்கு மனம் படீரென்கும்; அதனால் உன் உல்லாஸமான பொழுது போக்கிலுண்டான இன்பத்தை உனக்கு நேர்ந்த பணவ்ரயத் துன்பம் முற்றிலும் அழித்துவிடும்.

உன் வாழ்வு உன் உருவைத் தெரியவொட்டாதபடி உன் கண்களின் ஒளியை மறைக்காதிருக்கட்டும். அல்லது உன்னிடத்துள்ள ஏராளம் உனது செட்டைக் குறைக்காதிருக்கட்டும். தனது வாழ்நாளில் சரீரபோகங்களை அளவு கடந்து அநுபவிப்பவன் அதன் போஷணைக்கு வேண்டிய ஸாமக்ரியைகள் கூட அகப்படாமல் பிற்காலத்துத் துன்பப்படவேண்டிவரும்.

பரிசோதிப்பதற்கு முன்பு ஒருவனையும் நம்பாதே என்றாலும் காரணமில்லாமல் அவநம்பிக்கை கொள்ளாதே— அது அதர்மம்.

ஒருவனை நம்பிக்கையுள்ளவனென்று கண்டறிந்த பிறகு அவனை உன் பொக்கிஷத்தைப் பூட்டுவதுபோல் உன் மனதில் இருத்தி வைத்துக்கொள். விலைமதிக்க முடியாத மாணிக்கமாக அவனைக்கருது.

கூலி வேலைக்காரர்களது உபசாரங்களை யங்கீகரிக்காதே. துஷ்டர்களோடு ஸ்நேகம் செய்யாதே. அவை உன் நற்குணங்களை யபகரிக்கும் பொறிகளாம். உனது ஆத்மாவுக்கு அவை துக்கத்தைத் தருகின்றன.

நாளைக்கு வேண்டுமென்பதை இன்று செலவிட்டு விடாதே. உனது முன்யோசனையை உபயோகித்து பணத்தைச் சேர்த்து வைத்துக்கொள். அதனை மோசத்துறையில் செலவிட்டுவிடாதே.

பிறரது அநுபவங்களைக் கண்டு நீ யறிவையடை. முன்செல்பவன் குழியில் விழுவது பின் செல்பவனுக்குத் நிவர்த்தி பிடித்ததுபோலாகும். உன் தவறுகளை நோக்கி உன் குற்றங்களைத் திருத்திக்கொள். எனினும் உன் விவேகத்தில் துணையினால் பரிபூர்ண ஜயம் பெறலாமென்றும் எதிர்பாராதே. ஏனெனில் இரவில் நேர இருப்பது பகலில் உன் விவேகத்துக்கும் தெரியாது.

மூடன் எப்பொழுதும் துரதிர்ஷ்ட சாலியாகான். விவேகி எப்பொழுதும் ஜயசாலியாகான். எனினும் மூடன் ஒருபொழுதும் பூர்ண ஸுகாநுபவம் பெற்றதில்லை; விவேகி ஓயாக்கஷ்டத்தில் இருந்ததுமில்லை.

## 6-வது அத்யாயம்.

### தைர்யம்—FORTITUDE.

கஷ்டங்கள், துரதிர்ஷ்டங்கள், தரித்ரம், நோய், வலி என்னும் இவை மக்களாய்ப்பிறந்தவர்களோடு கூடப்பிறந்தவை. அதனால் உன் பங்கில் விழுந்த கஷ்டங்களை மனவுறுதியோடு ஏற்று மேற்கொள்ளும்படி உன் மனத்துக்கு ஆரம்பத்திலேயே தைர்யத்தையும் பொறுமையையும் ஊட்டிக்கொள்வது சிறந்ததாம்.

ஒரு ஒட்டகம், பாட்டையும், சூட்டையும், பசியையும், தாகத்தையும் வனாந்தரப் பாலைகளில் ஸகித்துச் சோர்வடையாதிருப்பதுபோல, ஒரு தைர்யசாலி கஷ்ட துன்பங்களிலும் தன் நன்னடத்தையைக் கைவிடாது தாங்கிக்கொள்ளுவான்.

ஒருவனது மேன்மைக் குணம் லக்ஷ்மியின் பகையை அருவருக்கிறது. அவனது ஆத்மாவின் உயர்வு தாழ்த்தப் படக் கூடியதல்ல.

அவனது ஸுகம் செல்வத்தைப் பொறுத்ததல்ல; ஆனால் லக்ஷ்மி அவனைச் சீறினபோதிலும் அவன் அதைப் பொருட்படுத்தமாட்டான்; கடலில் நிற்கும் கற்பாறை போல அவன் உறுதியாய் நிற்பான். உலக கல்லோலம்—அலை—அவனை அசைப்பதில்லை.

குன்றின்மேல் தோன்றும் கோபுரம்போல அவன் தன் தலையை நிமிர்த்துகிறான். அதிர்ஷ்டத்தின் அம்புகள் அவன் காலடியில் விழுகின்றன; அபாயகாலத்தில் அவனது மனோதைர்யம் அவனைக் காப்பாற்றுகிறது. அவனது மனோதிடம் முடிவு பர்யந்தம் அவனை ஆதரிக்கிறது.

அவன் ஒரு யுத்த வீரனைப்போலத் தன் ஜீவ்ய துக்கங்களை யெதிர்த்து வெற்றி பெறுகிறான். சங்கட காலங்களில் அவன் மனச்சாந்தி அவற்றின் பாரத்தைக் குறைக்கிறது; அவனது மன வுறுதி அச்சங்கடங்களை மாற்றுகிறது.

ஆனால் ஒரு பயங்காளியினது அதைர்யம் அவனை அவமானத்தினிடத்துக் காட்டிக் கொடுக்கிறது. தரித்திரத்துக் குட்பட்டு அவன் இழிவான செயல்களைச் செய்யத் துணிகிறான். நிந்தையான பழிப்புக்களை ஸஹித்துத்-

தனக்கு நிங்கைத் தேடிக்கொள்ளுகிறான். காற்றினால் நாணல் அசைவதுபோல் சிறுமையின் நிழலுங்கூட அவனை நடுங்கச் செய்கிறது. ஆபத்து நேரத்தில் அவன் மனக்கலக்க முறுகிறான். துரதிர்ஷ்டகாலத்தில் அவன் அழுகிறான். ஏக்கம் அவனை மேற்கொள்ளுகிறது.

## 7-வது அத்யாயம்.

### த்ருப்தி—CONTENTMENT.

மனிதனே! உனது மனதையறிந்து, உன் எண்ணங்களின் வெறுமையைக் கண்டு, உன்பீதுள்ள இரக்கத்தால் உனது வேண்டுகோளைக் கொடுக்காது அடிக்கடி மறுக்கிற நித்திய வஸ்துவாகிய கடவுளினது ஞானத்தினால் உனக்கு இவ்வுலக அந்தஸ்து ஏற்பட்டிருக்கிறதென்று ஸதா ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுக.

எனினும், எல்லா ந்யாயமான ஆசைகளும், எல்லா கண்ணியமான முயற்சிகளும் இயற்கையாகவே நிறைவேறும்படி அவரது அருள் அமைந்திருக்கிறது.

உனக்குண்டாகும் மனக்கவலையும், நீ துக்கிக்கும் கஷ்டங்களும் எங்கிருந்து வந்தன?—உன் மூடத்தனத்தினாலேயே, உன் அகந்தையினாலேயே, உனது பிணியுற்ற மனோராஜ்யத்தினாலேயே வந்தனவாம்.

ஆதலால், தேவ அருட்பாட்டுக்குக் குறைகூறாதே. ஆனால் உன் ஹ்ருதயத்தைத் திருத்திக்கொள்; "எனக்குப் பணமும், செல்வாக்கும், ஸாவகாசமுமிருந்தால் நான் ஸுகமாயிருப்பேன்." என்று உனக்குள் சொல்லிக்கொள்ளாதே. அவை யாவுமுள்ளவர்களுக்கு அவை விசேஷ கஷ்டங்களையே தருகின்றன வென்பதைத் தெரிந்துகொள்.

ஏழைக்குப் பணக்காரனது மனோதுக்கத்தையும் கவலையையும் அறிய இடமில்லை. அவன் செல்வாக்குள்ளவர்களின் கஷ்டங்களையும, மனக்குழப்பங்களையும் உணர்வது முடியாது. ஸாவகாசம் ஸஹிக்க முடியாததாயிருப்பதையவன் தெரிந்து கொள்ளமாட்டான். அதனாலேயே அவன் தன் நிலைமையை நினைத்து நொந்துகொள்ளுகிறான்.

ஒருவனது ஸந்தோஷகரமான வெளித் தோற்றத்தைப் பார்த்துப் பொறாமை கொள்ளாதே. ஏனெனில் அவனது அந்தரங்க துக்கம் உனக்குத் தெரியாது.

கிடைத்த கொஞ்சத்தில் திருப்தியடைவது தான் மேலான ஞானமாம். தன் செல்வத்தை வ்ருத்தி பண்ணிக்கொள்ளுகிறவன் தனது ஆபத்துக்களையும் வ்ருத்தி பண்ணிக்கொள்ளுகிறான். ஆனால் திருப்தியடைந்த மனது ஒரு புதையல்போன்றது; ஒருவனைக் கஷ்டத்தினின்று நிவர்த்திசெய்கிறது. எனினும், உனக்குக் கிடைத்த செல்வத்தின் இச்சகங்களுக்குச் செவி சாய்த்து உனது நீதியையும், மிதத்தையும் தர்மசிந்தையையும் பணிவையும் போக்கடித்துக்கொள்ளாமலிருந்தால், செல்வங்கூட உன் ஸந்தோஷத்தைக் கெடுக்காது.

ஆனால் கலப்பில்லாது சுத்தமான செல்வ வின்பமாகிய மதுபானமானது, ஸாதாரண ஜாக்கத்திலாழ்ந்த மனிதனுக்கேற்பட்ட பானமல்ல வென்பதை இதனால் அறியவும்.

கடவுள் மனிதனுடைய தேக யாத்திரைக் கென்று அமைத்தது நன்னடக்கையாம். அவ்யாத்திரையின் முடிவு நித்தியாநந்தமாம். ஒருவன் மரணமடைந்து நித்தியவுலகத்தின் க்ரீடம் பெறும் வரையில் எவனுக்கும் அது கிட்டுவதில்லை.

## 8-வது அத்யாயம்.

### மிதம்—TEMPERANCE.

மனிதன் இம்மையில் அநுபவிக்கும் மோக்ஷமாவது கடவுளால் கொடுக்கப்படும் நோயற்றவாழ்வும், ஞானமும், மனச்சாந்தியுமேயாம். இவ்வரங்களை நீ பெற்று வ்ருத்தாப்யம் வரையில் அவற்றைக் காப்பாற்ற விரும்பினால் காமாதுர இச்சைகளைத் தவிர்த்து அவற்றின் மோசங்களுக்குட்படாதிருப்பாயாக.

அவ்விச்சைகள் தனது ருசியான பதார்த்தங்களை யுனக்கு முன் வைக்கும்போதும், அவைகளின் மது உன்னெதிரில் துளிக்கும்போதும், உனக்கு உத்ஸாகமூட்டும்போதும், விஷயாநந்தத்தில் மூழ்கி யுன்னிச்சையாய் ஸுகித்திருக்கச் சொல்லும்போதும், உனது பகுத்தறிவு அல்லது விவேகம் உன்பக்கத்தில் உறுதியாய் நின்று உன்னைக் காக்கட்டும்.

உன் சத்ருவினது வார்த்தைகளைக் கேட்பாயானால் நீ மோசம்போய்க் காட்டிக்கொடுக்கப்படுவாய். காமாதுர விச்சைகள் தரும் கனி, ஒருவனைப் பைத்தியம் பிடித்தவனுக்குகிறது. அவைகளின் ஸுகாநுபவங்கள் நோய்க்கும் மரணத்துக்கும் ஹேதுவாகின்றன.

அவ்விச்சைகளினது கருவிகளைச் சுற்றிப்பார். அக்கருவிகளைக் கைபாடினவர்களையும் கவனி. ஆசையால் மோசம்போய்ப் பரிதபிக்கிறவர்களின் கதியையும் நிதானி. ஆசைவசப்பட்டவர்கள் இளைத்து நொந்தில்லையா? வ்யாதிஸ்தர்களாயில்லையா? ஆவி சோர்ந்தில்லையா? அவர்கள் சற்று நேரம் களித்துக் கூத்தாடின பின்பு பெறுவது நீண்டகாலத்துக்கமும் மனச்சோர்வுமே. அவ்வாசை யநுபவம் அவர்களது ருசிகளைக் கெடுத்துப்பதனழித்து விட்டது. அவர்

களுக்கு அவ்விஷயங்களின் ருசியைக் கூர்ந்தறியும் தன்மை போய்விட்டது. அவ்வாசைக்குத் தொண்டுசெய்து நின்றவ ரெல்லாரும் அதனாலேயே அழிந்தவர்களானார்கள். அது வும் தமக்குக் கொடுத்தவரங்களை துர்விநியோகப்படுத்து பவர்களுக்கென்று கடவுளால் அமைக்கப்பட்ட ந்யாயமான தண்டனையேயாம்.

ஆனால், கம்பீரமான நடையோடும், உத்ஸாஹமான தோற்றத்தோடும் அதோ காணப்படும் மாது யார்? அவளது முகம் தளதளவென்று ப்ரகாசிக்கிறது. அவளது அதரங் களிலிருந்து தேன் துளிக்கிறது. நிஷ்களங்கமும் நாணமும் கலந்த ஸந்தோஷம் அவள் கண்களில் விளங்குகின்றனவே! அவள் தனது ஸந்தோஷ உல்லாஸத்தால் நடக்கும்போதே பாடுகிறதாகத் தெரிகிறதே!

அவள் பெயர் ஸுகம், அல்லது நோயின்மை என்ப தாம். தேஹாப்யாஸத்துக்கும் மிதத்துக்கும் பிறந்த குழந் தையவள். அவளது மக்கள் தான், நித்தியாநந்தமலையில் வசிப் பவர்கள். அவர்களுக்குத் துணிவு, சுறுசுறுப்பு, உத்ஸாஹம், அழகு, நற்குணம் முதலியயாவும் உண்டு. அவர்களது நரம்பு களில் வீர்யம் ஓடுகிறது. அவர்களது எலும்பில் ஸத்வம் உண்டு. அவர்களுக்கு நாள்முழுவதும் உழைத்து வேலை செய்வதிலேயே ஆநந்தம்.

தங்களது தந்தையின் தொழிலைச்செய்வதில் அவர் களுக்கு உத்ஸாஹம். தங்கள் தாயளிக்கும் கூழ் அவர் களுக்கு அமிர்தம். ஆசைகளோடு போராடி ஜயிப்பதே அவர்களுக்கு ஆநந்தம். கெட்டபழக்கங்களை மாற்றுவதே அவர்களது கீர்த்தி. அவர்களது உலகவின்பங்கள் மிதமான வை. அதனால் அவர்களுக்குப் பொறுமையுண்டு. அவர்

களது இளைப்பாறுதல் அதிககாலம் நீடித்திராவிட்டாலும் நிம்மதியான தாயும் கலக்கமற்றதாயுமிருக்கும். அவர்களது ரக்தம் சுத்தமாயிருக்கிறது. அவர்களுடைய மனம் சஞ்சலமற்றிருக்கிறது. வைத்தியனுக்கு அவர்களுடைய வீட்டுக்குப்போகும் வழிகூடத் தெரியாது.

ஆனால், மனிதர்களுக்கு எப்போதும் க்ஷேமம் என்பதில்லை. அவர்களைக் கெடுக்கப் புறப்பகை யொன்று ஸமயம் பார்க்கும்போது அகப்பகை யொன்றும் அவர்களைக் காட்டிக்கொடுக்க ஒளிந்து நிற்கிறது. தேகஸௌகம், பலம், அழகு, சுறுசுறுப்பு, முதலியவை அவர்களது தூர்த்த ஹிருதயத்தில் ஆசையை மூட்டுகின்றன. மோகம் என்னும் மாது அவர்களது பந்தலில் நின்று அவர்களது நன்குமதிப்பை யாசித்துத் தன் மோக வலைகளை அவர்கள் எதிரில் பரப்புகிறாள்.

அவளது அவயவங்கள் மிருதுவாயிருக்கின்றன; அவளது தோற்றம் மேன்மையாயிருக்கிறது. அவளது உடை தளர்ச்சியாயிருக்கிறது. அவளது மதம் கண்களில் தொனிக்கின்றது. அவளது மனத்தில் மோகம் குடியிருக்கிறது. அவள் மனிதர்களைத் தன் விரல்களால் ஜாடை காட்டியழைக்கிறாள்; தன் பார்வைகளால் அவர்களை வச்யஞ்செய்கிறாள். தனது மிருது பாஷையால் ஏமாற்றப்பார்க்கிறாள்.

அந்தோ! அவளது மயக்கத்தினின்றும் ஓடிப்போவாயாக! அவளது வசீகரமொழிகளுக்குக் காது கொடுக்காதிருப்பாயாக! அவளது பார்வையின் ஆசையை நீ யளக்கப் புகுந்தாலும், அவளது மெல்லிய குரலோசையைக்கேட்டு மயங்கினாலும், உன்னைச்சுற்றி அவள் தன் கையைப்போட்டு அணைத்துக்கொண்டாலும், அவள் என்றுந்தெறிக்கமுடியாத சங்கிலியால் உன்னைப் பிணைத்துவிட்டாள் என்றறி.

சங்கிலியால் உன்னைப் பிணைத்துவிட்டபிறகு அவமானம் உடனே உன்னைப்பின் தொடர்கிறது. அதன்பின் வ்யாதியும், தரித்ரமும், கவலையும், பச்சாத்தாபமும் ஒன்றன்பின் ஒன்றாய் வருகின்றன. நீ ஸரஸ விளையாட்டினால் மெலிந்து, விஷயாநுபவங்களால் தடித்து, மந்தபுத்தியினால் மெதுவாகி, அயர்ந்து நிற்கும்போது, பலம் உன் அவயவங்களைவிட்டு நீங்கிவிடும்; ஸுகம் உன் சரீரத்தை யகன்றுவிடும்; உன் வாழ்நாள் குறையும்; உள்ளநாளும் பெருமையற்று நிற்கும்? உன் துக்கங்கள் பலவகைப்பட்டு நிற்கும்; எனினும், உன்னோடு பச்சாத்தாபப்படுபவர்கள் ஒருவருமிரார்.

# இரண்டாவது காண்டம்.

---

## மனோவிகாரங்கள்.

### 1-வது அத்யாயம்.

### நம்பிக்கையும் பயமும்—HOPE AND FEAR.

நம்பிக்கை தரும் வாக்குத்தத்தங்கள் ரோஜா மொட்டுக் களைவிட ருசியாயிருக்கின்றன. ஆனால், பயத்தின் அச்சுறுத் தல்கள் மனத்துக்கு நடுக்கத்தைத் தருகின்றன. என்றாலும் ஆசை உன்னை மயக்காதிருக்கட்டும்; பயமும் ந்யாயமான கார் யங்களைச் செய்வதைத் தடுக்காதிருக்கட்டும். அப்படிச் செய் வதனால் எந்தவிஷயத்தையும் விருப்பு வெறுப்பு அற்ற மனத் தோடு முன்னிடத் தயாராவாய்.

மரண பயம் நல்லவர்களுக்கில்லை. தீமைசெய்யா தொழு குக; உன் ஆத்மா பயப்படுவதற் கொன்றுமில்லை. நீ யெடுத்த கார்யத்தை முடிக்கக்கூடும் என்ற நிச்சயம் உன் முயற்சிகளி லிருக்கட்டும். கார்ய முயற்சியில் அவநம்பிக்கை யேற்பட்டால் நீ ஜயம்பெறமாட்டாய். உன் ஆத்மாவை வீணான ஸந்தே ஹங்களால் பயமுறுத்திக்கொள்ளாதே. வீண் மனோராஜ்யங் களுக் கிடங்கொடுத்து உன்மனம் அழுங்காமலிருக்கட்டும்.

பயத்திலிருந்து துரதிர்ஷ்டம் ஏற்படுகிறது; ஆனால் நம்பிக்கை யுள்ளவன் தனக்கு உதவிசெய்துகொள்ளுகிறான். துரத்தப்பட்ட தீக்குருவி தன் தலையைமாத்ரம் மறைத்துக் கொண்டு உடலை மறந்துவிடுவதுபோல, ஒரு பயங்காளியினது

பயம் அவனை ஆபத்துக்குள்ளாக்குகிறது. ஒரு காரியம் முடியாததென்று நீ நம்பினால், உன் அவநம்பிக்கை அப்படியே அதைச் செய்துவிடும். ஆனால், ஓயாமல் உழைப்பவன் எல்லாக்கஷ்டங்களையும் மேற்கொண்டு விடுவான்.

வீணான நம்பிக்கை ஒரு மூடனது மனத்தை முகஸ்துதியால் நிறைக்கிறது. ஆனால், ஞானவான் அதைப் பின்பற்றிச் செல்வதில்லை. உனது ஆசைகளிலெல்லாம் பகுத்தறிவு உனக்கு முன் செல்லட்டும்; நடவாத காரியங்களில் நம்பிக்கை வைக்காதே. அப்பொழுதுதான் உன் முயற்சி பலிதப்படும். இல்லாவிடில் உன் மனம் கிடைக்காதவற்றை எண்ணித் துக்கிக்க நேரிடும். கிட்டாதாயின் வெட்டென மற.

## 2-வது அத்யாயம்.

### ஸுகமும் துக்கமும்—JOY AND GRIEF.

உனது ஆநந்தம் உன் மனதுக்கு உன்மத்தத்தைத் தரும்படி அவ்வளவு தூர்த்தனாயிராதே; உன் துக்கமும் உன் மனத்தைச் சோர்வு படுத்தும்படி அவ்வளவு அதிகமாயிருக்க வேண்டாம். மிதமிஞ்சின துக்கத்தில் நீ ஆழும்படியாவது அல்லது அளவுகடந்த ஆனந்தத்தில் நீ மூழ்கும்படியாவது இவ்வுலகம் உனக்கு அவ்வளவு பெரிய துக்க ஸம்பவங்களையும் ஐஹிக ஸுகங்களையும் தருவதில்லை.

அதோ பார்! ஆநந்த மயம் என்ற க்ருஹம் தோன்றுகிறது. அதற்கு வெளிப் பூச்சுப் பூசியிருக்கிறது; அது உல்லாஸகரமாய்த் தெரிகிறது. அதிலிருந்து வருகிற உத்ஸாஹக் கூத்தாட்டங்களால் அதன் தன்மையை நீ அறியலாம். அவ்வீட்டெஜமானி வாசற்படியில் நிற்கிறாள். வழியிற் போகிற

வர்களை உரத்து அழைக்கிறாள். பின்னும் அவள் பாடுகிறாள்; கூச்சலிடுகிறாள்; ஓயாமற் சிரிக்கிறாள்.

வாழ்நாளின் ஸுகங்களை யநுபவிக்க ஜனங்களைக் கூப்பிடுகிறாள். தன் க்ருஹத்துத் தவிர வேறெங்கும் அவ்வகைய இன்பமில்லையென்று அவர்களுக்குச் சொல்லுகிறாள். ஆனால் அவ்வீட்டு வாசற்படிக்குள் நுழையாதே. அவள் வீட்டுக்குப் போகிறவர்களோடும் சேராதே. அவர்கள் களிப்பின் மக்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.—அவர்கள் சிரித்து ஸந்தோஷப் பட்டவர்களைப்போலக் காண்கிறார்கள். ஆனால், அவர்கள் செய்கைகள் ஒவ்வொன்றிலும் பைத்யமும் மதியீனமுங் கலந்திருக்கின்றன.

அவர்கள் தீமையோடு கைகலந்து நடக்கிறார்கள்; அவர்களது வழிகள் கேட்டினிடத்துக்கொண்டுபோய் விடுகின்றன. அவர்களைச் சூழ ஆபத்துக்கள் பரப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. நாசம் என்ற படுகுழி அவர்களது காலடியில் தன் வாயைத் திறக்கிறது. மற்றொரு பக்கத்தில் பார்; மரநிழலடர்ந்த பள்ளத்தாக்கில் மனிதர் கண்ணுக்குத் தெரியாமல் துக்கம் என்னும் ஸ்த்ரீயின் வீடு தெரிகிறது.

அவள் நெஞ்சம் பெருமூச்சு விடுகிறது. அவள் அழுகிறாள். அவளுக்கு மானிட துக்கங்களைப்பற்றிப் பேசுவதில் தான் ஸந்தோஷம். உலகில் நேரும் தினஸரி ஸம்பவங்களைக் கருதி அவள் அழுகிறாள். மனிதனுடைய தளர்ச்சியையும், தீமையையும் பற்றியே அவள் அடிக்கடி பேசுகிறாள்.

இயற்கையில் தீமையே நிறைந்திருப்பதாக அவள் கண்ணுக்குப் படுகிறது. அவள் பார்க்கும் ஒவ்வொரு வஸ்துவும் அவளது மனத்தில் தோன்றும் அந்தகாரத்தினால்

நிறைந்திருப்பதாகவே தோன்றுகிறது. குறை கூறுவோரது சத்தம் இரவும்பகலும் அவளது வீட்டில் நிறைந்திருக்கிறது.

அவளது அறையண்டை போகாதே. அவளது ச்வாஸம் ஒட்டுவாரொட்டி போன்றது. அவள் பலன்களைக் கெடுத்து விடுவாள். உலகவாழ்வு என்ற தோட்டத்தை யலங்கரித்து மணத்தை வீசும் புஷ்பங்களைக் கரித்துவிடுவாள்.

ஆநந்தத்தின் வீட்டுக்குப் போவதில்லை யென்ற நீ ஒருக்கால் இத்துக்கத்தின் மனையைத் தப்பித்தவறி யெட்டிப் பார்த்துவிடாதே. ஆனால், அதிஜாக்ரதையோடு நட. அப்படி நடப்பது மெதுவான ஏற்றமாயிருப்பதோடு உன்னை த்ருப்தி என்பவள் வஸிக்கும் பூங்காவனத்திற் கொண்டுபோய்விடும்.

அந்த த்ருப்தி என்னும் மாதோடு, ஸமாதானம், ஜாக்ரதை, சாந்தம் என்ற தோழிகளுங் கூட வஸிக்கிறார்கள். அவள் ஸந்தோஷத்தோடிருக்கிறாள்; ஆனால், அவள் ஒருபோதும் உல்லாஸமாயிருப்பதில்லை, பயபக்தியுடனிருக்கிறாள்; என்றும் விசாரப்படுவதில்லை. வாழ்நாளின் ஸுகதுக்கங்களை நிதானமாயும் மனத்தெளிவோடும் பார்க்கிறாள்.

உல்லாஸத்தால் தூண்டப்பட்டுக் குஷாலையும் கூத்தாட்டங்களையும் தோழர்களாகக்கொண்டு மதியீனத்திலும் துன்பத்திலும் ஆழ்கிறவர்களையும், அஞ்ஞானத்தாலும் துக்கத்தாலும் பீடிக்கப்பட்டு மனிதனது ஜீவ்ய துக்கங்களையும் விபத்துக்களையும் பற்றிக் குறைகூறி நாள்களைக் கழிப்பவர்களையும, நீ மனத்தெளிவோடு பார்த்தால் மலையுச்சியினின்று பார்ப்பதுபோலப் பார்க்கலாம்.

அவ்விருதிறத்தார்களையும் பார்க்கும்போது உனக்கு இரக்கமுண்டாகும். நீ காணும் அவர்களின் நடைப்பிசகுகள் உன்னைத்தவறி விழாதபடி காக்கும்.

## 3-வது அத்யாயம்.

### கோபம்—ANGER.

வேகமாயடிக்கும் சுழல்காற்று மரங்களை முறித்து இயற்கையின் அழகைக் கெடுப்பதுபோலவும், பூகம்பம் அசைந்து நகரங்களைக் குப்புறக் கவிழ்ப்பதுபோலவும் ஒருவனது கொடிய கோபம் அவனைச்சுற்றிலும் பாதகத்தை வாரித் தெளிக்கிறது. அபாயமும் அழிவும் அக்கோபியினருகில்வந்து நிற்கின்றன. ஆனால், யோசனைசெய்; உனது குறைவுகளை நீ மறந்துவிடாதே; அப்படி யிருந்தால் மற்றவர்களது தவறுகளை நீ மன்னிப்பாய். கோபத்துக்கு அடிக்கடியிடங்கொடுக்காதே. அது உன் மார்பிற் குத்திக்கொள்ளுவதற்காகவாவது அல்லது உன் ஸ்நேஹிதனைக் கொல்லவாவது கத்தி தீட்டுவது போலாகும்.

சொற்ப கோபங்களையெல்லாம் நீ பொறுத்துக் கொள்ளுவாயானால் உன்னைப் பலரும் ஞானி யென்பார்கள். பிறர் உனக்குக் கோபமூட்டின விஷயத்தை நீ முற்றிலும் மறந்துவிடுவாயானால் உன் மனத்துக்கு அமைதி ஏற்படும். அப்பொழுது உன் மனம் உன்னைத் தூஷிக்காது.

கோபங்கொண்டவனுக்கு அறிவு போய்விடுமென்று உனக்குத் தெரியவில்லையா? உன்னறிவு தவறாதிருக்கும் போதே மற்றவனது கோபாவேசப் பைத்யம் உனக்கு நல்ல படிப்பினையைப் போதிக்கட்டும். நீ கோபமாயிருக்கும்போது எதையும் செய்யாதே.. புயலடிக்கும்போது கடலில் கப்பலையோட்டிக்கொண்டு போவானேன்?

கோபம் வந்தபிறகு தடுப்பது அஸாத்யமாயிருந்தால் அதை வருவதற்குமுன் காப்பதுதான் அறிவு படைத்ததற்

கடையாளமாம். கோபம் ஏற்படக்கூடிய ஸமயங்களை யெல்லாம் விலக்கு, அல்லது அவை நேரும்பொழுதெல்லாம் உன்னைக் காத்துக்கொள்.

துடுக்குப்பேச்சுப் பேசுவதால் முட்டாளுக்கு உடனே கோபம் வருகிறது. ஆனால், ஒரு அறிவாளி அவற்றைப் பார்த்து வெறுப்போடு நகைக்கிறான். உன் ஹ்ருதயத்தில் வன்மத்தைக் குடி வைத்துக்கொள்ளாதே. அது உன் மனத்தின்கண் வேதனைசெய்து அதன் நல்ல இச்சைகளை ஒழுங்கீனப் படுத்திவிடும்.

ஒரு தீமைக்குப் பதில் தீமை செய்ய நினைப்பதைக்காட்டிலும் அத்தீமையை மன்னிப்பதற்கே அதிகம் தயாராயிரு. பழிக்குப்பழி வாங்க நினைக்க ஸமயம் பார்ப்பவன் தன் கேட்டுக்காகவே தான் காத்திருந்து தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொள்ளுகிறான்.

கோபங்கொண்டவனோடு ஸாவதானமாகப் பேசுவது, நெருப்பில் கொட்டின நீரைப்போல அவனது மனத்தில் எழுந்த கோபத்தைத் தணிக்கிறது. அதனால், அவன் சத்துருவாகாதபடி உன் ஸ்நேஹிதனாவான். எவ்வளவு வஸ்துக்கள் கோபத்துக்குப் பாத்ரமானவை யென்று நீ யோசித்துப் பார். மூடர்களைத்தவிர வேறெதுவும் அதற்குப் பாத்ரமில்லை யென்ற ஓர் ஆச்சர்யம் உனக்கு அப்பொழுதுதோன்றும்.

கோபம் மூடத்தனத்தினாலாவது செயலின்மையினாலாவது உண்டாகிறது. ஆனால், அது ஒருபொழுதும் பச்சாத்தாபத்தில் அல்லாமல் முடிவதில்லையென்று நிச்சயமாய்த் தெரிந்துகொண்டு ஞாபகத்தில் வை. மூடத்தனத்தின் காலடியை லஜ்ஜை பின்பற்றுகிறது. கோபத்தின் பின்பு பச்சாத்தாபம் செல்கிறது.

## 4-வது அத்யாயம்.

### இரக்கம்—PITY.

வஸந்தகாலத்தில் தளிர்களும் பூக்களும் ஏராளமாய்த் தோன்றுவதுபோலவும், கோடைகாலமானது அறுக்கக்கூடிய பலன்களைப் பக்குவப்படுத்திவைப்பதுபோலவும், இரக்கத்தினது புன்சிரிப்புகள், துர்ப்பாக்யத்தின் குழந்தைகளுக்கு ஆசீர்வாதத்தைத் தருகின்றன.

மற்றொருவனைப் பார்த்து இரக்கப்படுபவன் பலரது நன்குமதிப்பைப் பெறுகிறான். ஆனால், இரக்கமில்லாதவனைக் கண்டு ஒருவரும் இரங்குவதில்லை. ஆட்டைக் கொல்லும்போது கசாப்புக்காரன் மனமிரங்குவதில்லை. துஷ்டர்களது ஹ்ருதயமும் துக்கப்படுபவர்களைப் பார்த்துப் பரிதாபப்படுவதில்லை. ஆனால், இரக்கப்படுபவர்களது கண்ணீரானது ரோஜாப்புஷ்பங்களிலிருந்து பனிநீர் பூமியில் விழுவதைக்காட்டிலும் இனிமையாயிருக்கிறது.

ஏழைகளது பரிதாபமான கூச்சல் உன்காதில் விழாதபடி காதை யடைத்துக்கொள்ளாதே. ஒருபாவமும் அறியாதவர்களது துன்பங்களைக் காணும்போது உன்மனதைக் கல்லாக்கிக்கொள்ளாதே.

அநாதைகள் உன்னை அழைக்கும்போதும், விதவையினது மனது துக்கிக்கும்போதும், அவள் கண்ணீர்விட்டுக்கொண்டு உன் உதவியைத் தேடும்போதும் அவளது துன்பங்களைக் கண்டு பச்சாத்தாபப்படு. திக்கற்றவர்களுக்கு உதவிபுரி. வீடுவாசலில்லாமல் குளிரில் நடுக்கிக்கொண்டுதிரியும் கந்தைத் துணிகட்டின பிச்சைக்காரனைக் கண்டால் உன் உதாரத்துவம்

உன் மனதைத் திறக்கட்டும். உன் ஆத்மா நெடுங்கால மிருக்கும்படி உன் தர்மம் அவனை மரணத்திலிருந்து காக்கட்டும்.

ஏழை வ்யாதியாய்ப் படுக்கையில் அழுதுகொண்டிருக்கும்போதும், அதிர்ஷ்டஹீனர்கள் இருட்டறைகளில் ஏங்கிக்கொண்டு வருந்தும்போதும், வயதாகித் தள்ளாடும் நரைத்த கிழவன் உனது தர்மத்தை யெதிர்பார்த்து உன்னைப்பார்க்கும் போதும், அவர்களது இல்லாமையைக் கவனிக்காமலும், அவர்களது துக்கங்களைக் கருதாமலும் நீ எப்படி அளவுகடந்த ஸல்லாபங்களில் மூழ்கி அநுபவித்துக்கொண்டிருக்கக்கூடும்?

## 5-வது அத்யாயம்.

### ஆசையும் அநுராகமும்—DESIRE AND LOVE.

காளைப்பருவத்து வலிமையுடையவனே! கெட்ட தன்மையினது வலையில் சிக்கிக்கொள்ளாதே. ஆசைகாட்டும் வேசையினது மோசங்களுக்குள் அகப்படாதே.

ஆசைப் பயித்யமானது கார்யங்களையே கெடுத்துவிடும். ஆசையினது ஆவேச மிகுதியால் நீ கண்கெட்டுக் குழியில் விழுந்தழிவாய். அதனால், அதன் மோசங்களில் அகப்பட்டுக்கொள்ளாதே. அவ்வாசையின் வசீகர ப்ரேமைகளுக்கு உன் ஆத்மாவை யடிமையாக்கிவிடாதே.

இன்பமாகிய நீரையுதவும் தேஹத்ருடம் என்னும் ஊற்று, ஆசையினால் சீக்ரம் வறண்டுபோய், உன்னுடைய ஸுகாநுபவதாரைகள் எல்லாவற்றையும் வற்றச்செய்யும். உன் யௌவன காலத்திலேயே உனக்கு வ்ருத்தாப்யம் வந்துவிடும். உன் தேஹபலம் உனக்கு வயது வ்ருவதற்குமுன்னரே யழிந்து போக, நீ சரீரஸுகங்களை யநுபவிக்க முடியாது வருந்துவாய்.

ஆனால், கற்பும் மடமும் ஒரு ஸ்த்ரீயினிடத்தில் இருக்கும்போது அவளது காந்தி ஆகாயத்தில்தோன்றும் நட்சத்ரங்களைக்காட்டிலும் அதிகமாக ப்ரகாசிக்கும். அவளுடைய செல்வாக்கைத் தடுக்க ஒருவராலும் இயலாது.

அவளுடைய மனத்தூய்மை தும்பைப் பூவினும் வெளுப்பாயிருக்கும். அவளது புன்னகை ஒரு தோட்டம் ரோஜாப் பூவைக்காட்டிலும் இனிமையாயிருக்கும். அவளது களங்கமற்ற நோக்கம் பேதையான ஒரு மான்நோக்கத்தை ஒத்திருக்கும். கபடமின்மையும் உண்மையும் அவள் மனத்திற் குடியிருக்கின்றன. அவளது வாய்முத்தம் தேனைக்காட்டிலும் இனியது. அவள் உதடு ஆம்பல் நாறும்.

அநுராகத்தின் மேன்மையான உணர்ச்சிகளை உன் மனத்தினின்றும் ஓட்டாதே. அவற்றின் பரிசுத்தமான ஜ்வலனம் உன் ஹ்ருதயத்தைப் பெருமைப்படுத்தி நல்லபிப்ராயங்களை யடையும்படியான மெல்லிய தன்மையை அதற்குண்டாக்கும்.

# மூன்றாவது காண்டம்.

## 1-வது அத்யாயம்.

### ஸ்த்ரீ—WOMAN.

அநுராகபுத்ரியே! விவேகத்தினது மொழிகளுக்குச் செவிகொடு. உண்மையினது சட்டுரைகள் உன் மனத்தில் ஆழப் பதியட்டும். அதனால் உன் மனத்தின் ஸௌந்தர்யம் உனது உருவத்துக்குத் தேஜஸை யளிக்கட்டும். உன் அழகு தன்னை ஒத்திருக்கும் ரோஜாமலரைப்போல, வாடினபோதும் இனிமை பொருந்தியிருக்கட்டும்.

உன் யௌவனமாகிய வஸந்தகாலத்தில், அதாவது, உன் மங்கைப்பருவத்தில், மனிதர்களது கண் உன்னைக் களிப்போடு பார்க்கும்போது, அவர்களது ருசிகாட்டு மொழிகளை எச்சரிக்கையோடு கேள். உனது ஹ்ருதயத்தை நன்றாய்ப் பாதுகாத்துக்கொள். அவர்களது ஏமாற்று மொழிகளுக்குக் காது கொடுக்காதே.

மனிதனுடைய ந்யாயமான தோழியாயிருக்க நீ ஏற்பட்டாயே யொழிய அவனது காமவிகாரங்களுக்கு அடிமையாக நீ ச்ருஷ்டிக்கப்படவில்லை. மனிதனது உலக ச்ரமங்களில் அவனுக்கு உதவி புரியவும், உனது லளிதமான மொழிகளாலும் செய்கைகளாலும் அவனது கலக்கங்களை யாற்றவும், உனது அருமையான பாராட்டுக்களால் அவனது கவலையை மாற்றவுமே, உன்னைக்கடவுள் ச்ருஷ்டித்ததின் நோக்கமென்றறிக.

மனிதனது மனத்தைக் கவர்ந்து அவனை ந்யாயமான அன்புக்குள்ளாக்கி அவன் மனத்தில் அரசாளும் பெண் யார்? அதோ'பார்! அவளே தன் மனத்தில் நிஷ்களங்கத்தோடும் தன் முகத்தில் நாணத்தோடும் கற்பமைந்த கன்னிகையாய் அங்கு செல்பவளாம். அவளது கைகள் தொழில் செய்யத் தேடுகின்றன. அவளது பாதம் வீணுய்த் திரியவிரும்புவ தில்லை.

அவள் சுத்தமாய் உடுத்துக்கொண்டிருக்கிறுள்; மித மான ஆஹாரத்தை யுண்கிறுள். தாழ்வும் ஸாதுத்தன்மையும் அவளது சிரஸில் க்ரீடமணிகள் போலுள்ளன. அவளது கண் டத்தில் வீணுகானம் அமைந்திருக்கிறது. தேனின் இனிப்பு அவள் அதரத்தினின்றும் ஒழுகுகிறது.

அவள் வார்த்தைகளில் எல்லாம் மர்யாதை அல்லது ஒழுக்கம் நிற்கிறது. அவளது பதிலில் அமைதியும் உண்மை யும் குடியிருக்கின்றன. வணக்கமும், தாழ்வும், அவளது நடையின் படிப்பினைகளாம்; ஸமாதானமும், ஸுகமும் அவ ளுக்குக் கிடைக்கும் வெகுமதிகளாம்.

அவளுக்கு முன் விவேகம் நடக்கிறது. நன்னடத்தை அவளது வலது கைப்பக்கத்தில் செல்லுகிறது. அவள் கண் கள் ம்ருதுவையும் அநுராகத்தையும் காட்டுகின்றன. ஆனுல், விவேகம், அவளது புருவங்களில் தன் செங்கோலோடு வீற் றிருக்கிறது.

விடர்களது நாக்கு அவள் முன்னிலையில் அடங்கிப்போ கிறது. அவள் சீலத்தின் அச்சம் அவர்களை மௌனிகளாக்கு கிறது. ஊரில் உண்டான அபவாதத்தினுல் அயலவளது பேர் ஒவ்வொருவருடைய நாக்கிலும் அடிபடும்போது, தர்மமும்,

நற்குணமும் கற்புடையவளது வாயைத் திறப்பியாதிருக்க, மௌனம் அவள் வாயைப் பூட்டிவைக்கிறது. அவள் நெஞ்சம் நன்மைக் கிருப்பிடமாம் ; அதனால் அவள் பிறரிடத்துத் தீங்குகளிருப்பதாக ஸந்தேஹிப்பதில்லை.

அவள் தன் வீட்டில் அமுல் செலுத்துகிறாள். அவ்வீடு சாந்தி மந்திரமாகிறது. அவள் நீதியாக அரசாட்சி செய்யும்போது எல்லாரும் அவளுக்குப் பணிந்து நடக்கிறார்கள். அதிகாலையிலெழுந்து தன் வேலையைச் செய்யப்புகுவதுடன் மற்றவர்களுக்கும் அவர்களது வேலைகளை நியமிக்கிறாள்.

அவளது குடும்பப் பாதுகாப்பில் அவளுக்குப் பரிபூர்ண ஸந்தோஷம். அதை அறிவதற்காகவே அவள் படிக்கிறாள் ; சிக்கனமும், நேர்த்தியும் அவள் வீட்டிற் குடியிருக்கின்றன. அவள் குடும்ப கார்யத்தை விவேகமாய் நடத்துவது அவளது கணவனுக்குக் குலமர்யாதையைத் தருகிறது. அவளைப் பிறர் புகழ்வதைக்கேட்டுத் தனக்குள்ளேயே ஆநந்திக்கிறாள்.

அவள் தன் குழந்தைகளுக்கு ஸதா ஞானத்தைப் புகட்டுகிறாள். தன் நன்னடக்கையினாலேயே அவர்களது நடைகளை ஒழுங்குபடுத்துகிறாள். அவளது வாசகங்களே அக்குழந்தைகளுக்கு ஆணைகளாகின்றன. அவள் கண்வெருட்டிற்கு அவர் கீழ்ப்படிகிறார்கள்.

அவள் தன் வாயைத்திறந்து ஏவினால் அவளது வேலைக்காரர்கள் ஓடுகிறார்கள். ஒரு உத்தரவு கொடுத்ததும் அவ்வேலை செய்து தீர்ந்துவிடுகிறது. இவ்வளவும் அவளது அன்புக்காக நடைபெறுகிறது. அவள் காட்டும் பட்சம் அவர்களது காலுக்குச் சிறகு கட்டினது போலாகிறது.

வாழ்வு வந்தபோது அவள் பொங்கிப்போவதில்லை; தாழ்வு வந்தகாலத்தில் பொறுமையோடு தரித்ர கஷ்டத்தை யாற்றுகிறாள். அவள் தன் கணவனது கஷ்டங்களை அழகிய பேச்சுக்களால் நிவர்த்தியாக்குகிறாள்; அவளது பாராட்டுக்களால் அவை இனிமையாக்கப்படுகின்றன. அவன் தன் ஹ்ருதயத்தை அவள் நெஞ்சில் வைத்து ஆறுதலை யடைகிறான். அவளை மனைவியாகப் பெற்றவனே புண்ய புருஷன். அவளைத் தாயாகப் பெற்ற குழந்தையே பாக்யசாலி.

# நான்காவது காண்டம்.

---

## ரக்த ஸம்பந்தமுள்ள பந்துக்கள்.

### 1-வது அத்யாயம்.

### புருஷன்—HUSBAND.

ஒரு மனைவியைக் கல்யாணஞ் செய்துகொண்டு கடவுளது ஆக்ஞையை யநுஸரித்து ஒழுகு. ஒரு மனைவியை மணந்துகொண்டு ஜனங்களுக்கு நம்பிக்கையுள்ளவனாக நடந்துகொள்.

ஆனால், ஜாக்ரதையாய்ப் பரிசீலனைசெய்; அவஸரப்பட்டுக் கல்யாணத்தை முடிவுசெய்யாதே. உன்னுடைய எதிர்கால ஸுகமும் உன் ஸந்தானங்களின் ஸுகமும் அன்று நீ செய்யும் காரியத்தைப் பொறுத்திருக்கின்றன வென்பதைக் கவனி.

ஒரு மாது உடையிலும், அலங்காரத்திலும் பெரும்பொழுது போக்குவாளாயினும், தன் யௌவனத்தைக் கண்டு தானே மகிழ்ந்து தனது ஸ்தோத்ரங்களைச் சொல்லிக் கொள்ளுவதிலேயே அகமகிழ்வாளாயினும், அதிகம் சிரிப்பாளாயினும், பெரிய குரலோடு பேசுவாளாயினும், அவளது கால் வீட்டில் தங்காதுபோனாலும், அவள் கண்ட புருஷர்களை நாணமில்லாது நோக்கினாலும், அவள் சரத்கால சந்திரனைப் போல அழகாயிருந்தாலும் அவளது அழகில் உன் கண்களைச்

செலுத்தாதே; அவள் வழிக்கு நீ போகாதே; உன் மனோ ராஜ்யங்களுக்கு இடங்கொடுத்து உன் ஆவியைக் கட்டுப் படுத்திக் கொள்ளாதே.

ஆனால், சாந்தமான நடவடிக்கைகளும் மனவுணர்ச்சியும் ஒரு ஸ்த்ரீயினிடத்து இருக்கக் கண்டாலும், உன் மனதுக்கேற்ற வடிவோடு சாதுர்யமான மனத்தை நீ அவளிடத்துப் பார்த்தாலும், அவளை உன்னோடு வீட்டுக் கழைத்துக்கொண்டு வருவாயாக. அவள் உன் ஸ்நேஹிதையாயிருக்கத் தகுந்தவள்; உன் உயிர்த்துணைவியாயிருக்க யோக்யமானவள்; உன் மனதுக்கேற்ற மனைவியாயிருக்க உரித்தானவள்.

அவளைக் கடவுளனுப்பின வரமாக எண்ணிச் சீராட்டுவாயாக. நீ உன் நடையால் அவளிடத்துக் காட்டும் பட்சம் உன்னை அவளது மனத்தில் உறுகப் பிணிக்கட்டும்.

உன் வீட்டு யஜமானியே யவள்; ஆதலால், உன் வேலைக்காரர்கள் அவளுக்குக் கீழ்ப்படியும்படி அவளை மர்யாதையாக நடத்து. காரணமின்றி அவளது ஆசைகளைத் தடுக்காதே; அவள் உன் கவலைகளில் ஒரு பங்காளியாம்; ஆதலால் உன் ஸந்தோஷங்களிலும் அவளை ஒரு பங்காளியாக்குவாயாக.

அவளது குற்றங்களை உனது சாந்தத்தால் கண்டிப்பாயாக; அவள் உனக்குப் பணிந்து நடக்கவேண்டுமென்று கண்டிப்பாய்க் கட்டுதிட்டஞ் செய்யாதே. உன் ரஹஸ்யங்களை யவளிடம் சொல்; அவளது ஸமயோசித யோசனைகள் உள்ளன்போடு கூடியவை. நீ ஏமாந்து போகமாட்டாய்.

அவளிடத்து ஏகபத்நி வ்ரதனாயிரு. ஏனெனில், உன் குழந்தைகளுக்கு அவளே தாயாவாள். அவளுக்கு நோயும் வலியும் வரும்போது உன்னால் ஆனவரையில் அவளை ஸமா

தானப்படுத்து. நீ காட்டும் இரக்கமும், அன்பும் அவள் நோயையும் வலியையும் குறைக்கும்; பத்து வைத்யர்கள் செய்யக்கூடிய ஸிகித்ஸையை அது செய்யும்.

அவளது பெண்பாலுக்குரிய மேன்மையையும், சரீர ம்ருதுத் தன்மையையும் கருது; அவளது பலவீனத்துக்காகக் கடிந்து கொள்ளாதே. ஆனால், உன் குறைவுகளை யெண்ணிப்பார்.

## 2-வது அத்யாயம்.

### பிதா—FATHER.

பிதாவெனும் பெருமைவாய்ந்த புருஷனே! உன்னிடத்துக் கடவுள் அடைக்கலமாகத் தந்துள்ள பாரத்தை யோசித்துப்பார். நீ பெற்ற பிள்ளையைக் காப்பாற்ற வேண்டியது உன் பாரமாம்.

உனக்கு ப்ரியமான அக்குழந்தை, நல்ல பிள்ளையாகவோ துஷ்டப்பிள்ளையாகவோ உலகில் நடந்து பெயரெடுப்பது உன்னையே பொறுத்திருக்கிறது. அவனுக்கு இளமையிலேயே கல்வியைப் பயிற்று. உண்மையான நீதிகளால் அவனை ஸரிப்படுத்து.

அவன் மனப்போக்குகளைக் கவனித்து அவனது வாலிபத்திலேயே அவனைத் திருத்து. அவனுக்கு வயது வர வர துரப்யாஸங்களொன்றும் அவனைக் கவர்ந்துகொள்ளாதபடி பார். அவன் குன்றின்மேலிட்ட விளக்குப்போல் வளரட்டும். அவனது சிரம் மரமடர்ந்தகாட்டில் நெடுமரந்தெரிவது போலத் தெரியட்டும்.

துஷ்டப்பிள்ளை பிதாவுக்கு அவமானத்தை கொண்டு வருகிறான். ஆனால், ஸரியான கார்யங்களைச் செய்பவன் தன் வயது சென்ற பிதாவுக்குக் கௌரவத்தைத் தருகிறான். பூமி

யுன்னுடையதே; அது பயிர் செய்யப்படாமலிருக்க வேண்டாம். நீ நட்டபடி உனக்கு அறுவடையேற்படும்.

'உன் மகனுக்குப் பணிவைக் கற்றுக்கொடு; அவன் உன்னை ஸதாகாலம் மனதார நினைப்பான். அவனுக்குத் தாழ்வைப் போதி; அவன் ஒருபோதும் அவமானம் அடைய நேராது. அவனுக்கு நன்றியறிவைக் கற்பி; அவன் பயன் பெறுவான்; தர்மத்தை யுபதேசி; அன்பு பெறுவான். மிதத்தை யூட்டு; ஸுகம் பெறுவான். விவேகத்தைப்போதி; அவன் நல்ல ஞானத்தை யடைவான்.

ஊக்கத்தை யூட்டு, அவனது செல்வம் வளரும். நன்மை செய்யக் கற்பி; அவன் மனம் உயரும். கலைஞானங்களைக் கற்றுக்கொடு; உலகத்துக்கு உபயோகமுள்ளவனாயிருப்பான். மதத்தைப்போதி; அவனது மனம் நிம்மதியாயிருக்கும். அவனுக்கு நீதியைப் போதி; உலகத்தாரால் நன்கு மதிக்கப்படுவான். நேர்மையைக் கற்றுக்கொடு; அவனது அகமே அவனை நகைக்கக் காரணம் ஏற்படாது.

## 3-வது அத்யாயம்.

### புத்ரன்—SON.

கடவுளது ஸ்ருஷ்டிகளிலிருந்து மனிதன் அறிவைப் பெறட்டும். அவை தரும் போதனைகளை அவன் தன்னோடு ஒத்து நோக்கிக் கொள்ளட்டும்.

எனது புத்ரனே! ஒரு மணல் வனாந்தரத்துக்கு போய் நெருப்புக் கோழியைப்பார். அது உன் மனத்தோடு பேசட்டும். அது தன் வயதுசென்ற தந்தையைச் சிறகில் தூக்கிக்கொண்டு போகிறது. அத் தந்தையைப் பத்ரமான விடத்தில் வைக்கிறது, அதற்கு ஆஹாரம் கொடுக்கிறது.

ஒரு குழந்தையின் தெய்வ பக்தி, கடவுளுக்கு ஸமர்ப்பிக்கப்படும் ஆயிரம் ஸாம்பிராணி வத்திகளைக்காட்டிலும் அதிகமாக மணக்கிறது. அது வஸந்தகாலத்துத் தென்றல் கொண்டு வீசும் பூங்காவனக்காற்றிலும் ரம்யமானது. உன் தந்தையினிடத்து நன்றியறிவுள்ளவனாயிரு; அவர் உனக்கு ஜீவனளித்தவர். உன் தாயினிடத்து விச்வாஸமாயிருப்பாயாக. அவள் உன்னைப் போஷித்தவள்.

பிதாவினது சொல்லைக் கேள்; அது உன் நன்மைக்காகச் சொல்லப்பட்டது. அவரது எச்சரிக்கைகளுக்குச் செவிசாய்; அவை அன்பு மேலிட்டதனால் வருகின்றன.

'தந்தைசொன் மிக்க மந்திரமில்லை
தாய்சொல் துறந்தால் வாசகமில்லை
'அழஅழச் சொல்வர் தமர்
சிரிக்கச்சிரிக்கச் சொல்வார் பிறர்

உன்பிதா உன் வாழ்வையே கவனிப்பவர். உன் ஸுகத்துக்காகவே பாடுபடுபவர். அதனால் அவரது வயஸுக்கு மர்யாதைசெய்; அவருடைய நரைதிரை மூப்புக்காலத்தில் நீ அவரை உபசரணையில்லாது நடத்தவேண்டாம்.

உன் செயலற்றிருந்த குழந்தைப் பர்வத்தை எண்ணிப்பார்; உன் வாலிபத்தின் துடுக்கையும் கவனி; உன் பெற்றோரது தள்ளாமையைக் கண்டு மனமிளகுவாயாக. அவர்களது தளர்ந்த வயதில் அவர்களுக்கு உதவிபுரிந்து காப்பாற்று.

அவ்வகையாக அவர்களது நரைத்துப் பழுத்த உடல் ஸமாதானமாக இருக்கட்டும். உன் ஸ்வந்தக் குழந்தைகள் உன் மாதிரியைக்கண்டு, உன் தெய்வ பக்திக்கு வியந்து, பிதுர் வாத்ஸல்யத்தோடு உனக்கு ப்ரதி செய்யட்டும்.

## 4-வது அத்யாயம்.

### ஸஹோதரர்கள்—BROTHERS.

நீங்கள் ஒரு தகப்பனது குழந்தைகள் அவரால் போஷிக்கப்பட்டவர்கள்; ஒரு தாய்ப்பால் குடித்து வளர்ந்தவர்கள். அதனால், உங்களது தந்தையினது வீட்டில் சாந்தியும் ஸுகமும் நிரந்தரமாயிருக்கும்படி, உங்கள் ஸஹோதரர்களிடத்தில் அன்பும் ஆதரவுமுள்ளவர்களாயிருங்கள்.

உலகத்தில் ஒருவரை யொருவர் பிரியும்போது உனது அன்புக்கும் ஐக்யத்துக்கும் உரிய பந்துவாகிய ஸஹோதரனை ஞாபகத்தில் வைத்துக்கொள். உனது ரக்த ஸம்பந்தமான உறவைவிட்டு ஒரு அந்யனைத் துணையாகக் கொள்ளாதே.

உன் ஸ்ஹோதரன் ச்ரமப்பட்டால், அவனுக்கு உதவி செய். உன் ஸஹோதரி கஷ்டப்பட்டால் அவளைக் கைவிடாதே. அவ்விதமாக உனது தந்தையினது செல்வம் உன் வம்ச முழுவதையும் காக்கட்டும். நீங்கள் ஒருவரை யொருவர் நேசித்து வாழும்படியாக உன் தகப்பனது அன்பு உங்கள் யாவருக்கும் தொடர்ச்சியாக வரட்டும்.

# ஐந்தாவது காண்டம்.

---

## மக்களுக் கிடையூருன குண பேதங்களைப் பற்றிய தூர ஆலோசனை.

## 1-வது அத்யாயம்.

### அறிவும் பேதைமையும்—WISDOM AND IGNORANCE.

ஞானத்தின் கொடைகள் கடவுளினது பொக்கிஷங்களாம். அவர் ஒவ்வொருவனுக்கும் அவனது அந்தஸ்துக்குத் தக்கவாறும் அவருக்குத் தோன்றியபடியும் அளந்து கொடுத்திருக்கிறார்.

அவர் உனக்கு ஞானத்தை யளித்திருக்கிறாரா? அவர் உண்மையறிவினுல் உன் மனத்தை ப்ரகாசிப்பித்திருக்கிறாரா? அப்படியிருந்தால் அறிவீனர்களுக்கு அந்த ஞானங்களைப் புகட்டி, அவர்களை வ்ருத்திக்குக் கொண்டுவருவாயாக. ஞானவான்களிடத்தில் அவற்றைச் சொல்லி உன்னைத் திருத்திக் கொள்ளுவாயாக.

உண்மையான ஞானம் மூடத்தனத்தைப்போல அவ்வளவு செருக்கடைவதில்லை. ஞானி அடிக்கடி ஸந்தேஹிக்கிறான்; அவன் எண்ணங்களை மாற்றிக் கொள்ளுகிறான். மூடன் ஸந்தேஹிப்பதில்லை; எப்போதும் ஒரே பிடிவாதமாயிருக்கிறான். அவனது அறிவீனம் எங்கும் படிகிறது.

ஒன்று மில்லாதவனது வறட்டுக் கர்வம் வெறுப்புக் கிடமானது. அவனது அதிகப்பேச்சு மூடத்தனத்திலும் மூடத்தனமாம். என்றாலும், மூடர்களது அவமதிப்பான சொற்களை ஸஹித்துக்கொள்ளுவதும், அவர்களது ஓச்வாமொழிகளைப் பொறுமையுடன் கேட்டு அவர்களுடைய தளர்வுகளைக் கண்டு பச்சாத்தாபப்படுவதும் அறிவாளரது கடமையாம்.

ஆனால், உன் ஸ்வந்த வீண் மனோபாவங்களால் பொங்கி விடாதே; உனது மேதக்க ஞானத்தைப்பற்றியும் புகழ்ந்து பேசாதே; அதி துல்யமான மனித அறிவென்பது குருட்டுத்தனத்தையும் அஞ்ஞானத்தையும் தவிர வேறொன்று மில்லை.

ஞானி தன் குற்றங்களை யுணர்கிறான்; அடங்கியிருக்கிறான்; தன் ஸ்வந்த அங்கீகாரத்துக்காக வெகு பாடுபடுகிறான். ஆனால், மூடனோ தன் மனமாகிய குளப்படி நீரில் மூழ்கி, அதனடியில் கண்ட கூழாங்கற்களினிடத்து ஸந்தோஷங்கொண்டு, அவற்றை வெளிக்கொணர்ந்து, முத்துக்களென்று காட்டி, தன்னொத்த நண்பர்களது புகழ்ச்சியைப் பெற்றுத்தானுங் களிக்கிறான்.

ஒரு பயனுமில்லாத விஷயங்களில் தனக்குள்ள திறமையை மூடன் வியந்து கூறிக்கொள்ளுகிறான்; ஆனால், எவ்விஷயத்தில் அறியாமை வெட்கத்துக்குக் காரணமோ அவ்விஷயத்தில் அவனுக்கு அறிவிருக்கிறதில்லை.

ஞானவழிகளில் ஒழுகும்போதுகூட அவன் மூட கார்யங்களுக்காகவே உழைக்கிறான். அவமானமும், கார்ய பங்கமுமே அவன் ச்ரமத்துக்கு வெகுமதியாக அவனுக்குக் கிடைக்கின்றன.

ஆனால், ஞானியோ தன் மனத்தைக் கல்வியினால் பண் படுத்துகிறான். அவனது கலைப்பயிற்சி அவனுக்கு ஆநந்தத் தைத்தருகிறது. அவன் பொது ஜனத்துக்காக உழைப்பது அவனுக்குக் கீர்த்தியைச் சூட்டுகிறது. எனினும், நற்குணங் களை யடைவதே அவன் முதன்மையான படிப்பாகக் கருது கிறான். தன் ஜீவ்ய நிலையை யறிவதற்காகவே அவன் படிக் கிறான்.

## 2-வது அத்யாயம்.

### ஏழையும் தனவந்தனும்—RICH AND POOR.

எவன் கடவுள் கொடுத்த செல்வத்தைப் பெற்று அதனை ஸந்மார்க்கத்தில் செலவிட எண்ணுகிறானோ அவன் கடவுளு டைய விசேஷ அநுக்ரஹத்தைப் பெற்றவன்; மிகச் சிறந்த உத்தமன்; அவனுக்குப் பல நன்மைகளையும் செய்ய அப் பொருள் உதவுவதால் தன் செல்வத்தை ஸந்தோஷத்தோடு பார்க்கிறான்.

அவதிப்படும் ஏழைகளை அவன் காப்பாற்றுகிறான். மெ லியாரை வலியார் வருத்தப்பார்ப்பது அவனுக்கு மனம் ஒப்பு கிறதில்லை. தனது தாக்ஷண்யத்துக்கு யோக்யமானவர்களைத் தேடுகிறான். அவர்களது குறைவுகளை விசாரிக்கிறான். ஆலோ சித்துப் பார்த்து அவர்களது கஷ்டங்களை அவன் நிவர்த்தி செய்கிறான். அப்படிச் செய்யும்போது தன் டம்பத்தைக் காட் டுவதில்லை.

யோக்யதை யுள்ளவர்களுக்கு உதவியும் வெகுமதியும் செய்கிறான். மதிநுட்ப முள்ளவர்களைப் பின்னும் அவ்வழியி லுழைக்கத் தூண்டுகிறான்; ஒவ்வொரு உபயோகமான முயற் சியையும் தாராள சிந்தையோடு அபிவ்ருத்தி செய்கிறான்.

பெருங்காரியங்களைக் கையாடுகிறான். அதனால் அவன் இருக்கும் தேசம் செல்வத்தையடைகிறது ; கூலிக்காரர்களுக்குப் பிழைப்பு ஏற்படுகிறது. நவநவமான யோசனைகளை யுருவாக்குகிறான். அதனால் கலைகள் அபிவிருத்தி யடைகின்றன.

தான் அளவிற்கதிகமாக உண்ணும் உணவு ஏழைகளுக்கு ஸ்வந்தமானதெனக் கருதுகிறான். மிகுதி மிச்சங்களை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுகிறான். அவற்றை யொளித்து வைப்பதில்லை. அவனது தர்மசிந்தனை செல்வத்தினால் தடைபடாதிருப்பதனால்தான், அவன் பொருள்படைத்ததற்காக ஸந்தோஷிக்கிறான் ; அவனது ஆநந்தம் நிஷ்களங்கமானது.

அளவிறந்த செல்வத்தைக் குவித்து அதைச் சேர்த்து வைப்பதிலேயே ஸந்தோஷிப்பவனுக்கு எப்போதும் வ்யாகூலமே. அவ்லோபி ஏழைகளை வதைக்கிறான் ; அவர்கள் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைப்பதைக் கவனிப்பதில்லை. மனவிரக்கமின்றிப் பிறரை வருத்தியே மேம்படுகிறான்; அவன் ஸஹோதரனது அழிவைப்பற்றிக் கவலைப்படுவதில்லை.

அநாதைகளது கண்ணீரைப் பால் குடிப்பதைப்போல அந்த லோபி குடிக்கிறான். விதவையினது அழுகை அவனது காதுக்கு ஸங்கீதமாகிறது. பணவாசையால் அவன் மனங் கல்லாகிறது. துயரமும் க்லேசமும் அவன் மனத்தில் தமது சாயலைப் பதிப்பதில்லை.

அவன் செய்த அக்ரமங்களது சாபம் அவனைப் பின் தொடர்கிறது. அவன் ஸதா பயத்தோடேயே வாழ்கிறான். அவனது மனக்கவலையும், அவனது திருட்டு இச்சைகளும்

அவன் பிறருக்குச்செய்த மோசத் துன்பங்களை நினைப்பூட்டி அவன்மேல் பழி வாங்குகின்றன.

அந்தோ! இத்தகைய மனிதனது மனத்தை அறுக்கும் துக்கங்களைக் கவனிக்கும்போது, தரித்ரத்தாலுண்டாகும் துன்பம் எம்மாத்ரம்! ஏழை தன்னைத்தானே ஸமாதானப் படுத்திக்கொள்ளட்டும்; ஸந்தோஷிக்கட்டும். ஏனெனில் அவனது ஸந்தோஷத்துக்கு அநேக காரணங்களிருக்கின்றன.

அவ்வேழை கஞ்சிக்கு உட்காரும்போது ஸமாதானமாய் உண்ண அமர்கிறான். அவனுடைய சாப்பாட்டு முன்னிலையில் அவனை முகஸ்துதி செய்பவர்கள் யாருமில்லை. அவனைக் கவிழ்த்து விழுங்கப் பார்ப்பவர்களும் இல்லை.

அவனுக்குத் தான் பராதீனப்பட்டதாகக் குழப்பமில்லை. இன்னும் கொஞ்சம் உண்பதுதானே யென்று ப்ரார்த்திப்பவர்களுமில்லை. செல்வவான்களது ருசியான உணவும் கிடையாது. அவற்றால் வரும் ரோயும் அவனுக்கில்லை. அவன் குடிக்கும் கூழ் அவன் வாய்க்கு எவ்வளவு ருசியாயிருக்கிறது! அவன் குடிக்கும் கங்காம்ருதம் எவ்வளவு அவனுக்கு தாஹத்தைப் போக்குகிறது? ஆம், போகிகளது விலை யுயர்ந்த பானங்களைக் காட்டிலும் எவ்வளவோ சுவையுள்ளதாயிருக்கிறது.

அவனது உழைப்பு அவன் சரீர ஸௌகத்தைக் காக்கிறது; சோம்பேறியினது பஞ்சுமெத்தை தரமுடியாத நித்ரையை அது அவனுக்குத் தருகிறது. அவன் தாழ்ந்து காட்டித் தன் ஆடைகளைக் குறைத்துக்கொள்ளுகிறான். செல்வத்தினாலும் பெருமையினாலும் வரும் ஸம்பாதனங்களைக் காட்டிலும் அவனது த்ருப்தியினாலுண்டான சாந்தி மிக இனிமையாயிருக்கிறது.

அதனால் செல்வன் தன் செல்வத்தைக்கண்டு செருக்கடையாதிருக்கட்டும்; தரித்ரனும் தன் ஏழைமையை யெண்ணி மனமழுங்காதிருக்கட்டும். ஏனெனில், கடவுளது ஆழ்ந்த ஆலோசனை இருவருக்கும் ந்யாயத்தைத் தருகிறது. மூடன் எண்ணுவதைவிட அதிகம் ஸமமாகக் கஷ்ட ஸுகங்களைக் கடவுள் மனிதருக்குப் பங்கிட்டிருக்கிறார்.

## 3-வது அத்யாயம்.

### எஜமானனும் வேலையாளனும்—MASTER & SERVANT.

மனிதனே! மற்றொருவனிடத்து வேலைசெய்கிறோமென்று மனம் வருந்தாதே. அது ஈச்வர ஸம்மதம்; அதில் அநேக குணங்களுண்டு. அது, உன் வாழ்நாளின் பல கவலையையும் சிந்தனையையும் உன்னைவிட்டு ஓட்டுகிறது.

ஒரு வேலைக்காரனுக்கு யஜமானனிடத்து உண்மையாயிருப்பதே கண்யமாம்; வணக்கமும் பணிவுமே அவனது உத்தம நடத்தைகளாம். அதனால் யஜமானன் கண்டிக்கும்போது பொறுமையாயிரு; அவன் உன்னை வையும்போது பதில் கொடுக்காதே. நீ அமைந்து காட்டும் மௌநம் மறக்கப்படமாட்டாது.

அவனுடைய கார்யத்திலேயே கண்ணுங் கருத்துமாயிரு. அவனது வேலைகளில் சுறுசுறுப்பாயிரு. உன் மேல் வைத்திருக்கும் நம்பிக்கைக்குப் பாத்ரனாகும்படி உண்மையாக நடந்துகொள்.

உன் காலமும், உன் பாடும் அவனைச் சேர்ந்தது. அவற்றில் அவனை மோசஞ் செய்யாதே; ஏனெனில், அவன் அவற்றிற்கென்று உனக்குச் சம்பளம் கொடுக்கிறான்.

யஜமானனே! உன் ஊழியன் உன்னிடத்து உண்மை யாய் நடந்துகொள்ள வேண்டுமானால் அவனை ந்யாயமாக நடத்து. அவன் உன்னிடத்து வணங்கியிருக்க வேண்டுமானால், உன் கட்டளை நீதியானவைகளாயிருக்கட்டும்.

அவனுக்கும் மனித உணர்ச்சிகளுண்டல்லவா? பயத்தை யுண்டுபண்ணுகிற கொடுமையையும் கடூரத்தையும் காட்டி அவனுடைய அன்பைப்பெற வியலாது. கண்டிப்போடு பட்சத்தையுங் கலந்துகொள்; அதிகாரத்தோடு ந்யாயத்தையும் சேர்த்துக்கொள். அவ்விதமாக உனது எச்சரிக்கைகள் அவன் மனதில் பதியட்டும். அவன் வேலை அவனுக்கு ஸந்தோஷத்தைத்தரும்.

அவன் உன்னிடத்துள்ள நன்றியறிவினால் உனக்கு உண்மையாக உழைப்பான். அன்பு காரணமாக உத்ஸாஹத்துடன் உனக்குக் கீழ்ப்படிவான். அவனது சுறுசுறுப்புக்கும் உண்மைக்கும் தக்கவாறு அவனுக்கு வெகுமதி செய்யத் தவறாதே.

## 4-வது அத்யாயம்.

### அரசும் குடியும்—MAGISTRATES AND SUBJECTS.

கடவுளது அன்புக்குப் பாத்ரமாய் உன்னொத்த மனிதர்களால் ராஜாவாக்கப்பட்டு அரசாள்பவனே! உன் நிலைமையினது பெருமையையும் உயர்வையும் பார்ப்பதைக்காட்டிலும் உன்னுடைய நோக்கத்தையும், பொறுப்பையும் அதிகமாய்க் கவனி.

நீ ராஜரீகமான உடை உடுத்திக்கொண்டிருக்கிறாய்; ஸிம்ஹாஸனத்தில் அமர்கிறாய்; அரசுக்குரிய க்ரீடத்தை உன் சிரம் வஹிக்கிறது; அதிகாரத்தைக் குறிக்கும் செங்கோல் உன்

கையிலிருக்கிறது. ஆனால், இவ்வுடையாளங்களெல்லாம் உனக்காகக் கொடுக்கப்பட்டவைகளல்ல ; உன் ஸ்வந்த நன்மையைத் தேடிக்கொள்வதற்காக எண்ணப்பட்டவைகளுமல்ல? உனது ராஜ்யத்தின் நன்மையைக் கருதுவதற்காகவே ஏற்பட்டது.

ஒரு அரசனுக்குப் பெருமை, அவனது குடிகளது நன்மையை நாடுவதே. அவனது பலமும் நாடும் அவன் குடிகளது மனத்தைப் பொருத்திருக்கின்றன. ஒரு பெரிய அரசனது மனம் அவனது நிலைமைக்குத் தக்கபடி உயர்ந்துகாட்டுகிறது. அவன் பெருங் கார்யங்களைச் செய்யவெண்ணித் தன் அதிகாரத்துக் கொத்தவிதமாகக் கார்யங்கள் செய்யத் தேடுகிறான்.

தன் நாட்டிலுள்ள அறிவாளர்களை அவன் ஒருங்கு சேர்க்கிறான். அவர்களோடு தாராளமாய்க் கார்யங்களை யோசிக்கிறான். அவர்களுடைய அபிப்ராயங்களைக் கேட்கிறான். தன் ஜனங்களை யூகத்தோடு தேடிப்பார்க்கிறான். மனிதர்களது சக்திகளைக் கண்டு பிடிக்கிறான. அவர்களது யோக்யதைக்குத் தக்கபடி அவர்களுக்கு உத்யோகங் கொடுக்கிறான்.

அவனுடைய ந்யாயாதிகாரிகள் நீதியாய் நடக்கிறார்கள் ; அவனது மந்த்ரிகள் மதியூகர்கள் ; அவனுடைய விசேஷ அன்பைப் பெற்றவர் அவனை மோசம்பண்ணுவதில்லை. அவன் கலாபிவ்ருத்தியைக் கண்டு மகிழ்கிறான். அவை முன்னேறுகின்றன.

படித்தவர்களோடும், மதியூகிகளோடும், ஸல்லாபிப்பதில் அவன் ஸந்தோஷமடைகிறான். அவன் அவர்களது மனத்தில் ஊக்கத்தை யுண்டுபண்ணுகிறான். அவனது நாட்டின் பெருமை அவர்களது உழைப்பால் உயர்வடைகிறது.

தன் வ்யாபாரத்தை வ்ருத்திபண்ணும் வர்த்தகனுடைய ஊக்கத்தையும், தன் நிலங்களைக் கொழுப்பிக்கும் குடியானவனது திறமையையும், சாஸ்த்ரியினது மதியூகத்தையும், வித்வானது பயிற்சியையும், இன்னும் இவைபோன்ற யாவற்றையும், அவ்வரசன் தன்னுதவிக்குப் பாத்ரமாக்கி அவர்களுக்கு வேண்டிய செல்வத்தைத் தருகிறான்.

புதுக் குடியேற்ற நாடுகளை யேற்படுத்துகிறான். வலிய கப்பல்களைக் கட்டுகிறான். ஸௌகர்யத்துக்காகக் கால்வாய்கள் வெட்டுகிறான். காவலுக்காகத் துறைமுகங்களைக் கட்டுகிறான். அவன் நாட்டுக் குடிகள் செல்வத்தில் நிரம்பியிருக்கிறார்கள். அவன் நாட்டின் பலம் வ்ருத்தியாகிறது.

தனது சட்ட திட்டங்களைத் தர்ம ந்யாயமாகவும், ஞானத்தோடும் ஏற்படுத்துகிறான். அவனது குடி ஜனங்கள் தங்கள் கஷ்டஸுகங்களைப் பயமின்றி அநுபவிக்கிறார்கள். அவர்களுக்குச் சட்டப்படி நடப்பதில்தான் ஸந்தோஷம். அரசனும் தன் தீர்மானங்களைத் தயாள குணத்துடன் ஸ்தாபிக்கிறான். ஆனால், குற்றவாளிகளைத் தண்டிப்பதில் கண்டிப்பாயும், பட்சபாதமின்றியும் நடக்கிறான்.

அவன் தனது குடிகளுடைய முறைப்பாடுகளுக்குச் செவிசாய்க்கிறான். கொடுங் கோன்மையான அதிகாரிகளை யடக்கி, அவர்களது துன்பங்களிலிருந்து அக்குடிகளை மீட்கிறான். அதனால் அவனது குடிகள் அவனைத் தம் தந்தை போலப் பார்க்கிறார்கள். தாங்கள் அநுபவிக்கும் ஸுகங்களுக்கெல்லாம் காரணம் அவனுடைய போஷணையே என்றெண்ணுகிறார்கள். அவனிடத்துள்ள ப்ரியம் அவன் மனதில் பொதுஜன நேசத்தை யுண்டு பண்ணுகிறது. அவர்களுடைய ஸுகத்

துக்குப் பங்கம் வராது பார்ப்பதிலேயே அவனுக்கு ஸதா கவலையாம்.

அவனைப்பற்றி ஒரு புறணியாவது சொல்ல அவர்களது மனத்தில் தோன்றுவதில்லை. அவனது சத்ருக்களின் க்ருத்ருமங்கள் அவனிடத்தில் பலிப்பதில்லை. அவனது குடிகள் அவனிடத்து விச்வாஸமும் உறுதியும் உள்ளவர்களாகவிருக்கிறார்கள். ஒரு செப்புத் தகட்டால் மூடிய மதில்போல அவர்கள் ஒரு அரணாக நிற்கிறார்கள். அவனது பகைவனது சேனை காற்றில் தூள் பறப்பதுபோலப் பறந்தோடுகின்றது. அவனது ஜனங்களின் வீடுகளைப் பத்ரமும் ஸமாதானமும் ஆசீர்வதிக்கின்றன. கீர்த்தியும் பலமும் நிரந்தரமாய் அவனது ஸிம்ஹாஸனத்தைச் சூழ்ந்து நிற்கின்றன.

# ஆறாவது காண்டம்.

---

## ஜன ஸமூகக் கடமைகள்.

## 1-வது அத்யாயம்.

### பரோபகாரம்—BENEVOLENCE.

மனிதனே! உன் இல்லாமையை நினைக்கும்போதும், உன் குறைவுகளை நினைக்கும்போதும், உனக்கு வாக்கு வல்லமையை யளித்து, ஒருவர்க்கொருவர் உதவிசெய்துகொண்டு உத்தர ப்ரதி யுத்தரவாதங்களைச் செய்துகொள்ளும்படியான நிலையில் உன்னை மனித ஸமூகத்தில் அமைத்த கடவுளது நன்மையைச் சிந்தித்துப் பார்ப்பாயாக.

உனது உணவு, உடை, குடிவஸதி, கஷ்டநிவாரணம், உலக ஸுகாநுபவம், இவை முழுவதும் பிறருடைய உதவியாலேயே நடைபெறுகின்றன. நீ ஏகாங்கியாயிருந்தால் இவற்றை யநுபவிக்க முடியுமா வென்பதை யெண்ணிப்பார். ஆதலால், ஜனங்கள் உன்னிடத்து ஸ்நேஹமாயிருக்க வேண்டுமென்று நீ கவனிப்பதுபோல, நீயும் அவர்களிடத்து ஸ்நேஹமாயிருக்கவேண்டும்.

ரோஜா இயல்பாகவே மணப்பதுபோல பரோபகாரியின் மனம் இயல்பாகவே நல்ல கார்யங்களைச் செய்கிறது. தன் மனத்தின் ஆறுதலையும் உபசாந்தத்தையுமே அவன் அநுப

விக்கிறான்; தன் அயலானது ஸுகத்தையும் வாழ்வையும் நோக்கிக் களிப்படைகிறான்.

அவதூறுகளுக்கு அவன் செவிகொடுப்பதில்லை. மக்களது தவறுகளும், குற்றமும் அவனது மனத்தில் வருத்தத்தை யுண்டுபண்ணுகின்றன. அவனுக்கு நன்மை செய்வதிலேயே கருத்து; அதற்குத் தக்க ஸமயம் பார்த்துக்கொண்டேயிருக்கிறான்; மற்றவனது இடுக்கண்களை நீக்கித் தன்னுடைய மனோபாரத்தை நிவர்த்தித்துக் கொள்ளுகிறான்.

அவனது மனோவிசாலத்தினால், (ஸர்வேஜநாஸ்ஸுகிநோபவந்து) எல்லாரும் ஸுகமடையட்டும் என்ற எண்ணத்தினால் உண்மையை உணர்கிறான். அவனது தயாளகுணத்தினால் ஸர்வஜன ஸுகத்தையும் அபிவ்ருத்தி பண்ண முயலுகிறான்.

## 2-வது அத்யாயம்.

### ந்யாயம்—JUSTICE.

மனித ஸமூகத்தின் அமைதி ந்யாயத்தைப் பொறுத்திருக்கிறது. ஒவ்வொருவனது ஸுகமும் அவனது ஸொத்தை அவன் நிச்சமாய் அநுபவிக்கக் கூடும் என்ற நம்பிக்கையைச் சார்ந்துள்ளது. உன் மனவாசைகளை அதனால் மிதப்படுத்தி வைத்துக்கொள். ந்யாயத் தோற்றம் உன்னை வழி பிசகாது நடக்கச் செய்யட்டும்.

அடுத்தவனது வஸ்துவின் பேரிற் கண் போடாதே. அவனுடைய ஸொத்து எத்தன்மைத்தாயினும் அதனை நீ தொடாதே. ஆசாபாசம் உன்னைக் கட்டவேண்டாம்; அல்லது உன் கோபம் அயலானது வாழ்வுக்குக் கேடு வருவிக்கவேண்டாம். அவனது பேரைக் கெடுக்காதே; அவனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதே.

அவனை மோசஞ் செய்யும்படியாகவாவது அவனை விட்டு ஓடிப்போகும்படியாகவாவது அவனது வேலைக்காரர்களைத் தூண்டிவிடாதே. அவன் மனைவிக்குப் பாபச் செய்கைகளைச் செய்யத் துர்ப்போதனை பண்ணாதே.

அது பிறகு உன்னால் மாற்றமுடியாத துக்கத்தை அவனுக்குத் தரும்; ஒரு விதத்திலும் ப்ராயச்சித்தம் செய்ய முடியாத தீமையை அவன் வாழ்நாளுக்களிக்கும். மனிதர்களோடு பழகும்போது பட்சபாதமாயிராமல் ந்யாயமாயிரு; பிறர் உனக்குச் செய்ய விரும்புவதுபோல நீ அவர்களுக்குச் செய்வது தகுதி.

உன்மேல் வைத்த நம்பிக்கையைக் காப்பாற்று; உன்னை நம்பினோரை மோசஞ் செய்யாதே; திருட்டுக் குற்றத்தைக் காட்டிலும் மோசக்குற்றம் கடவுள் முன்னிலையில் பெரிய பாபமென்பதை நிச்சயமாயறிந்துகொள்.

ஏழைகளை வருத்தாதே; கூலிக்காரனது சம்பளத்தை வாயில் போட்டுக் கொள்ளாதே. லாபத்துக்கு விற்கும்போது உன் மனச்சாட்சி சொல்வதைக் காதுகொடுத்துக் கேள். அதிக லாபத்துக்கு ஆசைப்படாதே. வாங்குகிறவர்களுடைய அறியாமையைக் கண்டு அவர்களை மோசஞ்செய்யாதே.

நீ கொடுக்கவேண்டிய கடன்களைக் கொடுத்துவிடு. உனக்குக் கடன்கொடுத்தவன் உன் யோக்யதையை யெண்ணிக் கொடுத்தான். அவனது கடனைக் கொடுக்காதொழிவது இழிவும் அந்யாயமுமான கார்யம்.

பத்து ஜனங்களுக்குளிருக்கும் மனிதனே! முடிவாகச் சொல்லுவதைக்கேள்; உன் மனத்தைப் பரீட்சித்துப்பார். உன் உதவிக்கு ஞாபகத்தை வரவழைத்துக்கொள். மேற்

சொன்ன விஷயங்களில் எதிலாவது நீ தவறியிருந்தால், வ்யஸனமும் வெட்கமும் கொண்டு உன்னாலானமட்டும் அதற்கு உடனே பரிஹாரம் செய்துவிடு.

## 3-வது அத்யாயம்.

### தர்மம்—CHARITY.

பரோபகார சிந்தையுள்ள மனிதனே ஸாதகவான். அச்சிந்தையின் பயன்கள் தர்மமும் அன்புமாம். அவனுடைய ஹ்ருதயவூற்றிலிருந்து நன்மையென்னும் ஆறு பாய்வதனால் ஜனோபகாரம் என்ற வயல்கள் பாய்ச்சப்படுகின்றன. ஏழைகள் கஷ்டப்படும்போது அவன் அவர்களுக் குதவிசெய்கிறான். எல்லா மனிதரும் வாழ்வுபெற்று ஓங்குவதிலேயே அவனுக்கு ஸந்தோஷம்.

தன் அயலானை அவன் கண்டிப்பதில்லை. பொறாமை பகை முதலியவற்றால் ஏற்படும் கதைகளை நம்புவதில்லை. அவர்களது பழிமொழிகளையும் எடுத்துத் திருப்பிச் சொல்லுவதில்லை.

மனிதர் தனக்குச் செய்யும் துன்பங்களை அவன் மன்னிக்கிறான்—அவற்றை முற்றிலும் மறந்து விடுகிறான். பழி வாங்குந் தன்மையும் வைரங்கொண்ட பகையும் அவனது மனத்தில் இடங்கொள்வதில்லை.

தீமைக்குப் பதில் தீமை செய்வதில்லை; அவனுக்குத் தன் சத்ருவென்றாலும் பகையில்லை; ஆனால் அவர்களது அக்ரமங்களை ஸ்நேஹ மொழிகளால் எச்சரித்து அவர்களுக்கு ப்ரதி உபகாரம் செய்கிறான்.

மனிதர்களது துக்கமும கவலையும் அவன் மனத்தில் இரக்கத்தை உண்டாக்குகின்றன; அவர்களது கஷ்டங்களை

நிவாரணஞ்செய்ய முயலுகிறான். அவன் அப்படி அடைந்த வெற்றியினுலுண்டாகும் இன்பம் அவனது உழைப்பின் பயனாகிறது.

அவன் கோபத்தை லகுவில் ஆற்றுகிறான்; சினந்தவர்களது சச்சரவையும் ஸமாதானப்படுத்துகிறான். கலகத்தினுலும் க்ரோதத்தினுலும் ஏற்படும் தீங்குகளையும் நடக்கவொட்டாமல் தடுக்கிறான். தன் சுற்றுப் பக்கங்களில் ஸமாதானத்தையும், நல்லெண்ணத்தையும் வ்ருத்தி பண்ணுகிறான். ஜனங்கள் பலரும் அவனது நாமத்தைப் புகழ்ந்தும் ஆசீர்வதித்தும் கூறுகிறார்கள்.

## 4-வது அத்யாயம்.

### நன்றி மறவாமை—GRATITUDE.

ஒரு மரத்தின் கிளைகள் தம்மைத்தாங்கும் வேருக்கு ஸாரத்தை ப்ரதியாகக் கொடுப்பதுபோலவும், ஒரு ஆறு தன் ஊற்றுக்கு ஆதாரமாயிருந்த கடலுக்குத் தன் நீரை யளிப்பது போலவும், நன்றிமறவாத மகனது ஹ்ருதயம் தான்பெற்ற நன்றிக்குக் கைம்மாறு செய்வதிலேயே ஸந்தோஷிக்கிறது. அவன் தனக்குச் செய்த உதவியை ஸந்தோஷமாய் ஒப்புக்கொள்ளுகிறான். தனக்கு உபகாரஞ்செய்தவனுக்கு அன்பும் மரியாதையும் காட்டுகிறான்.

தன்னுல் ப்ரதியுபகாரஞ் செய்ய முடியாமற்போனுல், அதன் ஞாபகத்தை என்றும் விச்வாஸத்தோடு தன் மனத்தில் வளர்க்கிறான். தன் ஆயுள் முழுவதும் அவன் அதை மறப்பதில்லை. தயாளகுணமுடையவனது கை, பூமியில் இலை, பூ, காய்களை வ்ருத்திசெய்யும் மேகத்துக்கு ஒப்பாகும். நன்றியற்றவனது மனம், பெய்த மழைமுழுவதையும் ஆகர்ஷித்துத்

தனக்குள் அடக்கிக்கொண்டு ஒருபயனையும் தராத பாலைநிலத் துக்கொப்பாகும்.

உனது உபகாரியினிடத்துப் பொறாமை கொள்ளாதே. அவன் செய்த நன்மைகளை ஒளிக்கமுயலாதே. உதவியை ஏற்பதைக் காட்டிலும் கொடுப்பது சலாக்யமானாலும், ஒருவனது தயாளகுணத்தைப் பலரும் வியந்துபேசுவார்களானாலும், நன்றிமறவாத உத்தமகுணம் பிறர்மனத்தில் விரைவாகப் பதிகிறது; அந்த உத்தமகுணம் கடவுள் முன்னிலையிலும் மனிதரெதிரிலும் விரும்பத்தக்க குணமாயிருக்கிறது.

ஆனால், கர்வியினிடத்திருந்து ஒரு நன்றியையும் பெறாதே. ஸ்வயநலம் பாராட்டுகிறவர்களுக்கும், பேராசையுள்ளவர்களுக்கும் ஒரு உதவியும் செய்யாதே. கர்வத்தினாலுண்டாகும் டம்பம் உன்னை அவமானத்துக் குள்ளாக்கும். பேராசைக்காரனுக்கு த்ருப்தியே கிடையாது.

## 5-வது அத்யாயம்.

### உண்மை, அல்லது நேர்மை—SINCERITY.

உண்மையினது வனப்புக்களைக்கண்டு மோஹித்து, அதனது ஸௌந்தர்யத்தில் மனத்தைப்பதித்த மனிதனே! அதனிடத்து உறுதியான நம்பிக்கையோடிரு; அதனைக் கைவிடாதே. உனது நல்லொழுக்கத்தின் கடைப்பிடி முடிவில் உனக்குக் கண்யத்தைத் தரும். உண்மையுள்ளவனது நாக்கு அவனுடைய மனத்தில் வேரோடியிருக்கிறது; கபடமும், மோசமும் அவன் வார்த்தைகளில் காணப்படா. அவன் பொய் சொல்ல அஞ்சுகிறான்; அவன் நாவும் குழறுகிறது. உண்மையைப் பேசுவதில் அவன் சலிக்காதிருக்கிறான்.

தன் குணபாவத்தின் மேன்மையை அவன் ஒரு ஆண் மகனைப்போலக் காக்கிறான்; கபடச்செய்கைகளுக் குட்படு வதில் அவனுக்கு வெறுப்புண்டு. மனம், வாக்குக் காயங்க ளில் ஒன்றாயிருக்கிறான்; ஒருபோதும் கலக்கமுறுவதில்லை. உண்மைபேசும் தீரம் அவனிடத்திலுண்டு. பொய் பேசத் தான் அவனுக்குப் பயம்.

கள்ள மனத்தோடு பொய்க்கோலம்போடும் நீசக்குணம் அவனிடத்து என்றுமில்லை. மனதிலுள்ளதை அவன் வாய் சொல்லிவிடும். என்றாலும், விவேகத்தோடும் முன்யோசனை யோடும் அவன் வாயைத் திறக்கிறான். ஸரியான விஷயங்களைக் கவனித்துச் சாதுர்யமாய்ப் பேசுகிறான். உற்ற நண்பனைப் போல உறுதி பேசுகிறான்; பேசும்போது தன் நாவைக் காத்துக்கொண்டே பிறரைக் கண்டிக்கிறான். அவனுடைய வாக்குதத்தங்கள் நிச்சயமாய் நிறைவேற்றப் படுகின்றன.

கபடியினுடைய எண்ணம் அவனது நெஞ்சில் ஒளிந் திருக்கிறது. கபடி, தன் முழுநோக்கமும் மோசம் செய்வதி லேயே நிற்கத், தன் பேச்சுக்களை உண்மைபோலக் காட்டு கிறான்.

கபடி துக்கம் வரும்போது சிரிக்கிறான்; ஸந்தோஷ ஸம யங்களில் அழுகிறான். அவன் வார்த்தைகளுக்கு அர்த்தமில்லை. நாகப் பூச்சியைப்போல இருட்டில் வேலைசெய்து, தான் பத்ர மாக விருப்பதாக நினைத்துக் கொள்ளுகிறான்; ஆனால் வெளிச்சத்தில் வரும்போது பிசகித் தன் தலை மண்ணோடு (குற்றத்தோடு) பலர்க்குங் காணப்படுகிறான்.

தன் நாட்களை நிரந்தரமாக அடங்கியே கழிக்கிறான்; அவனது வாக்கும் மனமும் எப்போதும் வித்யாஸப் படுகின்

றன. உயர்ந்த குணங்களை யடையவேண்டுமென்று பாடுபடுகி றான்; தன் வஞ்சனையான எண்ணங்களையே பின்னும் தழுவிக் கொள்ளுகிறான். ஏ! மதியிலீ! உன் உண்மையான நிலையை மறைக்க நீ எடுக்கும் ச்ரமம், உன் நிஜஸ்வரூபத்தை வெளிப் படுத்த எடுக்கும் ச்ரமத்தைக் காட்டிலும் அதிகமாக விருக்கி றது. ஞானம் பெற்ற குழந்தைகள் உன் மோசத்தைக்கண்டு சிரிக்கும். உன் வேஷம் வெளிப்பட்டால் உன்னிடத்திலேற் பட்ட அவமதிப்பு உன்னை வெறுப்புக்கு உட்படுத்தும்.

# ஏழாவது காண்டம்.

---

## மனிதப்பொது.

## 1-வது அத்யாயம்.

### HUMAN FRAME AND STRUCTURE.

### மனிதயாக்கையும் அதன் அமைப்பும்.

மனிதனே? மண்ணால் பிண்டம் பிடிக்கப்பட்ட பிள்ளையே! நீ பலவீனமாயும் அறிவீனத்தோடும் இருக்கவும், தாழ்ந்து நடக்க வேண்டியதாயிருக்கவும், ஸர்வக்ஞனுகை உன்னை மதித்து உன் மனோபாவனைகளில் பெருமை கொள்ளுவாயா? உன் ஸந்நிதியில் ஸர்வசக்தியும் வெளிப்பட எதிர்பார்ப்பாயா? உனது சரீர அமைப்பைக் கருதிப்பார். பயப்படத்தக்க விதமாகவும் ஆச்சர்யப்படத்தக்க விதமாகவும் நீ ச்ருஷ்டிக்கப்பட்டிருக்கிறாய், ஆகையால், உனது ச்ருஷ்டி கர்த்தாவைப் பயபக்தியோடு ஸ்தோத்ரம் பண்ணுவாயாக; மர்யாதையுடன் அவரெதிரில் களிகொள்ளுவாயாக.

எல்லா ப்ராணிகளிலும் நீ நிமிர்ந்து நிற்பதன் காரணம் என்ன? அவருடைய ச்ருஷ்டி அதிசயங்களைக் கவனிக்கவே. அவருடைய ச்ருஷ்டியைக் கவனிப்பானேன்? அவற்றைக்கண்டு அதிசயிக்கவே. ஏன் அதிசயிக்கவேண்டும்? அவற்றையும் உன்னையும் படைத்த கடவுளை வணங்கவே. சேதன அறிவு ஏன் உன்னிடத்தில் மாத்ரம் வைக்கப்பட்டுள்ளது? அது எங்கிருந்து உனக்குக் கிடைத்தது?

மாம்ஸத்தினுல் நினைப்பது முடியாது—எலும்புகளினுல் ந்யாயா ந்யாயம் பார்ப்பது முடியாது. தன்னுடலைப் புழுக்கள் தின்றுமென்ற ஸங்கதி சிங்கத்துக்குத் தெரியாது. தன்னைக் கொல்லுவதற்காகவே மனிதன் தீனிபோடுகிறுன் 'என்ற ஸங் கதி காளைமாட்டுக்குத் தெரியாது.

"வெறியயர் வெங்களத்து வேனமகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள குண்டன்ன மன்ற மகிழ்ச்சி
யறிவுடை யாளர் கணில்."

நாம் பார்ப்பவற்றிற்கு ஒத்திராத ஏதோ ஒன்று உன் ளுேடு சேர்க்கப்பட்டிருக்கிறது. உன் இந்த்ரியங்களால் அறிய முடியாத ஏதோ ஒன்று உன்சரீரத்துக்கு விஷயங்களைப்புகட்டு கின்றது. அதென்னவென்று கவனி. அது ஓடிப்போன பிறகும் உன் சரீரம் ஸம்பூர்ணமாயிருக்கிறது. அதனுல் அது உன் சரீரத்தின் ஒரு பாகமல்ல. அது சித்ரூபமானது—அது என்று முள்ளது. அது தன்னிச்சைப்படி நடக்கவல்லது. அதனுல், அது தன் செயல்களுக்கு உத்தரவாதம் பண்ண வேண்டியது.

கழுதை தன் பல்லால் புல்லைக் கடிக்க முடியுமானுலும் அதற்கு ஆஹாரத்தின் உபயோகம் தெரியுமா? முதலையினது முதுகெலும்பு உன்னுடையதைப்போல நேராகவிருந்தாலும், அது உன்னைப்போல நிமிர்ந்து நிற்க முடியுமா? கடவுள் அவற்றை ச்ருஷ்டித்ததுபோலவே உன்னையும் ச்ருஷ்டித்தார். அவற்றிற்கெல்லாம் பின்னர் நீ ச்ருஷ்டிக்கப்பட்டாய். அவற் றிற்கு மேலான பதவியும் அவற்றை அடக்கியாளும் கௌரவ மும் உனக்குக் கொடுக்கப்பட்டது. அவருடைய அம்சமாகவே ஞானதத்துவத்தை உனக்கு அறிவித்தார்.

ஜடத்தையும் சித்தையும் கலந்து உன்னை ச்ருஷ்டித்த கடவுளது உயர்வைக் கருது. அவருடைய சிறு அம்சம் உனக்குள் இருப்பதைக் கவனி. உன் கௌரவத்தைப் பார்த்துக்கொள்! பாபஞ் செய்யத் துணியாதே. பாம்பின் வழியைக் கண்டு அஞ்சும்படி செய்தது யார்? குதிரைக்குக் கனைப்புக் கற்பித்தவர் யார்? பாம்பை மிதித்துக்கொல்லவும், குதிரையைப் பழக்கி வளர்க்கவும் உனக்குக் கற்பித்தவர் அவரே.

## 2-வது அத்யாயம்.

### இந்த்ரியங்களின் பயன்—THE USE OF THE SENSES.

அழகாயமைந்திருக்கிறதென்று உன் சரீரத்தையும், உன் ஆத்மா வஸிக்கிற விடமென்று உன் ஹ்ருதயத்தையும் பற்றி வியந்து கூறுதே. வீட்டுயஜமானன் வீட்டுச் சுவர்களைக் காட்டிலும் கவனிக்கத் தகுந்தவனல்லவா? விதை நடுவதற்கு முன் நிலத்தைப் பண்படுத்த வேண்டும். குயவன் பீங்கான் செய்வதற்குமுன் சூளை கட்டித் தயார் செய்துகொள்ள வேண்டும்.

மனிதனே! ஸமுத்ர ஜலத்தை நோக்கி, 'இவ்வழியாக உன் அலைகள் செல்லவேண்டும். இவ்வளவு உயரமே உன் அலை பொங்கவேண்டும், அதற்கு அந்யமாக நடக்கக்கூடாது.' என்று கடவுள் ஆக்ஞாபிப்பது போல, உன் ஆத்மா உன் சரீரத்தை ஏவி நடத்தட்டும்; உன் சரீரத்தைத் தன் சக்திக்குள் அடக்கி வைக்கட்டும். உன் ஆத்மா உன் சரீரத்துக்கு ஒரு அரசன். அவனது குடிகள்—(இந்த்ரியங்கள்). அவன் ஆணையை மீறவிடாதே.

உன் சரீரம் உலக உருண்டை போன்றது. உன் எலும்புகள் அதனை ஸரியாக நிறுத்தும் தூண்களாம். ஸமுத்ர

மானது தன்னிடத்து ஆறுகள் மூலமாய்ப் பாயும் நீரூற்றுக் களுக்கு ஆதாரமாவதுபோல உன் ஜீவசக்தி ஹ்ருதயத்தி லிருந்து வெளிப்பரவித் தன்னிடத்திற்கு மீண்டும் வந்து சேர் கிறது. அவ்விரண்டும் எப்போதும் இம்மாதிரியே ஓடிக்கொண் டிருக்கின்றனவல்லவா? இவ்விரண்டும் கடவுளாலமைக்கப்பட் டன வென்பதை எண்ணிப்பார்.

உன் நாசி வாஸனையறியவும் உன் வாய் ருசியான பொருள்களைத் தின்னவும் ஏற்பட்டவையல்லவா? என்றாலும் அதிக நேரம் மூக்கு வாஸனையை முகர்ந்துகொண்டிருந்தால் தோஷகரமென்பதை யறி; சுவையான உணவுகள் அம்மாதி ரியே அளவுக்கு மிஞ்சினால் விஷமாகின்றன (அருவருப்புக் கிடமாகின்றன.)

உனக்காகக் காவல் காக்கும் காவலாளர்களல்லவா உன் கண்கள்? எனினும், எவ்வளவு தரம் அவை ஸரி பிசகு கண்டு பிடிக்க முடியாமல் விழிக்கின்றன? உன் ஆத்மாவை மட்டுக்கு மிஞ்சிப் போகவிடாதே. உன் ஜீவன் ஸத்வ குணத்தி லேயே யிருக்கும்படி அதற்குப் போதி. இப்படியாக அதன் மந்த்ரிகளான இவ்விந்த்ரியங்கள் எப்பொழுதும் உண்மையாக நடக்கட்டும்.

உன் கையைக் கவனி! அது ஒரு அற்புதமாகத் தோன்ற வில்லையா? அதைப்போன்றது எப்போதாவது ச்ருஷ்டிக்கப பட்டிருக்கிறதா? அது எதற்காக உனக்குக் கொடுக்கப்பட் டிருக்கிறது? உன் ஸஹோதரனுக்கு உதவிபுரிவதற்காகவே. ப்ராணிகளிலெல்லாம் ஏன் நீ மாத்ரம் நாணமடையும் த்ராணி பெற்றிருக்கிறாய்? உலகம் உன் முகத்தைக் கண்டு உன் வெட்கத்தைத் தெரிந்துகொள்ளும்; அதனால் வெட்கத்துக்கு ஹேதுவான கார்யங்களைச் செய்யாதே.

ஏன் வெட்கமும் துக்கமும் உன் முகத்தின் செழித்த தேஜஸை அபகரிக்கவேண்டும்? குற்றத்தை விலக்கு, பயம் உனக்கடங்கியது என்றும், துக்கம் புருஷனுக் கியைந்ததல்ல வென்றும் உனக்குத் தெரியட்டும். உனக்கு மாத்ரம் ஏன் தூங்கும்போது ஸ்வப்னங்களுண்டாகவேண்டும்? அவைகளை அசட்டை செய்யாதே. கனவுகள் கடவுளிடத்திலிருந்து வருகின்றனவென்று அறிவாயாக.

மனிதனே! உனக்குத்தான் பேசும் திறமை யுண்டு. அத்தனை யுரிமை பெற்றதற்காக ஆச்சர்யப்படு; அவ்வாக்கு வல்லமையைத் தந்த கடவுளுக்கு உவப்பான ந்யாய ஸ்துதிகளைக்கூறு. உனது குழந்தைகளுக்கு ஞானத்தை யூட்டு— உன் வயிற்று மக்களுக்குத் தெய்வபக்தியைக் கற்றுக்கொடு.

## 3-வது அத்யாயம்.

### ஆத்மா-அதன் தோற்றமும் உணர்ச்சிகளும்

### THE SOUL—ITS ORIGIN AND AFFECTIONS.

மனிதனே! உன் புறக்கருவிகளுக்குக் கடவுள் தந்த ஆசீர்வாதமாவது, நோயின்மையும், வீர்யமும், அழகுமாம்; இவற்றுள் முதன்மையானது நோயின்மையாம். சரீரத்துக்கு நோயின்மைபோல ஆத்மாவுக்கு நேர்மையாம். உனக்கு ஒரு ஆத்மா வுளதென்பது நிச்சயமாய்த் தெரிந்த விஷயமாம்; அது நீ லகுவிற் கண்ட வுண்மையாம். அதனால் ஸாதுவாயடங்கியிரு; ஆத்மாவைப் பெற்றதற்காகக் கடவுளுக்கு நன்றியுறிவுள்ளவனாகவிரு. அதன் தன்மையை முற்றும் உணர ப்ரயாஸப்படாதே—அதை ஒருவராலும் முற்றிலும் அறிய முடியாது.

மனம், புத்தி, சித்தம், அஹங்காரம், இவற்றை ஆத்மா வென்று நினையாதே. இவை ஆத்மாவின் செயல்கள். இவை ஆத்மமூலத்தாகா. உன்னைப் பலரும் வெறுக்கும்படி ஆத்ம பாவனையை அதிகம் உயர்த்தாதே. மரமேறிக் கைவிட்டவர் களையொத்து நில்லாதே. அதற்காக உன் ஆத்மாவை ம்ருக ப்ராய்மாகவும் ஆக்கிக்கொள்ளாதே. பகுத்தறிவில்லாத குதி ரை கழுதைகளைப்போல விராதே.

ஆத்மாவின் திறமையால் ஆத்மாவைத் தேடிப்பார்; அதன் நற்குண நற்செய்கைகளால் அதனை அறி. அதன் தர் மங்கள் உன் தலைமயிரைக்காட்டிலும் அதிகமாயிருக்கின்றன. வானத்தில் காணும் நட்சத்ரங்களை யெண்ணினாலும் அவற் றை யெண்ண முடியாது. அராபியர்களைப்போலப் பலருக்கும் ஒரே ஆத்மாதான் பங்கிடப்பட்டிருக்கிறதென்றும் எண்ணாதே; அல்லது ஈஜிப்ட் தேசத்தாரைப்போல ஒருவனுக்குப் பல ஆத்மாக்களுண்டென்றும் எண்ணாதே. உனக்கு மனம் எப் படி ஒன்றோ அதுபோல ஆத்மாவும் ஒன்றென்று எண்.

வெயில் களிமண்ணைக் கட்டிப்படுத்துகிறதல்லவா? அதுவே மெழுகை உருக்குகிறதன்றோ? ஒரே ஸூர்யன் இர ண்டுவேலையும் செய்வதுபோல உன் ஒரு ஆத்மாவே ஒன்றுக் கொன்று மாறுபட்ட இரண்டு எண்ணங்களையும் இச்சிப்பது. இருட்டு தன்னைத் திரைபோலச் சூழ்ந்து மறைத்தாலும் சந்த் ரன் தன் ஸ்வபாவத்தை விடாது வைத்திருப்பதுபோல, ஒரு மூடனது உள்ளத்திலும் ஆத்மா குறைவற்றிருக்கிறது.

அது அழிவில்லாதது; மாறாதது; பலரிடத்தும் ஒரே நிலைமையிலிருப்பது; நோயின்மையானது ஆத்மாவின் வனப் பை வெளிக்காட்டுகிறது; முயற்சி அதற்கு ஞானமென்னும்

தைலத்தால் அபிஷேகம் செய்கிறது. வெளிப்பார்வைக்காக நீ பலவித தர்மங்களைச் செய்தாலும், வேத ந்யாயம் உன் ஆத்மாவுக்குக் கீர்த்தியைத் தராது. அம்மாதிரியே பலவித அக்ரமங்களையும் நீ செய்கிறாயென்று பலர் நினைத்தாலும் உன் ஆத்மாவை அருள் கோர நரகத்தில் சேர்க்கவும் சேர்க்காது அநந்நன்மை தீமைகள் உன்னுடையவையே; அவற்றிற்கு நீயே உத்தரவாதஞ் செய்யவேண்டும்.

மரணம் உன் ந்யாயத் தீர்ப்பை விலக்குமென்று நினைக்காதே. உன் கெட்ட காரியம் உன்னை விசாரணை செய்யவிடாதபடி உன்னை மறைக்காது; உன்னை எதிலிருந்து ச்ருஷ்டித்தார் என்று நீ அறியமுடியாதபடி உன்னை ச்ருஷ்டித்தவர், மறுபடியும் உனக்குத் தெரியாத நிலையிலிருந்து உன்னை யெழுப்ப முடியாதா ?

கோழிக்கு ஜாமம் தெரிவதில்லையா ? விடியற்காலத்து அது உபத்துக்கூவி யுனக்கு அறிவிப்பதில்லையா ? நாய்க்குத் தன் யஜமானனைத் தெரியாதா ? காயம்பட்ட கீரி தன் காயத்தை மாற்றும் பச்சிலையை நாடிப்போவதில்லையா ? எனினும் இவை சாகும். இவற்றின் ஜீவசக்தி சரீரத்தோடழிகிறது. உன் ஆத்மாதான் நித்யமானது (அழியாதது).

உன்னைக்காட்டிலும் இவைகளுக்கு உணர்ச்சி சிறந்திருப்பதால் இவற்றைக்கண்டு பொறாமைகொள்ளாதே. நல்ல வஸ்துக்களை யடைந்திருப்பதில் பயனில்லை; ஆனால், அவற்றை உபயோகிக்கத்தெரிந்த அறிவில்தான் பயனுண்டென்று அறி. உனக்கு மானின் செவிபோன்ற காதும், கழுகின் பார்வை போன்ற கண்ணும், நாயின் மோப்பம்போன்றறியும் நாசியும், மனிதக் குரங்கைப்போல ருசியறியும் தன்மையும், வண்டு

போன்ற உணர்ச்சியும் இருப்பதாக வைத்துக்கொள். பகுத்தறிவென்பதில்லாமற்போனால் அவை என்ன பயனைத்தரும்? மற்றிவை தம்மினத்தைப் போலவே யழிந்துபோகின்றனவல்லவா?

அப்பிராணிகள் எவற்றிற்காவது பேசுந்திறமையுண்டா? அவற்றில் ஏதாவது இன்னகாரணத்தால் இப்படிச் செய்ததாக உனக்குச் சொல்லக்கூடுமா? ஞானவான்களது வாய் ஒரு பணப்பெட்டியின் கதவுபோன்றது. அவர்கள் வாயைத் திறந்ததும், உன் முன் பொக்கிஷங்கள் விழுகின்றன. ஸரியான காலத்தில் சொல்லப்பட்ட நீதிவாக்யங்கள், வெள்ளிப்பாத்தியில் ஸ்வர்ணச்செடிகளை நட்டது போலாம்.

உன் ஆத்மாவைப் பற்றி நீ அதிக அஹம்பாவங்கொள்ளக் கூடுமா? அல்லது அதை அதிகம் ஸ்தோத்ரம் செய்யத்தான் இயலுமா? அது அதனைத் தந்த கடவுளது உருவமாம். அதன் பெருமையை ஸதா ஞாபகத்தில் வைத்துக் கொள். எவ்வளவு சிறந்த சக்தி உன்னிடத்தில் வைக்கப்பட்டிருக்கிறதென்பதை மறவாதே.

நல்லதாகத் தோன்றுவது கேட்டுக்கும் காரணமாகவிருக்கும். ஆகையால், ஆத்ம நடைகளை ஸன்மார்க்கத்திலேயே திருப்பு. ஜனஸமூஹத்தில் ஆத்ம விசாரத்தை மறந்துவிடலாமென்று நினையாதே. அதனை உன் அறைக்குள் புதைத்து விடமுடியுமென்றும் எண்ணாதே. செய்கைகளில் தான் ஆத்மாநந்தம். கர்மங்களைவிட்டு அதனை ஒரு க்ஷணம் பிரித்து வைக்கமுடியாது.

அதன் சலன சக்தி நிரந்தரமானது. அதன் முயற்சிகள் அகிலலோகத்திலுமுள்ளன. அதன் கதிக்கு மிஞ்சின

விரைவில்லை. அதன் லக்ஷ்யம் பூமியின் உன்னதமான மலையுச்சிகளையடைய வேண்டுமென்றிருந்தாலும், அதனை அது அடையும். நக்ஷத்ர மண்டலங்களுக்கு அப்புறமிருப்பினும் அதன் த்ருஷ்டி அதன்மேல் படும். விசாரம் செய்வதிலேயே அதற்கானந்தம். வறண்டு கொதிக்கும் பாலைவனத்தைத் தாண்டிச் செல்பவன் எப்படித் தண்ணீர் தண்ணீரென்று அலைவானோ அதுபோல ஆத்மாவும் அறிவைப் பெறவேண்டுமென்று வேட்கை கொள்ளுகிறது.

அது துடிக்குள்ளதாதலால் அதனைப் பாதுகாத்துக் கொள்; அது ஒழுங்கிற் கட்டுப்படாதாதலால் அதனை அடக்கியாள்; அது மூர்க்கமானதாதலால் அதனை ஸரிப்படுத்து. அது தண்ணீரைக்காட்டிலும் அதிகம் சலிக்கக்கூடியது; மெழுகைக்காட்டிலும் வளையக்கூடியது; வாயுவைக்காட்டிலும் இடங்கொடுக்கக் கூடியது; அதனைக் கட்டக்கூடியது ஏதாவது உண்டா?

பைத்யக்காரன் கையிலுள்ள கத்திபோன்றது யோசனையில்லாதவனது ஆத்மா. அதனைத் தேடிச்செல்பவன் அடைவது உண்மையே. அதனைக் கண்டுபிடிக்கும் வழி யுக்தியும் அநுபவமும் அன்றோ? ஆனால், இவை பலமற்றவையாயும் ஐயப்பாடுள்ளவையாயும், திரிபுஞானத்தோடு கூடினவையாயும் இருக்கின்றன. அதனால் உண்மைதான் எப்படி ஆத்மாவை யடையப்போகிறது?

பொதுஜன அபிப்ராயம் உண்மைதான் என்று சொல்லுவதற்கில்லை. ஏனெனில், பெரும்பான்மையோர் அறிவீனத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். உன்னைத்தானறிதலும், உனக்காதாரத் தலைவனை யறிதலும், அவனை வழிபடவேண்டியதற்

மகாமகோபாத்தியாய

[illegible]

குரிய ந்யாயங்களை யறிதலும் ஆகிய இம்மூன்றும் உன்கண்ணெதிரில் வெள்ளிடைமலைபோலத் தோன்றவில்லையா? இதைவிட மனிதன் வேறு யாது அறியக்கிடக்கிறதென்பதைக் கவனி.

## 4-வது அத்யாயம்.

### மனிதனது ஆயுளின் பர்வங்களும் உபயோகமும்.

### OF THE PERIOD AND USES OF HUMAN LIFE.

வானம்பாடிக்கு விடியற்காலத்தில் ப்ரியமிருப்பதுபோலவும், ஆந்தைக்கு மாலையினிடத்துள்ள ப்ரியத்தைப்போலவும், தேனீக்குத் தேனிடத்துள்ள ப்ரியம்போலவும், கழுகுக்குள்ள பிணவாசையைப் போலவும், மனிதனுக்கு ஆயுளினிடத்து ப்ரியமேற்பட்டிருக்கிறது. அவ்வாயுள் ப்ரகாசமாயிருப்பினும் கண் கூசுவதில்லை. அது மறைந்திருந்தாலும் அதனிடத்து அதிருப்தியுண்டாவதில்லை.

அது இனிமையாயிருந்தாலும் தெவிட்டுவதில்லை; பழுதுபட்டிருந்தாலும் தள்ளுபடியாவதில்லை. எனினும், அதன் உண்மையான மதிப்பை யறிந்தவன் யார்? ஆயுளை மதிக்க வேண்டியபடி மதிக்கக் கற்றுக்கொள்; அப்படிக் கற்றுக்கொண்டால் நீ ஞானத்தின் சிகரத்துக் கருகிலிருக்கிறாய் என்றறி. அதைக்காட்டிலும் விலைமதிப்புள்ளதில்லை என்று எண்ணும் பேதையோடும் சேராதே. அல்லது அதைத் துச்சமாக மதிக்கவேண்டுமென்கிற போலிமேதைகள் பேச்சையுங் கேளாதே. ஆயுளை அதற்காக நேசிக்காதே. ஆனால், அது பலருக்கும் ப்ரயோஜனகரமாயிருப்பதற்காக அதனை நேசி.

ஸ்வர்ணங் கொடுத்தாலும் ஆயுளை உனக்காக விலைக்கு வாங்கிக்கொள்ள முடியாது. நவமணிகள் பொதிந்த சுரங்கங்கள்

பலகோடி கொடுத்தாலும் சென்ற நாளைத் திரும்பப் பெற முடியாது. நின்ற நாள்களை ஸத்கார்யமுயற்சியில் செலவிடு. நீ பிறக்காமலிருந்திருந்தால் நன்மையாயிருந்திருக்கு மென்று சொல்லாதே. பிறந்த பிறகாவது உடனே செத்திருந்தால் எவ்வளவோ நலமா யிருந்திருக்குமென்றும் நினையாதே. 'தேவனே! என்னை ச்ருஷ்டிக்காமலிருந்திருந்தால் உமக்கு என்ன கேடுற்றிருக்கும்?' என்று உனது ச்ருஷ்டி கர்த்தாவை வினவத் துணியாதே! நன்மை உன் கைவசத்திலேயே யிருக்கிறது. அந்நன்மையின்மைதான் தீமை. உனது கேள்வி ந்யாயமாயிருந்தால் அதுவே உனக்கு ஆக்ஞை விதிக்கிறது.

தீனிக்குள் முள்ளிருக்கிற ஸங்கதி தெரிந்தால் மீன் தூண்டிலிலுள்ள தீனியை விழுங்குமா? தன்னைப் பிடிப்பதற்காகவே பரப்பப் பட்டிருக்கிறதென்று அறிந்தால் சிங்கம் வலைக்குள் நுழையுமா? இந்ததேஹத்தோடு ஆத்மா அழிவதானால் மனிதனும் ஆயுளோடிருக்க விரும்பமாட்டான்; தயாளுவாகிய கடவுளும் அவனை ச்ருஷ்டித்திருக்கமாட்டார். இச்சரீரத்தை விட்ட பின்னும் ஜீவித்திருப்பாயென்பதை இதனால் தெரிந்து கொள். தான் காண்பதற்கு முன் பட்சி கூட்டில் அடைக்கப்பட்டாலும் அது அக்கூட்டில் போதித்தன் சதையைக் கிழித்துக் கொள்ளாததுபோல, நீயும் உன் ஸ்திதியிலிருந்து ஓடிப்போக வேண்டுமென்று வீண் முயற்சி செய்யாமல், அது உனக்கு இறைவன் அளித்ததென்று எண்ணி த்ருப்தி யடைந்திரு.

உன் ஆயுளின் வழிகள் ஏற்றத் தாழ்ச்சியோடிருந்தாலும், அவையெல்லாம் கஷ்டத்தோடு கூடினவையல்ல. எல்லாவற்றிற்கும் உன்னை வஸதியாக்கிக்கொள். சிறிதும் தீமையில்லை போலத் தோன்றுகிற விடத்தில், பெரிய அபாயமுள்ளதென்

பதைக் கவனித்து ஸந்தேஹப்படு. நீ தரையிற் படுக்கும் போது உனக்குப் பயமில்லை. ரோஜாப்பூ பரப்பிய சயனத்தில் படுக்கும்போது முள் குத்தாதபடி பார்த்துக்கொள்.

கெட்டவாழ்வைவிட நல்ல மரணம் சிறந்தது. நீ எவ்வளவு காலம் இருக்க வேண்டுமோ அவ்வளவுகால மிருக்க முயலு. ஆனால் எவ்வளவுகால மிருக்கக் கூடுமோ அவ்வளவு காலமிருக்க ப்ரயாஸைப்படாதே, உனது மரணத்தைக் காட்டிலும் உனது உயிர்வாழ்வு பிறர்க்கு ப்ரயோஜனகரமானதாயிருந்தால் உன் ஆயுளைக் காப்பாற்றுவது உன் கடமையாம். உனக்கு ஆயுள் ஸ்வல்பமென்று பேதையைப் போலப் பிதற்றாதே! எவ்வளவு குறைந்ததோ அவ்வளவு கவலைகளும் குறைவு என்பதை நினைத்துக்கொள்.

உன் வாழ்நாட்களின் தொகையிலிருந்து அதன் உபயோகமற்ற காலங்களைக் கழித்துப்பார். எவ்வளவு மிருந்திருக்கிறது? குழந்தைப் பருவத்தையும் மறு குழந்தைப் பருவமாகிய வயோதிக காலத்தையும், நீ உறங்கிப் போக்கின காலத்தையும், உன்னுடைய கவனமில்லாமற்போன காலத்தையும், உனக்கு நோயிற் கழிந்த நாள்களையும், கழித்துப்பார்? நீ பூர்ண வயஸை பெற்றிருந்தாலும் எவ்வளவு பாகம் உனக்குப் பயன் பெற்றது?

"வேதநூற் பிராயநூறு மனிதர்தாம் பெறுவரேனும்
பாதியு முறங்கிப்போகும் நின்றதிற் பதினையாண்டு
பேதை பாலகனதாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலாற் பிறவிவேண்டே னரங்கமா நகருள்ளானே."

உனக்கு க்ருபை கூர்ந்து ஆயுளை வரமாகக் கொடுத்த கடவுள், அது அத்தன்மைத்தாகக் காணும்படியாகவே அத

லைக் குறைவாக்கினார். தீர்க்காயுள் பெற்றதனால் அது உனக்கு யாது பயனைத்தரும்? அதிக பாபங்களைச் செய்ய அவகாசம் கிடைக்கவேண்டுமென்று விரும்புகிறாயா? நன்மை செய்கிற தற்கே யென்பாயாயின் உனக்குக் கொடுத்த ஸ்வல்ப ஆயுட் காலத்தில் நீ செய்த நன்மை போதுமென்று அவர் திருப்தி யடைய மாட்டாரா?

துக்கத்தின் குழந்தையே! பின்னர் ஏன் நீண்ட ஆயுள் விரும்புகிறாய்? ஊதுகின்ற கொல்லுலையைப்போல உயிர்ப்பு வாங்கவும், உண்ணவும், உலகத்தைப் பார்க்கவுமா? இவை முழு வதும் நீ முன்பே அடிக்கடி செய்திருக்கிறாய். பலமுறை செய்ததையே திரும்பத் திரும்பச் செய்து நீ சலித்துப்போக வில்லையா? அச்செய்கை மட்டுக்குமிஞ்சினதாகக் காணப்பட வில்லையா?

இல்லை யென்றால், உன்னுடைய ஞானத்தையும், நல் லொழுக்கத்தையும் விருத்திசெய்து கொள்ளவேண்டுமென்று எண்ணமா? அந்தோ! மகனே! அறிவதற்கு நீ யார்? உனக்கு யார் வித்தை கற்பிக்க நிற்கிறார்? உனக்குள்ள கொஞ்ச காலத் தையும் வீணில் செலவிடுகிறாய். அதனால் இன்னும் அதிகம் கொடுக்கப்படவில்லையேயென்று குறை கூறாதே. ஞானம் கிடைக்கவில்லையே யென்று துக்கித்து வருந்தாதே. அது உன்னுடலோடழியும்; இம்மையில் யோக்யனாயிரு, மறுமை யில் நீ ஞானியாயிருப்பாய்.

'உனக்கு ஏன் ஏழுமடங்கு ஆயுள் ஏற்பட்டிருக்கிறது?' என்று காகத்தைக் கேளாதே. 'உன் கண்கள் நூறு தலைமுறை என் ஸந்ததியாரைப் பார்க்கும் யோக்யதை எப்படிப் பெற் றன?' என்று மானை வினவாதே. அவை யுன்னைப்போல

ஆயுட்காலத்தைத் துர்விநியோகஞ் செய்கின்றனவா? அவை களித்துக் கூத்தாடுகின்றனவா? துஷ்டச் செய்கைக ளுக்கும் போகின்றனவா? உன்னைப்போல நன்றிகெட் டவையா? புனித வாழ்வும், கபடமற்ற நடையுமே, நீண்ட ஆயுளையடையும் மார்க்கமென்று அவற்றினிடத்திருந்தாவது கற்றுக்கொள்.

அவற்றைக் காட்டிலும் நன்றாக உனக்கு வாழ்நாளைக் கழிக்கத் தெரியுமா? அப்படித் தெரியாதபோது அவற்றைக் காட்டிலும் குறைந்த ஆயுள் உனக்குப் போதுமானது. தனது கொடுமையான ஆட்சி ஸ்வல்ப காலந்தான் நிற்குமென்பதை உணர்ந்த மனிதன் உலகத்தைத் தனக்கடிமையாக்கிக் கொள் ளத் துணிவானானால், தனக்குச் சாச்வத வாழ்வு பெற்றானா யின் யாது தான் பெறக் கருதான்?

உனக்கு வேண்டிய ஆயுள் கிடைத்திருந்தது; ஆனால், நீ அதனை ஆதரித்துப் பேணவில்லை. உனக்கு ஆயுளில்லாம லில்லை, மனிதனே! ஆனால், நீயதனை வீண் செலவிடுகிறாய். உனக்கு அளவுக்கதிகம் கிடைத்திருப்பதால் நீ உன் வாழ் நாளை அல்பமென்று தள்ளிவிடுகிறாய். எனினும், போன நாட் கள் மீண்டும் நமக்குக் கிடைக்கவில்லையே யென்று வ்யஸனப் படுகிறாய்! யதேஷ்டமாயிருப்பதல்ல செல்வத்துக்குக் கார ணம்; ஆனால், செட்டாயிருப்பதுதான் காரணமென்பதைத் தெரிந்துகொள்.

ஞானவான் இளமையிலிருந்தே நன்றாய் வாழ ஆரம்பிக் கிறான்; ஆனால், மூடனோ சாகிறவரையில் நன்றாய் வாழத் தொடங்கிக்கொண்டே யிருக்கிறான். முதலில் செல்வத்தைத் தேட முயன்று, பிறகு அதனை அநுபவிப்போமென்று கரு

தாதே. நடைபெறுங் காலத்தை நழுவவிடுகிறவன் தன்னிடத்திலுள்ளவற்றை எறிந்துவிடுகிறவனுவான். யுத்தவீரன் அறிவதற்கு முன்னர் எதிரியினது அம்பு அவனது மார்பில் தைத்து ஊடுருவுவது போலத் தனக்கு ஆயுள் கிடைத்திருக்கிறதென்ற நல்லுணர்வு ஒருவனுக்கு வருவதன்முன் அவன் வாழ்நாள் அவனைவிட்டு விலகிவிடும்.

பின், மனிதன் விரும்புகிற ஆயுள்தானென்ன? அவன் வைத்துக்கொள்ள ஆசைப்படும் ச்வாஸம் தானென்ன? அது மாயையல்லவா? அவதிகளின் சோலையல்லவா? நாலா பக்கங்களிலும் பிணைக்கப்பட்ட தீமைகளைப் பின்பற்றுவதல்லவா? ஆரம்பத்தில் அறியாமையிலும், மத்தியில் கஷ்டத்திலும், முடிவில் துக்கத்திலுமாக அது கழிகிறது. ஒரு அலை மற்றோரலையில் மோதி இரண்டும் அவற்றிற்குப் பின்னுள்ள அலைக்குள் சிக்கிக்கொள்ளுவதுபோலவே, மனிதனது வாழ்நாளில் தீமைகள் ஒன்றையொன்று தொடர்கின்றன.

நடை முதலிலேற்பட்டிருக்கும் பெருங் கஷ்டம், கழிந்துபோன சிறு கஷ்டத்தை விழுங்குகிறது. நமது பயங்கள் உண்மையான தீமைகளாம்; நாம் அஸம்பாவிதங்களை எதிர்பார்க்கிறோம். என்ன மூடர்கள்! மரணதீனப்பட்டவர்கள் போலப் பயப்படவும், நித்யவாழ்வு பெற்றவர்கள்போல ஆசைப்படவும் செய்கிறோம்.

நமது வாழ்நாளின் எந்த பாகம் நம்மோடிருக்க விரும்புவோம்? யௌவனமா? அப்படியானுல் கலஹாஸ்பதமான சிற்றின்பங்களில் மூழ்கித் துணிவுகொண்டு திரிய விரும்புகிறோமா? அல்லது வயோதிகமா நாம் விரும்புவது? நமக்குத் தள்ளாமையோடிருக்க ப்ரியமா?

நரை திரையாளர்க்கு மர்யாதை நடக்குமென்றும், நீண்ட ஆயுள் பெறுவது கண்யமென்றும் சொல்லுகிறார்களே! நல்லொழுக்கம் வாலிபப்பருவத்துக்கு மர்யாதையைத் தரும். ஒழுக்கத்தினின்று இழுக்கின வாலிபனது வயோதிகம் அவனது நெற்றியிற்றோன்றும் கோடுகளைக்காட்டிலும் அதிகமான நிலைகளை அவனது ஆத்மாவில் உண்டுபண்ணும்.

'வ்ருத்த நாரீ பதிவ்ரதா' என்று வயோதிகத்துக்கு மர்யாதை நடக்குமா? வயோதிகத்துக்குக் காம இன்பங்களிடத்து ப்ரியமிருந்தாலும் காமவின்பங்கள் வயோதிகத்தை வெறுக்கும்போது, இவ்வயோதிக மர்யாதையில் என்ன ந்யாயமிருக்கிறது? நீ யௌவனத்தோடிருக்கும்போது நல்லொழுக்கமுள்ளவனாகவிரு. அப்படியிருந்தால், உன் வயோதிகத்துக்குக் கண்யமுண்டாகும்.

# எட்டாவது காண்டம்.

---

## மனிதனது துர்ப்பலமும் அதன் விளைவும்.

## MAN-HIS INFIRMITIES AND THEIR EFFECTS.

### 1-வது அத்யாயம்.

### டம்பம் (வெறுமை)—VANITY.

உறுதியின்மை யென்பது எப்பொழுதும் மனிதனிடத்தி லிருக்கிறது; அமிதத்வம் அவனைத் தன்னிஷ்டப்படி நடத்து கிறது; வக்கம் அவனை முக்கால்வாசி மூடிக்கொள்ளுகிறது; 'எனக்கோரெதிரின்றி நான் குடிகொண்டிருக்கிறேன்' என்று பயம் விளம்பரப்படுத்துகிறது; ஆனால் இவற்றிற்கெல்லாம் மேலாக டம்பம் நிற்கிறது.

மனிதனுக்கு நேரும் துன்பங்களைக் கண்டு அழாதே; ஆனால், அவனது அக்ஞானங்களைக்கண்டு சிரிப்பாயாக. ஒரு டாம்பீகன் பெற்ற வாழ்நாள் கனவில்கண்ட பணம்போலாம். மனிதர்களில் கீர்த்திவாய்ந்த சுத்தவீரன், நொய்ய நீர்க்குமிழி யினும் மேலாவானா? பொதுஜன அபிப்ராயம் ஒரு நிலையா யிருப்பதில்லை. அவர்களுக்கு விச்வாஸமுமில்லை. பின்னர் ஓர் அறிவாளன் ஏன் மூடர்களினிமித்தம் தன்னை அபாயத் துக்குள்ளாக்கிக் கொள்ளவேண்டும்?

தனக்குப் பெரிய நிலைவரும்போது நடக்கவேண்டிய வழிகளை யெண்ணி, நடைபெறுங்காலத்து விஷயங்களைக் கவ னிக்காதிருக்கிறவன், தன் உண்டியை வேறொருவன் புசிக்க

விட்டுத் தான் வாயுபக்ஷணம் பண்ணுகிறவனை யொப்பாவான். உன் தற்கால நிலையில் உனக்குத் தகுந்த மாதிரியாக நடந்து கொள்; உயர்ந்த நிலைவரும்போது உனக்கு வெட்கப்பட வேண்டியிராது. டம்பத்தைப்போல ஒருவனது கண்ணை மறைப்பதும், ஒருவனைத் தன்னையறிய வொட்டாமற் செய்வதும், வேறொன்று மில்லை. அந்தோ ! உன்னை யுனக்குத் தெரியாதபோது ஏனையோர் உன்னைத் துல்யமாகக் காண்கிறார்கள்.

உன்னத நிலைக்கு வந்து ஒரு யோக்யதையுமில்லாத மனிதன், வாஸனையில்லாது அலங்காரமாய் உபயோகமில்லாமல் பலர் கண்ணிலும் பட்டுக்கொண்டிருக்கிற பூவரசம் பூவை ஒத்திருக்கிறான். ஒரு டாம்பீகனது மனது த்ருப்தியடைந்திருப்பது போலக் காணப்பட்டாலும் அதற்கு ஓய்வில்லை. அவ்வோய்வில்லாத ஸங்கதியை மறைக்க முடியாது. தன்செயலுக்கு மீறி நினைக்கிறான். தனக்குப் பிறகு தன் பேர் நிற்குமென்று எண்ணுகிறான். அவன் கீர்த்தியைப் பேசுவதாக ஒப்புக் கொண்டவர்கள் அவனை மோசஞ் செய்கிறார்கள்.

தான் இறந்த பிறகு தன் ஆத்மாவுக்குப் புகழ் ஏற்பட வேண்டும் என்று எண்ணிச் செய்பவன், தான் பரலோகத்தில் ஸங்கடப்படக் கூடாதென்று ஒரு பெண்ணை மணந்து விதவையாக விட்டுப் போகிறவனை யொத்திருக்கிறான். நீ உயிரோடிருக்கும்போது நல்ல கார்யங்களைச் செய். அதைப்பற்றிப் பிறர் சொல்லுவதைக் கவனியாதே. உனக்குள்ள கீர்த்தி உனக்குப் போதுமென்று த்ருப்தியடை. உன் ஸந்ததி அதைக்கேட்டு ஸந்தோஷப்படட்டும்.

தன் நிறம் தனக்குத் தெரியாத வண்ணாத்திப்பூச்சியைப்

போலவும், தன் வாஸனை தனக்குத் தெரியாத மல்லிகைப் பூவைப்போலவும், டாம்பீகன் தன் டம்பத்தைத் தானுணராது பிறர் அதனைக் கவனிக்கும்படி செய்கிறான். பிறர் கவனிக்காத பக்ஷத்தில் அல்லது உலகமறியாதுவிடில், தான் அணியும் பட்டாடைகளும், தான் உண்ணும் பஞ்ச பக்ஷ்ய பரமான்னங்களும் என்ன ப்ரயோஜனம் என்று சொல்லிக்கொள்கிறான். உன் உடையைத் துணியில்லாதவர்களுக்குக் கொடு. உன் ஆஹாரத்தைப் பட்டினியா யிருப்பவர்களுக்குப் போடு. அம்மாதிரியாக உனக்குப் புகழ் ஏற்படட்டும்; அப்புகழ்தான் உனக்குத் தகுந்ததென்று நீ யுணர்வாயாக.

உலகம் கொஞ்சமும் பொருட்படுத்தாத முகஸ்துதிகளை ஏன் ஒருவனுக்களிக்கிறாய்? உன்னை யாராவது முகஸ்துதி செய்வார்களானால் நீ அதனைத் தெரிந்து கொள்வாயல்லவா? அதனை நீ பொருட்படுத்துவாயா? நீ பொய்சொல்லுவது அவனுக்குத் தெரியும் என்றாலும், அதற்காக அவன் உனக்கு நன்றி கூறுவான் யென்றும் தெரியும். உண்மையாகப் பேசு.

டாம்பீகன் தன்னைப்பற்றிப் பேசிக்கொள்ளுவதிலேயே களிப்படைகிறான். மற்றவர்கள் அதைக் கேட்க விரும்புவதில்லை யென்பதை யவன் மறந்துவிடுகிறான். அவன் ஏதாவது புகழுக்குரித்தானதைச் செய்திருந்தாலும்,பிறர் மதிக்கக் கூடியது ஏதாவது அவனிடத்திருந்தாலும், அதையெடுத்துப் பலர்க்கும் சொல்லுவதில் அவனுக்கு ஸந்தோஷம்; அதைப் பிறர் சொல்லக் கேட்பதில் அவனுக்குப் பெருமை. அப் பேர்ப்பட்டவனது எண்ணம் அவனையே முறியடிக்கிறது. ஜனங்கள் அவனைப்பார்த்து ‘இவன் இவ்வரிய பெரிய காரியம் செய்தான், இவனிடத்து இச்சிறந்த பொருளுண்டு’ என்று

சொல்லுவதில்லை. ஆனால் ‘ தனக்கு அது கிடைத்தது என்று எவ்வளவு கர்வப்படுகிறான் பார்.’ என்று பேசிக்கொள்ளுகிறார்கள்.

மனிதனது மனது, பல விஷயங்களை ஒரே ஸமயத்தில் கவனிக்க முடியாது. படாடோபத்தில் தன் மனதைச் செலுத்துபவன் உண்மையைக் கைவிட்டுவிடுவான். ஓடும்போது உடைந்துபோகும் குமிழியைப் பின்பற்றித் தனக்குக் கண்யத்தைத் தரும் விஷயங்களை மண்ணில் மடியச் செய்கிறான்.

## 2 - வது அத்யாயம்.

### கடைப்பிடியின்மை—INCONSTANCY.

மனிதனே ! ஸ்வபாவமே உன்னை ஒரு கார்யத்தில் நிலைத்து நில்லாதபடி கலைக்கிறது. அதனால் அதன் மோசங்களுக் குள்ளாகாதபடி உன்னை எப்பொழுதும் காத்துக் கொள். மாதாவினது கர்ப்பத்திலிருந்தே நீ ஸஞ்சல சித்தனாய்ப் பிறந்தாய். உன் தந்தையின் கருவிலிருந்து உறுதியின்மையைப் பிதிரார்ஜிதமாக அடைந்தாய். பின் புருஷதர்மங்களி*லொன்றாகிய கடைப்பிடியில் நீ எப்படி உறுதியாக நிற்கக் கூடும் ?

உனக்குச் சரீரத்தை யளித்தவர்கள் துர்ப்பலத்தையும் அதனோடுடன்கூட்டினார்கள். ஆனால், உனக்கு ஆத்மா அளித்தவர் உனக்கு நிர்ணயபுத்தியை ஆயுதமாக அளித்திருக்கிறார். அதனை உபயோகித்தால் நீ புத்திமானாயிருப்பாய். அப்படிப் புத்திமானாயிருந்தால் நீ ஸுகவானாயு மிருக்கக்கூடும்.

---

* அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்பன 4-புருஷதர்மங்கள்.

காரியங்களை நன்றாய்ச் செய்பவன் தன் திறமையைப்பற்றிப் பெருமை கூறுதிருக்கட்டும். ஏனெனில் அவை அவனிச்சையால் நடந்ததல்ல. 'ஆராயும் வேளையில் ப்ரமாதியாறுஊம் ஐய ஒரு செயலுமில்லை.'

அவை வெளியே யிருந்து தோன்றின ஒரு ஹேதுவின் பயனல்லவா ? தடுமாற்றத்திலேயே பிறந்து, உபகுணங்களால் நெருக்கப்பட்டு, ஏதோ ஒரு வெளிச்சக்தியால் காரியங்கள் நடைபெறுகின்றன வென்றால் அவ்வெளிச் சக்திக்கும், உபகுணங்களுக்கு மன்றோ பெருமை ? அப்பெருமை உன்னுடையதென்று பேசுவதெப்படி ? உன் செய்கைகளை நிறைவேற்றுவதில் ஸஞ்சலபுத்தி யுள்ளவனாயிராதே. அவற்றைப்பற்றி நினைப்பதிலும் துணிவை விட்டுவிடாதே. இப்படி விட்டு விடாதிருப்பாயானால் உன் ஸ்வபாவத்தின் இரண்டு தவறுதல்களையும் ஜயித்தவனாவாய்.

ஒன்றோடொன் றொவ்வாத காரியங்களைச் செய்வதைக் காட்டிலும் பகுத்தறிவிற்குத் தீங்குவிளைப்பதெது ? இவற்றிற் செல்லும் மனப் பாங்குகளை மனவுறுதி தவிர பின் எவை யடக்கமுடியும் ? கடைப்பிடி யில்லாதவனுக்கு அவன் மாறுகிறதன்மை தெரியும். ஆனால், அதன் காரணம் அவனுக்குத் தெரியாது. ந்யாயமான காரியங்களைவிட்டுப் பிசக முடியாதவனாயிரு. பின் மனிதர் உன்னை நம்புவார்கள்.

உன் நடையைப்பற்றிய விதிகளைத் தீர்மானப்படுத்திக் கொள். அவற்றை நீ எப்போதும் அநுஸரிப்பதையும் பார். உன் கொள்கைகள் ந்யாயமானவையாவென்று முதலில் கவனி. பின் அவற்றின்படி நடப்பதினின்று பிறழாதே.

அவ்விதமாக நடந்து உன் பாசங்கள் உன்னை மேற்கொள்

ளாதபடி பார். அதனால், உன்னிடத்துள்ள நன்மைகளை உன் கடைப்பிடி உறுதிப்படுத்தும். உன் துரதிர்ஷ்டங்கள் உன்னை யணுகாதபடி அவை ஓட்டும். கவலையும், விஷாதமும் (காரியபங்கத்தினால் வரும் துக்கம்) உனக்கு எப்பொழுதும் உண்டாகா.

உனக்கு ப்ரத்யக்ஷமாகக் கண்ணுக்குப் படும்வரையில் ஒரு தீங்கையும்பற்றி நீ ஸந்தேஹிக்காதே. ஒருமுறை கண்ட பிறகு அதனை மறக்காதே. சத்ருவா யிருந்தவன் ஸ்நேஹனா யிருக்க முடியாது. ஏனென்றால், மனிதன் தன் குற்றங்களைத் திருத்திக்கொள்ளுகிறதில்லை.

தன் நடைக்கென்று ஒரு ஒழுங்கில்லாதவனுடைய செய்கை எப்படி ந்யாயமாயிருக்க முடியும்? காரணகார்ய ந்யாயத்தோடு பொருந்தாத எதுவும் நீதியா யிருக்க முடியாது. கடைப்பிடி யில்லாதவனது ஆத்மாவுக்கு மனச்சாந்தியில்லை. அவனோடு ஸ்நேஹம் பண்ணுகிற எவனும் மனவாறுதலோடிருக்கமுடியாது.

அவனது வாழ்நாள் ஏற்றத்தாழ்வோடு கூடியிருக்கும்; அவனது நடை ஒழுங்கீனமாயிருக்கும்; அவனது மனம் அடிக்கடி மாறிக்கொண்டே யிருக்கும். இன்று அவன் உன்னை நேசிப்பான். நாளைக்கு உன்னை வெறுப்பான். ஏன்? ஒரு வேளை உன்னை விரும்பினதற்கும் மற்றொருவேளை உன்னை வெறுத்ததற்கும் காரணம் அவனுக்கே தெரியாது. இன்று அவன் கொடுங்கோன்மன்னனா யிருக்கிறான். நாளைக்கு அவனது வேலைக்காரன் அவனிடத்து அவ்வளவு பணிவாயிருப்பதில்லை. ஏன்?

பலமில்லாமல், செருக்குக் காட்டுகிறவன், பணியாதவர்களுக்குக் குற்றேவல் செய்வான். இன்று ஆராதூரியாய்த்

தின்பான். நாளைத் தின்னவேண்டிய வஸ்துக்கள் நன்றாயில்லாதபோது வாயோடு எரிந்து பேசிக்கொள்ளுவான். மிதந் தெரியாதவனுடைய செய்கை இப்படித்தான். ஒரு நிமிஷத்துக்குப் பிறகு பசும்புல்லைப்போல் நிறம் மாறும் பச்சோந்தியைப்பார்த்து அது கறுப்பு என்று சொல்லுவதெப்படி ?

அத்தகைய மனிதனுடைய வாழ்வு ஸ்வப்நத்திற்கானும் வெளியுருவைத் தவிர வேறென்ன ? காலையில் களிப்போடெழுகிறான்; நடுப்பகலில் ஸஹிக்கமுடியாதபடி கவலைப்படுகிறான். இந்தநிமிஷம் அவன் தன்னைக் கடவுளென்று பாவிக்கிறான். அடுத்தநிமிஷம் தன்னைச் சிறுபுழுக்களிலுங் கடையனென மதிக்கிறான். ஒரு கணம் சிரிக்கிறான், மறுகணம் அழுகிறான். இப்பொழுது ஒருகார்யத்தைச் செய்வதெனத் தீர்மானிக்கிறான். உடனே அத்தீர்மானம் நழுவி விடுகிறது. அதற்கடுத்த நிமிஷத்தில் தீர்மானித்தானோ இல்லையோவென்பதே யவனுக்குத் தெரியாது.

என்றாலும், சாந்தியாவது, தடுமாற்றமாவது அவனிடத்து நிலைத்ததாகத் தெரியவில்லை. அவன் முன்னிலும் மேம்படவுமில்லை; தாழவுமில்லை. அவனுக்குத் துக்கிக்கவும் ஹேதுவில்லை; அவன் களிகூறவும் காரணமில்லை. அதனால் அவனிடத்து ஒன்றுந் தங்குவதில்லை. மனவுறுதியற்றவர்களது இன்பம் மணல்தரையிற் கட்டிய மாடம்போலாம். ஒரு பெருங்காற்று அதன் அஸ்திவாரத்தையே யசைத்துவிடும். அதனால் அந்த இன்பம் கெட்டதென்று கேட்பதில் புதுமையென்ன ?

இடையூறில்லாமல் ஒருபடித்தாய்ச் செல்லும் நடையில் ஒழுகிக்கொண்டு ஆகாசத்துக்கும் பூமிக்குமாக நிமிர்ந்து

தோன்றும் இவ்வுருவம் யாது? அதன்புருவத்தில் கம்பீரம் த்வனிக்கிறது. அதன்போக்கில் உறுதிதெரிகிறது. அதன் ஹ்ருதயத்தில் சித்தசாந்தி அரசுபுரிகிறது. வழியில் தடைகள் காணப்படினும் அது அவற்றை இழிவாயெண்ணித் தள்ளுவதில்லை. பூமியும் வானமும் எதிர்த்தபோதிலும் அது முன் வைத்த காலைப் பின்போக்காமற் செல்லுகிறது.

அதன் காலடிக்கீழ் மலைகள் அழுந்துகின்றன. ஆழமான ஸமுத்ரஜலம் அதன்பாதங்கள் பட்டவுடனே வற்றிக் காட்டுகிறது. புலி அதனை வழிக்கட்டி மறித்தாலும் பயன் பெறுவதில்லை. வேங்கையின் புள்ளித்தோல் அதன் லக்ஷ்யத்தில் படுவதில்லை. அணிவகுத்த சேனைகளையும் அது தன்னாற்றலால் கடந்து செல்லுகிறது. தன் பல மஹிமையால் மரண பயத்தைத் தவிர்க்கிறது.

அதன் தோள்களுக்கருகில் புயற்காற்று கர்ஜிக்கிறது. ஆனால், அது அதனை யசைப்பதில்லை. அதன் தலைக்குமேல் இடி பயமன்றி முழங்குகிறது. அதன் முகவொளியைப் பிறருக்குக் காட்டவென்றே மின்னல் வீசுகிறது. அதன் பெயர் 'தீர்மானம்' என்பதாம். அது பூமியின் மறுகோடியிலிருந்து வருகிறது. தூரத்தில் தோன்றுகிற இன்பம் அதன் கண்ணுக்கு நன்றாய்த் தெரிகிறது. அவ்வின்பத்தின் ஆலயம் த்ருவங்களுக் கப்புற மிருப்பதைக் காண்கிறது.

அவ்வுருவம், அக்கோவில்வரையில்சென்று, துணிவாய் உள்நுழைந்து, அங்கேயே என்று மிருக்கிறது. மனிதனே! ந்யாயமெதுவோ அதனிடத்தில் உன்மனத்தை நிறுத்து. மனிதர் உனக்களிக்கும் ச்லாக்யம் அசைக்கக்கூடாததா யிருக்க வேண்டுமென்று அறிவாயாக.

## 3-வது அத்யாயம்.

### துர்ப்பலம்—WEAKNESS.

அபூரணவஸ்துவின் குழந்தையே! டம்பமும், நிலையின்மையும் உன்னிடத்தில் குடிகொண்டிருக்க நீ துர்ப்பலத்தோடிராது பின் எம்மாதிரி யிருக்கக்கூடும்? நிலையின்மையும், தளர்வும் ஒன்றோடொன்று ஸம்பந்தப்பட்டவை யல்லவா? துர்ப்பலமின்றி டம்ப மிருப்பதுண்டா? டம்பத்தினால் வரும் அபாயத்தை நீக்கினால் துர்ப்பலத்தால் நேரும் தீங்கும் உன்னைவிட்டு விலகும். உனக்கு எவ்விஷயத்தில் அதிக துர்ப்பலம் ஏற்பட்டுள்ளது? நீ எதனிடத்தில் அதிகம் பலமுள்ளவனைக் காணப்படுகிறாயோ, எந்த நல்ல குணத்தினிடத்து நீ அதிகம் பெருமைபாராட்டுகிறாயோ, அதினிடத்திலேயே, உன்னிடத்திலுள்ள வஸ்துவை வைத்திருப்பதிலும் கூட, உன்னிடத்திலுள்ள நற்குணங்களைக் கருவிப்படுத்துவதிலுங் கூட, உனக்குத் துர்ப்பலமுண்டு.

உன் ஆசைகள்கூட துர்ப்பலத்தா லானவையன்றோ? உன் விருப்பங்கள் தகும் தகாவென்றாவது உனக்குத் தெரியுமா? வேண்டுமென்று நீ அதிகம் ஆசைப்பட்ட வஸ்து, கிடைத்த பிறகும்கூட உனக்கு திருப்தியைத் தருவதில்லை. உன் கண்ணெதிரில் நிற்கும் இன்பம் தன் சுவையை இழக்கக் காரணமென்ன? இனிவரப் புகும் இன்பம் அதிகம் ஸுகமுள்ளதாகக் காணப்படுவானேன்? காரணம் சொல்லுகிறேன் கேள். முன் சொன்ன வின்பத்தின் நன்மை உனக்குச் சலித்துப் போயிற்று. பின் சொன்னதில் பொதிந்துள்ள தீமை உன் கண்ணுக்குப் படுவதில்லை. போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து.

" செல்வமென்பது சிந்தையின் நிறைவே
அல்காநல்குர வவாவெனப் படுமே"

த்ருப்தியே லோகத்துக்கு இன்றியமையாத தென்றறி. உனக்கென்று ஒரு விஷயத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள உனக்கு வன்மையுண்டா? நீ இச்சிப்பதையெல்லாம் கடவுள் உனக்குத் தந்தருளுவாரா? என்றும் மாறாதவின்பம் உன்னிடத்து நிலைத்திருக்குமா? ஸந்தோஷம் உன்னகத்திலேயே பொருந்தி யிருக்குமா? அந்தோ! உன் துர்ப்பலமே அதனைத் தடுக்கிறது. உன் தளர்ச்சியே அதற்கு விரோதமாகப் பேசுகிறது. நிரந்தர வின்பத்திற்குப் பதிலாக உனக்கு லோக துக்கங்கள் மாறிமாறி வருகின்றன. ஆனால், உன் நிலைத்த வின்பத்தை யளிப்பது எதுவோ அது நிலைத்தபொருளா யிருக்க வேண்டும்.

அப்பொருள் போனபின்பு அதனை யிழந்ததற்காகத் துக்கிக்கிறாய். உன்னிடத்தில் அப்பொரு ளிருந்தபோதோ நீ அதனை வெறுத்தாய். அதற்குப் பின்வருவது உனக்கு இன்பத்தைத் தருவதில்லை. அதைத் தேர்ந்தெடுத்ததற்காக நீ பின்பு வருத்தம் கொள்ளுகிறாய். நீ தவறிப்போகாத ஒரோவொரு வ்ருத்தாந்தத்தை கருதிப்பார். வஸ்துக்களைக்கண்டு ஆசைப் படுவதிற்காட்டிலும் வேறு எதிலாவது உன் துர்ப்பலம் தெரிகிறதா? ஆம், நீ நன்றாக ஆசைப்பட்ட வஸ்துக்களை யடைந்து அவற்றை யநுபவிப்பதிலிருந்து தெரிகிறது.

நல்ல வஸ்துக்கள் நாம் அநுபவிக்கும்போது அவற்றின் நன்மையை யிழந்து விடுகின்றன. எவ்வஸ்துக்கள் நமக்கின்பத்தைத் தருமென்று கடவுள் 'நியமித்தாரோ அவ்வஸ்துக்கள் நமக்குக் கைத்துவிடுகின்றன. விஷயாநந்தத்திலிருந்து துன்ப

மும், ஸாதகாநுபவத்திலிருந்து துக்கமும் ஏற்படுகின்றன. உன் விஷயாநுபவங்களில் மிதமுள்ளவனாகவிரு. அப்பொழுது தான் அவை உன்னிடத்து நிலைத்து நிற்கும். உன் ஸந்தோஷம் ந்யாயத்தில் நிலைத்ததாக விருக்கட்டும்; ஸந்தோஷம் முடிகிறவரையில் துக்கம் கிட்ட நாடாது.

ஆசையினது இன்பங்கள் பெரும் ஆவேசத்தில் தொடங்கி உடல்மெலிவிலும் மனக்கலக்கத்திலும் முடிகின்றன. நீ எதற்காக மனமுருகுகிறாயோ அது அநுபவித்ததும் தெவிட்டிப்போகின்றது. அவ்வஸ்து கிடைத்ததும் அது எப்போது தொலையும் என்று எண்ணத்தொடங்கிறாய். உனக்கு ஒரு பொருளிடத்து வியப்புண்டாகும்போது அதனிடத்து மதிப்பையும் உடன் கூட்டுவாயாக. உனது நேசத்தோடு நண்பையுங் கூட்டிக்கொள்வாயாக. அதனால் உன் ஆவேச பரவசத்தைக் காட்டிலும் த்ருப்தியே மேலானதென்பதை முடிவில் உணர்வாய். எக்களிப்பைக் காட்டிலும் சாந்தம் விலையுயர்ந்த தென்றும் அறிவாய்.

தீமை கலவாத நன்மையைக் கடவுள் அளித்ததேயில்லை. ஆனால், அத்தீமையை விலக்குதற்கான வழியுணர்வையு மளித்திருக்கிறார். ஸாதகமில்லாமல் துக்கமில்லை; துக்கமில்லாமல் ஸாதகமில்லை. ஸாதகதுக்கங்கள் ஒன்றுக்கொன்று குணத்தில் வேறுபட்டிருப்பினும் கலந்தே யிருக்கின்றன. அவை கலப்பில்லாமல் நமக்குக் கிடைப்பது நம்முடைய தேர்ச்சியைப் பொறுத்தது.

வ்யஸனமே அடிக்கடி ஆநந்தத்தை அளிக்கிறது. ஸந்தோஷத்தின் முடிவு கண்ணீரோடு கலந்திருக்கிறது. இதையே ஆநந்த பாஷ்பம் என்கிறோம்.

ஒரு மூடனது கையிலுள்ள மிகச் சிறந்த வஸ்துக்களும் அவனது கேட்டுக்குக் காரணமாகலாம். மிகுந்த கேட்டிலிருந்து புத்திமான்கள் நன்மையடையும் நெறியைக் கண்டுபிடித்துக் கொள்ளுவார்கள். மனிதனே! பரிபூரணமான நன்மையை யாவது, தீமையையாவது செய்ய உனக்குத் திறமையில்லாத படி உன் ஸ்வபாவத்தில் அவ்வளவு துர்பலங் கலந்திருக்கிறது. உனக்குத் தீமைசெய்யும் திறமைவாய்க்காததைப் பற்றி ஸந்தோஷப்படு. உன் கையில் கிடைத்த நன்மையைக் கண்டு திருப்தியடை.

நன்மை பலவித நிலைமைகளுக்கும் பகிர்ந்து கொடுக்கப் பட்டிருக்கிறது. உனக்குக் கிட்டாதனவற்றைத் தேடிப்போகாதே; எல்லா நன்மைகளையும் அடைய முடியவில்லையே யென்று வருந்தாதே. செல்வவான்களது தாராளத்தையும் ஏழைகளது திருப்தியையும் உனக்கு ஒரே ஸமயத்தில் வைத்துக்கொண்டிருக்க இஷ்டமா? விதந்துவைப்போல ஆசாரங்களை அநுஷ்டிக்க வில்லையேயென்று உன் மனதுக்குகந்த மனைவியினிடத்தில் உனக்கு வெறுப்பா?

உன் சொத்தைப் பங்கிடுவதில் உன் பிதா பிசகிப்போயிருந்தால் உனது நேர்மை அவரைக் கொன்றுவிடுமா? அல்லது உன் கடமை அவரைக் காப்பாற்றுமா? உன் ஸஹோதரன் நீடித்த யாதனாவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கக் கண்டால் உடனே அவனைக் கொன்றுவிடுவது தர்மமா? அவனைக் கொன்றவனுக்கும் அது மரணதரமல்லவா?

உண்மை ஒன்றே. உன் ஐயங்கள் நீ யுண்டுபண்ணிக் கொண்டவை. நன்மைகளை சிருஷ்டித்த கடவுள் அவற்றின் மேன்மைகளை யறியப் புத்தியையும் உனக்களித்தார். கார்யங்

களை உன் மனச்சாட்சியினிடத்துச் சொல்லி அது உத்தரவிடுகிறபடி செய். முடிவு எல்லாம் ஸரியாகவே யிருக்கும்.

## வது அத்யாயம்.

### பேரறிவின்மை–ON THE INSUFFICIENCY OF KNOWLEDGE.

இவ்வுலகத்தில் அழகென்பது ஏதாவதிருந்தாலும் ஆசைப்படக்கூடியது ஏதாவதிருந்தாலும், மனிதன் புகழ் பெறக்கூடியது ஏதாவதுண்டானாலும் அது கல்வியே. எனினும், அதை அனுகியடைபவன் யார்? ராஜ்ய தந்த்ர நிபுணன் தன்னிடத்து அக்கல்வி யுண்டென்று பரக்கப் பேசுகிறான். அரசன் அக்கல்வியின் புகழ் தனக்கே யுரியதென்கிறான். ஆனால், அவனிடத்து அக்கல்வியிருப்பதை அவனது ப்ரஜைகள் காண்கிறார்களா?

மனிதனுக்குத் தீமை வேண்டியதேயில்லை; பாபத்துக் கிடங்கொடுக்க வேண்டிய அவஸரமும் அவனுக்கில்லை. எனினும், சட்டத்தின் உபேக்ஷையால் எத்தனை தீங்குகள் தப்பிப் போகின்றன? ந்யாய ஸபைகளின் தீர்ப்புக்களால் எத்தனை குற்றங்கள் நடைபெறுகின்றன? அரசனே! ஞானவானயிரு. பெருஞ் ஜனஸமூஹங்களையாளுகிறவனே! உன்னால் அதிகாரத்தோடு செய்யப்படும் ஒரு குற்றம், தண்டனைபெறாமல் தப்பிப்போன பத்துக் குற்றங்களிலும் கேடானது என்பதை யறிந்துகொள்.

உனது ப்ரஜைகள் அளவிறந்திருக்கும்போதும், உனக்கு அநேகர் புதல்வர் ஏற்படும்போதும், நிரபராதிகளா யுள்ளவர்களைக் கொல்லுவாவது, ஒரு தீங்கும் இழைக்காதவர்களைக் கத்திக் கிரையாக்கவாவது நீ யவர்களை அனுப்புகிறதில்லையா? நீ கோரிய எண்ணம் முடிவதற்கு ஆயிரம் மனிதர்

கள் பலிகொடுக்க வேண்டுமானாலும் அவ்வெண்ணத்தை முடித்துத் தான் தீருவேனென்று நீ சொல்லுவதில்லையா? உண்மையாகவே உன்னை சிருஷ்டித்த கடவுள்தான் அவர்களையும் சிருஷ்டித்தார் என்பதை மறந்து விடுகிறாய். அவர்களும் உன்னைப் போலுள்ளவர்களென்பது உனக்குத் தெரிகிறதில்லை.

ந்யாயம் பிறருக்கு தீங்கிழைக்காமலே நிறைவேற்ற முடியுமென்று சொல்லுகிறாயா? நிச்சயமாய் உன் வார்த்தைகளே உன்னிடத்துள்ள குற்றங்களை எடுத்துக் கூறுகின்றன. குற்றவாளி தன்குற்றத்தை யொப்புக்கொள்ளும்படி அவனை முகஸ்துதி பண்ணுகிற உத்யோகஸ்தனே! நீயும் குற்றவாளியல்லவோ? அதனால் உன்னைத் தண்டிக்க முடியாத காரணத்தால் உன் குற்றம் குறைவாகுமா?

குற்றவாளியென்று ஸந்தேகறப் பட்டவனை சிக்ஷை செய்ய உத்தரவு கொடுக்கும்போது ஒரு நிரபராதியைத் துன்பப் படுத்துகிறோமோவென்ற எண்ணம் உன் ஞாபகத்து வருகிறதா? அக்கார்யத்தைச் செய்வதனால் உன் எண்ணம் முற்றுப்பெறுகிறதா? அவன் உன்னுடைய சிக்ஷைக்குப் பயந்து கொண்டு குற்றத்தை ஒப்புக்கொள்ளுவதனால் உன் ஆத்மா த்ருப்தியடைகிறதா? நீ செய்யும் உபத்ரவம், உள்ளதைவிட இல்லாததைச் சொல்லுவதற்கு அவனை இலகுவில் கட்டாயப் படுத்தும். உண்மையாகவே குற்றமில்லாதவனாயிருந்தாலும் மனோவ்யாகூலமானது தன்னையே குறைகூறிக் கொள்ளும்படி செய்தது.

காரணமின்றிக் கொல்லக்கூடாதென்று கொலையிலுங் கேடான கார்யங்களைச் செய்கிறாய். குற்றவாளியென்று ருஜுப்படுத்துவதற்காகத் தீங்கற்ற ஒருவனை வதைக்கிறாய்.

உண்மையை அறிய முடியாத அந்தகத்துவம் எவ்வளவு? ஞானவான்களுக்குள்ள புத்திக் குறைவுக்குக் கணக்குண்டா! உனது புண்ய பாபங்களைத் தீர்க்கும் கடவுள் உன்னுடைய தவறுகளைக்காட்டி அவற்றிற்கு ஸமாதானங்கூற உனக்குத்தரவளிக்கும்போது, நிரபராதியான ஒருவன் அவரது முன்னிலையில் உன்பேரில் தோஷஞ் சொல்வதைவிடப் பதினாயிரம் குற்றவாளிகள் எங்களை ஸ்வயேச்சை யடைவித்தார் என்று சொல்வது நல்லதென்று நினைப்பாய்.

ந்யாயத்தை நிலைநிறுத்தச் சக்தி போதாமலிருக்கும்போது உண்மையை உன்னுல் எப்படியறிய முடியும்? அவ்வுண்மைகளது உன்னத ஸிம்ஹாஸனத்தின்மேல் நீ எப்படி ஏறுவாய்? ஆந்தையின் கண்ணுக்கு சூர்யனது ஒளி இருட்டாகத் தெரிவதுபோல, உண்மையினது ப்ரகாசம் நீ யுலாவுமிடங்களில் அடிக்கும்போது அது உன் கண்ணுக்கு இருட்டாகத் தெரிகிறது. உண்மை ப்ரகாசமாகிய தேவியினது ஸிம்ஹாஸனத்திலேற உனக்கு விருப்பமிருந்தால் முதலில் அவளது பாதபீடிகையை வணங்கு. அவளை நன்கறிய எண்ணினுல் உன் அறியாமையை நீ முன்னர் உணர்ந்துகொள்.

முத்துக்களைக் காட்டிலும் அவள் அதிகம் விலையுயர்ந்தவள். ஆகையால், அவளை ஜாக்ரதையாகத் தேடிப்பார். அவளது காலடியில் பச்சையும், வயிரமும், கெம்பும் தூசிபோலக் கிடக்கின்றன. ஆதலால், ஆண்மையோடும் அவளைப் பின்தொடர்ந்துசெல். அவளை நீ அடையும் வழி மன உழைப்பு ஒன்றுதான்; அவளது துறைமுகங்களுக்கு உன்னைச் செலுத்தும் மாலுமி கவ்னம் ஒன்றுதான். ஆனுல், வழியில் களைத்துவிடாதே; ஏனெனில், நீ அவளண்டை வந்து சேர்ந்த பின்னர் நீ பட்ட ச்ரமம் உனக்கு ஆநந்தமாக விருக்கவேண்டும்.

"உண்மை பேசுவதால் பலரோடும் பகை நேரிடுகிறது. அதனால் அதனின்றும் விலகி நடப்பேன்; பொய்க்கோலம் நண்பர்களைக் கூட்டுகிறதனால் அதனைப் பின் பற்றி ஒழுகுவேன்." என்று உனக்குள்ளே சொல்லிக்கொள்ளாதே. நீ உண்மை பேசினதினால் உனக்குண்டான பகைவர்கள், முகஸ்துதி செய்ததனால் கிடைத்த ஸ்நேஹிதர்களைக் காட்டிலும் மேம்பட்டவர்களன்றோ? ஸ்வபாவத்தில் மனிதன் உண்மையையே விரும்புகிறான். என்றாலும், அது கண்ணெதிரிலிருக்கும்போது அவனால் அதனை யறிந்துகொள்ள முடியவில்லை. அது அவனைப் பலாத்காரப் படுத்தினால் அவனுக்குக் கோபம் வருகிறதல்லவா?

குற்றம் உண்மையினிடத்திலில்லை. ஏனெனில் உண்மை நேசயோக்யமானது; ஆனால், மனிதனுக்கு உண்மையினது ப்ரகாசத்தைத் தாங்கும் யோக்யதையில்லை. உன்னுடைய குறைவை நீ தெளிவாய்ப் பார்க்க வெண்ணினால் ஜபம் செய்யும்பொழுது உன்னையே சோதித்துப் பார். உன்னுடைய தளர்ச்சிகளை உனக்கு அறிவிக்கவும், உனது துர்ப்பலத்தை உனக்கு ஞாபகப் படுத்தவும், கடவுள் ஒருவரிடத்திருந்துதான் நீ நன்மையை எதிர் பார்க்க வேண்டுமென்பதை யுனக்குக் காட்டவுமே மதம் உலகத்தில் ஏற்படுத்தப்பட்டது.

உனது சரீரம் மண்ணென்று அம்மதம் உனக்கு நினைவூட்டவில்லையா? உனது தேஹம் சாம்பரென்று அது உனக்குச் சொல்லவில்லையா? மனிதனின் சூதுவாதுகளைப் பார்! அவை பலவீனத்தாலானவையல்லவா! நீ பிறருக்கு வாக்குத்தத்தம் செய்யும்போதும், நீ மோசம் செய்வதில்லையென்று ஸத்யம் பண்ணும்போதும் மதம் உன் முகத்திலும் உன் ப்ரமாணத்தை யேற்பவனது முகத்திலும் ஒரு உணர்ச்சியை உண்டாக்குவ

தைப் பார். நீ ந்யாயமாய் நடக்கக் கற்றுக்கொள்; அப்படி நடந்தால் கபடமின்மையாகிய ஒரு தன்மை யுண்டாகும். யோக்யனையிருக்கப் படித்துக்கொள்; ப்ரமாணமே பின்னர் அவச்யமில்லை. புத்தி கூர்மையில்லாமையால்வந்த மதிகேடுகளே சிறந்தவை; ஆகையால், நான் அறைகுறையாக மூடவேஷம் போடமாட்டேனென்று உனக்குள்ளே சொல்லிக்கொள்ளாதே.

தன் குறைவுகளைப் பொறுமையோடு கேட்பவன் மற்றொருவனது குறைவுகளைத் துணிகரமாய் நீக்குவான். காரணத்தோடு ஒரு விஷயத்தை மறுக்கிறவன் பேரில் அதிருப்தி அவ்வளவு அதிகம் உண்டாகாது. உன்னை யாராவது ஸந்தேஹித்தால் தாராளமாய் அவர்களுக்குப் பதில்கொடு. குற்றவாளியல்லாத மற்ற யாரை ஸந்தேஹமானது பயமுறுத்தும்?

மனது இளக்க முள்ளவன், பிறன் தன்னை வேண்டிக் கொள்ளும்பொழுது தன் காரியத்தை மறந்து விடுகிறான். அஹந்தை யுள்ளவனைப்போய் வேண்டிக்கொள்வது அவனது பிடிவாதத்தை யதிகப்படுத்தும். உனது குறையின் உணர்ச்சி, பிறர் சொல்வதைக் கேட்கும்படி உனக்கு உத்தரவளிக்கிறது; ஆனால், நீ ந்யாயமாய் நடக்கவேண்டுமானால் பயப்பற்றில்லாமல் எதையும் கேட்கவேண்டும்.

## 5-வது அத்யாயம்.

### துன்பம்—MISERY.

மனிதனே! நல்லது செய்ய உனக்குச் சக்தியுங் குறைவு; இடம்பாடும் அதிகமில்லை. பரிபூர்ண ஸுகம் அநுபவிக்க வென்றாலோ ஸஞ்சலமும் துர்ப்பலமும் ஸதா உன்னிடத்தில் குடிகொண்டிருக்கின்றன. ஆனால், ஒரு விஷயத்தில் உறுதியும் திடமு முள்ளவனாயிருக்கிறாய். அவ்விஷயத்தின் பேர் துன்ப

மென்பது. அது உனது ஜன்ம குணமாம்; உன் ஸ்வாபவத்திற்கு ஸ்வதந்த்ரமானதாம். உன் மனத்தில்தான் அது குடியிருக்கிறது. உன்னை யல்லாது அது இல்லவேயில்லை. அதன் உற்பத்தி யெங்கிருந்தென்று கவனி. அது உனது ஆசாபாசங்களிலிருந்தே யுண்டாகிறது.

உனக்கு ஆசாபாசங்களைக் கொடுத்தவர், அவைகளை யடக்கியாளும் பகுத்தறிவையுங் கொடுத்தார். அதனை நீ யுபயோகித்தால் அவற்றை உன் காலடியில் அழுத்தக்கூடும். நீ இவ்வுலகத்தில் பிறந்ததே வெட்கமானதல்லவா? உனது நாசம் மேன்மை தங்கியதல்லவா? மனிதர் கொலைப் படைகளைப் பொன்னாலும் மணிகளாலும் புனைந்து அரையில் உடைக்குமேல் தரிப்பதைப் பார். ஒரு மனிதனைப் பெற்றவன் தன் தலையை மறைத்துக் கொள்ளுகிறான்; ஆனால், ஆயிரம் பேரைக் கொன்றவனை எல்லாரும் கௌரவப்படுத்துகிறார்கள்.

அப்படியிருந்தும், அது தவறென்று உனக்குத் தெரிகிறதல்லவா? உண்மையைப் பொது ஜன வழக்கம் மறைக்க முடியாது. பல பேருடைய அபிப்ராயம் நீதியை யழிக்கவும் முடியாது. மானமும், அவமானமும் மாற்றிவைக்கப்பட்டிருக்கின்றன. மனிதனை ச்ருஷ்டிக்க ஒரே வழிதானிருக்கிறது. ஆனால், அவனைக் கொல்லப் பல வழிகளேற்பட்டிருக்கின்றன. ஒருவனை உலகில் பிறப்பிப்பவனுக்குப் புகழாவது கண்ணியமாவது கிடையாது; ஆனால், விஜயமும் ஸாம்ராஜ்யமும் கொலைக்கு வெகுமதியாகக் கிடைக்கிறது. என்றாலும், அநேக குழந்தைகளைப் பெற்றவனுக்கு அவ்வளவுக் கவ்வளவு தேவ அருளுண்டு. மற்றொருவனது உயிரைக் கொன்றவனுக்குத் தன்னுயிர்கூட நிலைக்காது.

தன் மகன் பிறந்தபோது சபித்துக்கொண்டு தன் பிதா பிறந்தபோது களிக்கும் மதியிலி க்ரூரனானல்லவா? மனிதனுக்கு வேண்டிய கஷ்டங்கள் அளித்திருக்க, அவன் அதனை அதிகப்படுத்திக்கொண்டு துக்கிக்கிறான். மனிதனது துன்பங்களிலெல்லாம் அதிபெரிய துக்கமாம். நீ துக்காசயத்திலேயே பிறந்திருக்கிறாய். உன்னுடைய பிறழ்வுணர்ச்சியால் அதனை அதிகமாக்கிக் கொள்ளாதே. துக்கம் உனக்கு ஸ்வபாவமாயுள்ளது; உன் பக்கத்திலேயே இருக்கிறது. இன்பம் உனக்கு அந்நியமானது. ஒரோவொரு வேளை உன்னை வந்து பார்க்க வருகிறது. உன் பகுத்தறிவை நன்று உபயோகித்தால் துக்கத்தை நீ தூர விலக்கலாம். விவேகத்தோடு உருப்படாயாயின் ஏகதேசத்தில் உன்னைத் தரிசிக்கவரும் இன்பம் நெடுங்காலம் உன்னிடத்துத் தங்கும்.

உன் சரீரத்தின் எல்லாப் பக்கமும் துக்கத்துக் கேதுவானது. ஸுகத்தை யடையும் மார்க்கங்கள் மிகச் சில; அவையும் ஒடுக்கமானவை. இன்பம் தனியாய்த்தான் வரக்கூடும். ஆனால், துன்பங்கள் ஒரே ஸமயத்தில் ஆயிரக்கணக்காக ஒன்று சேர்ந்துவரும். (நெருப்புப் பற்றின துரும்பு உடனே சாம்பலாவதுபோல ஸுகம் வந்தவுடனே துக்கம் மறைந்துவிடுகிறது.) அது என்னவாயிற்றென்றுகூட உனக்குத் தெரியாது. துக்கம் அடிக்கடி நேருகிறது. ஸுகம் அபூர்வமாய் ஒருவனிடத்துத் தோன்றுகிறது. துக்கம் தானே வருகிறது. ஸுகம் விலைகொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. துக்கம் கலப்பில்லாமலிருக்கிறது. ஆனால் ஸுகத்தில் பொதிந்துள்ள துக்கத்துக்குக் குறைவில்லை.

பரிபூர்ண ஸௌக்யத்தைக் காட்டிலும் ஸ்வல்ப வ்யாதி

எப்படி அதிகம் இலகுவாக அறியப்படுகிறதோ, அதுபோல பரிபூர்ண இன்பத்தில் அற்ப துக்கம் அதிகமாகத்தோன்று கிறது. நாம் வ்யாகூலத்தோ டுறவாடுகிறோம். ஆனால் ஸந்தோஷத்தைக் கண்டு அடிக்கடி பயந்தோடுகிறோம். நாம் ஸந்தோஷத்தை விலை கொடுத்துப் பெறும்போது, அது பெறு வதற்குமேற் கொடுக்கிறோமல்லவா? யோசனை மனிதனுக்கு அவச்ய மிருக்கவேண்டியது. தன் நிலைமையை யறிவது ஒருவனது முதற்கடமை; ஆனால், வாழ்வு வரும்போது தன்னை மறக்காதிருக்கவேண்டும். நமக்குத் துக்கம் அளிக்கப்பட்டிருப் பது கடவுளது தயையினாலல்லவா?

வரப்போகும் கேட்டை மனிதன் முன்னுணர்கிறான்; அது தீர்ந்த பிறகு அதை ஞாபகத்தில் வைத்திருக்கிறான். ஒரு துன்பத்தைக் காட்டிலும் அத்துன்ப வுணர்ச்சி மனத்தை யதிகமாகப் புண்படுத்துகிறதென்று அவன் யோசிக்கிற தில்லை. உனக்குத் துன்பம் ஏற்பட்டபோதல்லாமல் மற்ற வேளைகளில் அதைப்பற்றி நினையாதே. அதனால், உனக்கு அதிகத் தீங்கு விளைக்கும் கருவியை நீ விலக்கினவனாவாய்.

தனக்கு வேண்டியதற்கு முன் துக்கிப்பவன் தனக்கு வேண்டியதற்குப் பின்னும் துக்கிப்பான். ஏன்? அவனுக்குத் துக்கிப்பதில் ஆசையிருப்பதனால் தான் அப்படிச் செய்கிறான். ஈட்டி தன்மேல் பாய வரும்வரையில் மான் வ்யஸனப்படுவ தில்லை. வேட்டை நாய் தன்னைப் பிடிக்க நிற்கும்போதல்லாமல் நீர்நா (Beaver) யழுவதில்லை. மனிதன் தானிறந்துவிட நேரிடுமேயென்று பயப்படுகிறான்; கார்யத்தைக் காட்டிலும் அக்கார்யத்தி லேற்படும் தியரம் பெருந் துன்பத்தைத் தரு கிறது. உன் செய்கைகளுக் குத்தரவாதஞ் சொல்ல எப்போதும்

தயாராயிரு. முன்பின் கருதப்படாத மரணந்தான் சிறந்த மரணமாம்.

## 6-வது அத்யாயம்.

### மதியூகம்—ON JUDGMENT

மனிதனுக் களிக்கப்பட்ட பெரும் செல்வம் யுக்தியும் உள்ளமுமாம். அவற்றைக் கெட்ட வழியில் உபயோகியா திருப்பவனே ஸாதகவான். மலைச் சரிவில் அடித்துக்கொண்டோடும் நீரோட்டம் தன்னெதிரிலகப்பட்ட வஸ்துக்களையெல்லாம் அழித்து விடுவதுபோலக் காரணங் கருதாமல் பொது ஜன அபிப்ராயத்துக் குட்பட்டொழுகும் ஒருவனது பகுத்தறிவை அவ்வபிப்ராயம் அழித்துவிடுகின்றது.

நீ உண்மையென்று ஏற்றுக்கொள்ளும் விஷயம் அதன் ப்ரதிபிம்பமா யிருந்துவிடாதபடி பார். உனக்கு உறுதி பயப்பனவாக நீ யெண்ணி யொப்புக்கொண்ட கொள்கைகள் அடிக்கடி போலிக்கொள்கைகளாக விருக்கவும் நேரும். மனவுறுதியுடன் பரிசீலனைசெய்து உனக்குள்ளேயே ஒரு தீர்மானஞ் செய்துகொள். அதனால் உன்னுடைய தளர்வுகளுக்கு மாத்ரம் நீ உத்தரவாதமுள்ளவனாயிருக்க நேரும். அக்கார்யம் அச்செய்கையின் ஞானத்தை விளக்குகிறதென்று சொல்லாதே. மனிதனுக்குத் தவறுதல் நேரும் என்பதை மனத்தில் வை.

உன் அபிப்ராயத்தினின்றும் வேறுபடுவதால் மற்றவனது யூகத்தைத் தூஷிக்காதே. நீ பிசகியிருக்கக்கூடாதா? ஒரு மனிதனை அவனது பட்டங்களுக்காக மதித்து அவையில்லாததால் ஒரு அந்யனை நீ தூஷிக்கும்போது ஒரு ஒட்டகத்தைக் கடிவாளத்தினால் மதிக்கிறவன்போல இல்லையா? உன் எதிரியைக் கொன்றுவிட்ட காரணத்தால் அவன்மேல் பழி

வாங்கிவிட்டதாக வெண்ணுதே: அவனை உன் கிட்டவர முடியாதபடி செய்துகொண்டாய். அவனுக்கு நீ சாந்தி அளித்தாய்: உன்னுலேயும் இனி அவனை ஒன்றும் செய்யமுடியாதபடி செய்துகொண்டாய்.

உன் தாய் அடக்கமின்றி நடந்ததாகக் கேட்கும்போது உனக்குத் துக்கமுண்டாகிறதா? உன் மனைவியினிடத்துள்ள கற்பின் குறைவைப் பலர் எடுத்துத் தூற்றக் கேட்கும்போது உனக்கு வருத்தமுண்டாகிறதா? அவற்றிற்காக உன்னை இகழ்கிறவன் தன்னையே தண்டனைக்குள்ளாக்கிக் கொள்ளுகிறான். மற்றவர்களது பாபங்களுக்கு நீ எப்படி உத்தரவாதியாவாய்? உன்னிடத்திலிருக்கிற காரணத்தால் ஒரு ஆபரணத்தை அவமதிக்காதே. வேறொருவனுக்குச் சொந்தமாயிருப்பதால் ஒரு வஸ்துவை அதிகம் விலையுயர்ந்ததென்று மதிக்காதே.

உன் மனைவி உன் அதிகாரத்துக் குட்பட்டவளென்று அவளுக்குக் குறைச்சலான மர்யாதை செய்யாதே. "அவளிடத்துக் குறைந்த அன்பு காட்டவிரும்பினால் அவளை மணந்துகொள்" என்று கூறினவனை வெறுப்பாயாக. உன்னுடைய நற்குணத்திலுள்ள பூர்ண நம்பிக்கையாலல்லவா அவள் உன் அதிகாரத்துக் குட்பட்டாள்? நீ அவளுக்கு அதிகம் கடமைப்பட்டிருப்பதற்காக அவளைக் குறைவாக நேசிக்கவாவேண்டும்? நீ அவளைக் கல்யாணத்துக்காக நேசித்தது முடிந்த ஸமயத்தில் அவளை அடைந்த பிறகு உல்லங்கனஞ் செய்தபோதிலும், அவளை இழந்துவிடுவாயானால் அது உன் மனத்தில் ஆறாத் துக்கத்தையுண்டுபண்ணும்.

தனக்குக்கிடைத்த காரணத்தால் ஒருத்தியை அதிகமாக நேசிக்கிறவன் உன்னைவிடப் புத்தி குறைவுள்ளவனுக உனக்

குப்பட்டாலும், அவன் அதிக ஸோகப்படுகிறான். உன் நண்பனுக்கு வந்த நஷ்டத்தின் அளவை அவன் பெருக்குங் கண்ணீரைக் கண்டு மதிக்காதே. மஹா பெரிய துக்கங்கள் அழுக்கடி இவ்வடையாளங்களில்லாமலே யிருக்கின்றன. ஒரு காரியம் முழக்கத்தோடும் டம்பத்தோடும் செய்யப்படுவதற்காக அதனை மதிக்காதே. அதி கம்பீரமான ஆத்மா அரிய காரியங்களைச் செய்வதுமன்றி அச்செய்கைகளைச் செய்வதிற் பெருமைகொள்வதுமில்லை.

ஒருவனது புகழ் அவன் காதில் விழும்போது அவனுக்கு ஆச்சர்யத்தை யுண்டுபண்ணுகிறது. ஆனால், மனச்சாந்தி தானுள்ள மனத்துக்குக் களிப்பைத் தருகிறது. மற்றொருவனது நற்செய்கைகளுக்குக் கெட்ட காரணங்களைக் கற்பிக்காதே. அவன் மனதை உன்னால் அறிய முடியாது. ஆனால் உன் மனத்தில் பொறாமை யதிகப் குடிகொண்டிருக்கிற விஷயத்தை உலகம் எளிதில் அறியும். கபடத்தில் மடமை யதிகமுள்ளதே தவிரப் பொல்லாங்கு அதிகமில்லை. யோக்யன்போல வேஷம் போடுவது அவ்வளவு லகுதான்.

ஒருவன் செய்த தீங்குக்காகப் பழி வாங்குவதில் ஆதுரனா யிருப்பதைக்காட்டிலும், ஒரு நன்மையை யொப்புக்கொள்ளுவதில் முதன்மையாயிரு. அதனால், உனக்கு நேருந் துன்பங்களைக் காட்டிலும் நன்மையே அதிகமாகும். பகைகொள்வதைக் காட்டிலும் நேசிப்பதற்குத் தயாராயிரு. அதனால் உன்னை வெறுப்பவர்களைக் காட்டிலும் விரும்புவோர்கள் அதிகமாக ஏற்படுவார்கள். பிறரது சீரை யெடுத்துக் கூறு; ஆனால் அவர்களது சிறுமையைப்பற்றிப் பேசப் பின் வாங்கு. அதனால் உனது நற்குணங்கள் புகழ் பெறும்; உனது குறைவுகள் உன் எதிரிகளது கண்களில் அதிகம் படாது.

நீ நல்லது செய்யும்போது நன்மையின் பொருட்டே செய்; பிறர் உன்னை மதிப்பதற்காகச் செய்யாதே. நீ தீமையை விட்டு விலகியோடும்போது அது தீமையென்பதற்காகவே விலகு; மனிதர்கள் குறை கூறுவார்களே யென்பதற்காக விலகாதே. கண்யத்தினிடத்துள்ள ஆசைக்காகவே கண்யமாயிரு. எப்போதும் ஒரே மாதிரியாக இரு. ஒரு நியமமில்லாமல் அதைச் செய்பவன் நிலை தடுமாறிக் கொண்டிருக்கிறான்.

அறிவீனர்களிடத்துப் பெருமையைப் பெறுவதிலும் அறிஞரது கண்டனத்தைப் பெறுவது சிறந்ததென்று எண். அறிஞர் உன் குற்றத்தை உனக்குக் காட்டும்போது நீ திருந்துவாயென்று அவர்கள் எண்ணுகிறார்கள். அறிவீனர் உன்னைப் புகழும்போது தங்களைப் போலவே யுன்னையும் மதிக்கிறார்கள். உன் திறமைக்கு இயலாத தொழிலை பொப்புக் கொள்ளாதே; அதனால் உன் திறமைக் குறைவை யறிய நேர்ந்தவர் உன்னை யதிகம் இகழ்வார்கள். உனக்கே தெரியாத விஷயத்தைப் பற்றிப் பிறருக்கு உபதேசம் பண்ணாதே. உன் அறியாமையை அவனறிந்தால் உன்னை நிந்திப்பான். உனக்குத் தீங்கிழைத்தவனோடு நட்புக் கொள்ளாதே. தீங்கடைந்தவன் அதனை மன்னிக்கக் கூடும்; ஆனால், தீங்கிழைத்தவன் ஒருபோதும் நன்மை செய்யமாட்டான்.

உன் நண்பனிடத்து அதிக வுதவியை எதிர்பாராதே; அவற்றை நினைக்கும்போது அவனுக்கு உன்னைவிட்டு விலகத் தோன்றும்; ஒரு சிறு உபகாரம் நட்பைத் தூரப்படுத்துகிறது. பேருபகாரமோ நண்பனை விரோதியாக்குகிறது. என்றாலும் நன்றி கொல்லுதல் மனித ஸ்வபாவமல்ல. அவனது கோபமும் ஸமாதானப் படுத்தக் கூடாததல்ல. தன்னால் ப்ரதி செய்ய

முடியாத கடனைப்பற்றி யாரும் ஞாபகப்படுத்த விரும்புவதில்லை. தான் வருத்தப்படுத்தின மனிதனைப் பார்க்க ஒருவனுக்கு வெட்க முண்டாகிறது.

அந்யனுக் குண்டான ஸந்தோஷத்தைக் கண்டு மனமுருகாதே. உன் சத்ருவுக்கு நேருந் தீமையைக் கண்டும் ஸந்தோஷிக்காதே. மற்றவர்கள் உனக்கும் அந்த மாதிரி செய்யவேண்டுமென்று விரும்புகிறாயா? பிறருடைய ஆசீர்வாதங்களைப் பெற வெண்ணினால் உனது நன்மை எவ்விடத்திலும் பரவினதா யிருக்கட்டும். இவ்வகையாக அவற்றைப் பெற முடியாவிட்டால், வேறெவ்விதத்திலும் நீ அவற்றை யடைய முடியாது. உனக்கு அவ்வாசீர்வாதங்கள் கிடைக்காவிட்டாலும் அவற்றிற்குரியவனானே யென்ற வெண்ணமே உனக்களவற்ற ஆநந்தத்தைத் தருமென்று அறிந்துகொள்.

## 7-வது அத்யாயம்.

### பூர்வ போதம், முன் அபிப்ராயம்—PRESUMPTION.

கர்வமும் அற்பத்தன்மையும் ஒன்றுக்கொன்று ஒவ்வாத குணம்போலத் தோன்றுகின்றன. ஆனால், மனிதன் விரோதமான குணங்களை உறவாக்கிக் கொள்ளுகிறான். ஒரே ஸமயத்தில் அதிக இடுக்கணுற்றவனாயும் கர்வியாயு மிருக்கிறான். ஒரு விஷயத்தைப் பற்றிய முன் அபிப்ராயம் ஒருவனது யோசனை சக்தியைக் கெடுக்கிறது. அதுவே ஒருவனது பிழைகளுக்குச் செவிலித் தாயாம். என்றாலும், அது பகுத்தறிவோடொத்த ஸ்வபாவமுள்ளது. தன்னைப்பற்றி உயர்வாகவும் மற்றவர்களைப்பற்றித் தாழ்வாகவும் மதிக்காத மனிதன் உலகில் யாருளன்? நமது சிருஷ்டி கர்த்தாவைப் பற்றியே உத்தேசமான முன் அபிப்ராய பேதங்கள் நமக்குப் பலவுண்டென்றால் மற்ற

மனிதர்களைப் பற்றிய அபிப்ராய பேதமெப்படி நமக்கு இல்லாமற் போகும்?

"மூட நம்பிக்கைக்கு ஆதி காரணம் யாது? பொய்யான தேவதா வணக்கம் மக்களுக் கெங்கிருந்து வந்தது? நமது மனதுக் கெட்டாத விஷயங்களைப் பற்றி விசாரஞ் செய்யப் புகுந்து மனதிற்கு லக்ஷ்யில் எட்டாத விஷயங்களைக் கோசரப் படுத்த (அறிவிக்கப்) புகுவதினாலேயே வந்தது. நமது அறிவு வரையறுக்கப்பட்டதும் பலவீனமுள்ளதுமாக விருக்க, அவ்வறிவின் சக்திகளை நாம் துர்விநியோகப் படுத்துகிறோம். கடவுளது பெருமையை யடையவேண்டியவளவு அதிக வுயரம் நாம் செல்வதில்லை; ஈச்வர ஸ்துத்யஞ் செய்யும்போது அவர் நமது கருத்துக்களுக்கு வேண்டிய அநுஸரணைகளைத் தருவதில்லை.

தானுள்ள உலகத்தரசனுக்கு விரோதமாக மந்த குரலில் ஒரு வார்த்தை சொல்ல அஞ்சும் மனிதன், கடவுளது நியமனங்களுக்கு விரோதமாகப் பெரியகுற்றம் ஸம்பாதிக்க அஞ்சுவதில்லை. அவரது மஹிமையைமறந்து அவரது தீர்மானங்களைப் புகர் விசாரணை செய்கிறான். மர்யாதை யில்லாது தன் அரசனது பேரைச்சொல்ல பயப்படும் ஒருவன், தனது பொய்க்குச் சாட்சியா யிருக்கும்படி கடவுளின் நாமத்தை யுபயோகிக்க அவமானப் படுவதில்லை. ஒரு ந்யாயாதிபதி செய்யும் தீர்ப்பை மௌனத்தோடு கேட்குமவன் கடவுளினிடத்து வாதஞ் செய்யத் துணிகிறான்; மன்றாடி நின்று அவரை ஸமாதானப் படுத்தப் பார்க்கிறான். தன் வாக்குத் தத்தங்களால் அவரை முகஸ்துதி செய்கிறான்: சில கார்யங்களைத் தனக்குச் செய்தால் அவர் சொன்னபடி கேட்பதாக உடன்பாடு செய்து

கொள்ளுகிறான். தன் ப்ரார்த்தனை அளிக்கப் படாமற்போனால் அவர் பேரிற் குறைகூறி அவரை இனித் தான் லக்ஷ்யஞ் செய்வதில்லை யென்கிறான்.

மனிதனே! உன் அக்கிரமங்களுக் கெல்லாம் உன்னை யேன் கடவுள் சிக்ஷிப்பதில்லை? உனக்கு ப்ரதிபலனளிக்கும் நாள் அதுவல்லவென்று எண்ணியல்லவா? இடியோடு சண்டை போடுவோமென்னும் மூடர்களைப் போலிராதே. கடவுள் உன்னைக் கண்டிக்கிறாரென்று அவருக்குரிய ஜபங்களைச் செய்யாமலிராதே. உனது தெய்வ நிந்தை உன்னையே கெடுக்கிறதென்றறியாத பைத்தியம் உன் தலையிலேயே வந்து விழுகிறது.

தான் கடவுளுக்கு மிகப் ப்ரீதியானவனென்று சொல்லிக் கொண்டு தற்பெருமை பேசும் மனிதன், ஏன் அதற்காகக் கடவுளுக்கு வந்தனமும் ஸ்தோத்ரமும் செய்யத் தவறுகிறான்? அவ்வளவு கர்வமான நம்பிக்கையோடிருக்குமவனுக்கு எப்படித் தெய்வ வழிபாடில்லாத வாழ்நாள் ஸம்மதமாயிருக்கிறது? இவ்வுலகத்தில் உண்மையாகவே ஒரு அணுவுக்கு ஸமானமான மனிதன், பூவுலகமும் வானமும் தனக்காகவே ச்ருஷ்டிக்கப் பட்டிருக்கிறதாக வெண்ணுகிறான். இயற்கை முழுதும் தன் ஒருவனது நல்வாழ்வையே கருதுகிறதாக மதிக்கிறான். தண்ணீரிலாடுகிற மரங்கள், பட்டணங்கள், அகன்ற ஆகாயம் இவற்றின் நிழலைக் காணும்போது அவை தனக்கின்பந் தருவதற்காக ஆடுகின்றன வென்றெண்ணும் முழுமூடனைப்போல எண்ணுகிறான். இயற்கை தனக்கேற்பட்ட செயல்களைச் செய்யும்போது அவ்வாட்டம் யாவும் தனது நேத்ராநந்தத்திற்காகவே செய்யப் படுவதாகக் கருதுகிறான்.

தான் வெயிலிற் குளிர்காயும்போது தனக்கென்றே அது

சிருஷ்டிக்கப் பட்டிருப்பதாக அவனது பாவனை. ஆகாயவீதியில் சந்த்ரன் செல்வதைப் பார்க்கையில் அதனைத் தனக் கின்பமளிப்பதற்காகக் கடவுள் தந்துள்ளதாகக் கருதுகிறான். உனது கர்வத்தை நீயே யறிந்துகொள்ள முடியாத மூடனே! தாழ்மையோடிரு. உலகம் தன்படி ஒழுகுவதற்கு நீ காரண பூதனல்ல வென்பதை யுணர்வாயாக. கோடையும் பனிக் காலமுமாகிய மாறுபாடுகள் உனக்காக சிருஷ்டிக்கப் பட்டவையல்ல. உனது ஜாதியே (மனிதனே) உலகிலில்லாவிடினும் அதனால் ஒருமாறுதலும் நேராது. இவ்வுலகத்து ஆசீர்வதிக்கப்பட்ட கோடாநுகோடி ஜந்துக்களுள் ஒருவனென்பதை உறுதியாய் அறிந்துகொள்.

நீ உன்னை ஸ்வர்க்க லோகம் வரையில் உயர்த்திக்கொள்ளாதே. உனக்குமேல் தேவதைக ளிருப்பதை நினைவுகூர். உன்னிலும் தாழ்ந்திருக்கிறார்களென்று உனது ஸஹோதரர்களான மனிதர்களை வெறுக்காதே. அல்லது அவர்களைக் கேவலமாகக் கருதாதே. அவர்களும் உன்னைப் படைத்தவராலேயே படைக்கப் பட்டவர்களல்லவா? கடவுளது கிருபையினால் ஸ[illegible]கப்படும் மனிதனே! அவரது மற்ற சிருஷ்டிகளை வதைப்பதில் உனக்கு ஆதாரத்வம் எங்கிருந்து வந்தது? உனது அச்செய்கை உனக்கே திரும்ப நேராதபடி பார்த்துக்கொள்.

அவையெல்லாம் உன்னைப்போலவே அகிலலோக நாயகனை கடவுளை வழிபடுகின்றனவல்லவா? அவர் ஒவ்வொன்றுக்கும் அததன் விதிகளை ஏற்படுத்தியிருக்கிறாரல்லவா? அவற்றைக் காப்பாற்றும் கவலை அவருக்கில்லையா? நீ யவ்விதிகளைக் கடந்து நடக்கத் துணிகிறாயா? உலகத்துக்கெல்லாம் மேலானதாக உன் புத்தியைக் கருதாதே. உன்னால் அறிய முடியாததைப் பொய்

யென்று கண்டனம் செய்யாதே. மற்றவர்களுக்காகத் தீர்மானிக்கும் அதிகாரத்தை உனக்கு யாரளித்தார்கள்? அல்லது ஒருவன் தன்னிஷ்டப்படி செய்யும் ஸ்வதந்த்ரத்தை உலகினின்றும் யாரெடுத்து விட்டார்கள்?

இப்பொழுது உண்மைகளென்று கண்டறிந்த எத்தனை ஸங்கதிகள் இதுவரையில் தள்ளப்பட்டிருக்கின்றன? இப்பொழுது உண்மையாகக் கருதப்பட்ட எத்தனை விஷயங்கள் இனிப் பொய்யென்று விலக்க நிற்கின்றன? பின் எதைப் பற்றித் தான் மனிதன் நிச்சயமாயிருக்கக்கூடும்? உனக்குத் தெரிந்த நன்மையைச் செய்; உனக்கு ஸுகம் ஏற்படும். உனக்கு இவ்வுலகத்தில் அறிவினுடைய நல்லொழுக்கந்தான் சிறந்தது. நமக்குத் தெரியாத விஷயங்களில் மெய்யும் பொய்யும் ஒன்றாகவே காணப்படவில்லையா? உன்னுடைய பூர்வ போதந் தவிரப் பின் எது அவற்றில் ஒன்றை நிச்சயப்படுத்தும்?"

நம் மனத்துக்கு எட்ட முடியாததை நாம் லகுவாய் நம்புகிறோம். அந்த நம்பிக்கையில் நமக்கு ஞானமிருப்பதாகப் பிறர் காணக் கர்வம் கொள்ளுகிறோம். இது மடமையும் இடும்புமல்லவா? வெகு துணிவாய் மடமையுடன் ஒரு கார்யத்தை ஸாதிக்கிறவன் யார்? பிடிவாதமாய் ஒரு அபிப்ராயத்தைக் கைக்கொண்டிருப்பவன் யார்? அவன் முழுமூடனே; பூர்ண கர்வியுமவனே. ஒவ்வொருவனும் ஒரு அபிப்ராயத்தைக் கைக்கொள்ளும்போது அதையே ஸாதிக்க விரும்புகிறான். அதிகமாக, அதிக முன்னுத் தேசமுள்ளவன் தன் ஆத்மாவை அதற்குக் காட்டிக் கொடுப்பது மாத்ரமன்றி மற்றவர்களையும் அதையே நம்பும்படி போதிக்கிறான்.

பல வர்ஷங்களாக நடைபெறுகிறதனால் ஒன்றை உண்

மையென்று சொல்லாதே. ஒரு கொள்கையை ஆயிரக் கணக்கான மனிதர் நம்புவதனால் அது வாஸ்தவமென்று நிச்சயிக்காதே. ஒரு மனிதனது ஸித்தாந்தம் அவனது அறிவுக்கு ஒத்திருந்தால் அது மற்றொருவனுடையதைப்போல் அவ்வளவு உறுதியான ப்ரமாணந்தானென்று நம்பலாம்.

# ஒன்பதாவது காண்டம்.

---

## தனக்கும் பிறர்க்கும் தீங்கிழைக்கும் உணர்ச்சிகளைப் பற்றி.

## 1-வது அத்யாயம்.

### பிறர்பொருள் நயத்தல்—COVETOUSNESS.

செல்வம் அதிகமாக கவனிக்கத் தக்கதன்று. அதனால் அதனை யடைய அதிகக் கவலைப் படுதல் நியாயமில்லாததாகும். மனிதன் நன்மையை யடைய விரும்புவதும் அந்நன்மையை யடைந்திருப்பதற்காக ஸந்தோஷிப்பதும் பொது ஜன அபிப்ராயத்தைப் பொறுத்தனவாகும். அதன் மதிப்பைப் பாமர ஜனங்களது அபிப்ராயத்தை யொட்டிக் கருதாதே. வஸ்துக்களின் தராதரத்தை நீயே பரீக்ஷித்துப் பார்ப்பாயானால் நீ பிறர் சொத்தை விரும்பமாட்டாய். பணத்தின்மேல் ஏற்பட்ட அளவு கடந்த ஆசை ஆத்மாவில் பதிக்கப்பட்ட விஷமாம். அவ்வாசை ஆத்மாவை மாசுபடுத்தி அதின்கண்ணுள்ள நன்மை யாவற்றையும் அழித்துவிடுகிறது. அது ஆத்மாவினிடத்துப் பதிந்தவுடனே, நற்குணங்களும், யோக்யதையும், ஸ்வாபாவிக அன்பும், ஆகிய யாவும் முற்றிலும் நீங்குகின்றன.

ஆசையானது தன் புத்ரனைப் பொன்னுக்கு விற்கச்செய்யும். அப்பணம் வாங்குவதற்குமுன் விற்றவன் இறந்து போனாலும் போகலாம். என்றாலும், அவ்விஷயத்தை யவன் கவனிப்பதில்லை. ஸுகந்தேடும் முயற்சியில் அவன் தன்னை

அஸௌகப்படுத்திக்கொள்கிறான். வீட்டை அலங்கரிக்கவேண்டு மென்று அவ்வீட்டையே விற்கும் மூடனைப்போல, பணத்தி னால் அடையக்கூடிய ஸௌகங்களைக் கருதி ஒருவன் பணத்துக் காகத் தன் மனச்சாந்தியை இழக்கிறான். எங்கு ஆசை ஆளு கிறதோ அங்கே ஆத்மகுணம் அற்பமென்று கருது. மனித னுக்குப் பணந்தான் ஸகல நன்மையுமென்று கருதாதவன் செல் வந்தேடும் முயற்சியில் இதர நன்மைகளைக் கைவிடமாட்டான்.

தனக்குத் தரித்ரம் பெருஞ் சத்ருவென்று நினைத்துப் பயப்படாதவன், அதனை நீக்கும் யோசனையில் பின்னுங் கேடான இதரத் துன்பங்களை விலைக்கு வாங்கிக்கொள்ளமாட் டான். ஏ! மூடனே! ஸத்குணம் செல்வத்தினுஞ் சிறந்ததல் லவா? பாபம் தரித்ரத்தினும் கேடானதல்லவா? தனக்கு வேண்டிய அளவுக்கு ஒவ்வொருவனும் ஸம்பாதிக்கக்கூடும். அதனோடு திருப்தியடையவேண்டும். அப்படியடைந்தால், அதிக ஆக்கத்தை மேற்போட்டுக் கொண்டவனைப் பார்த்து உன் ஸௌகத்துக்குச் சிரிக்கும் அவகாசம் நேரும்.

ஸ்வபாவமானது, நீ தங்கத்தைப் பார்க்க யோக்யதை யில்லாதவனென்று அதனை மண்ணுக்குள் புதைத்துவைத்திருக் கிறது. உன் காலடி படுமிடத்தில் வெள்ளியை வைத்திருக்கி றது. அதனால், தங்கம் நீ கவனிக்கத்தக்க வஸ்துவல்லவென் றும், வெள்ளி உன் மதிப்பைப் பெறத் தகுந்ததல்லவென்றும் உனக்கு இயற்கை சொல்லுவதுபோலத் தோன்றவில்லையா? ஆசையானது அநேக ஆயிரம் அற்பர்களை மண்ணுக்குள் மறையப் புதைக்கிறது. அப்படி ஒரு ஸமயம் புதைபடும் வேலைக்காரர்கள், தங்களைக்காட்டிலும் தங்கள் யஜமானர் களுக்கு அதிகக் கஷ்டத்தைத் தரும் பொன்னுக்காக மிக ச்ர மப்பட்டு வேலைசெய்கிறார்கள்.

பூமியில் இப்பொக்கிஷத்தைப் புதைத்துவைத்திருக்கும் இடங்களில் நல்ல வஸ்துக்கள் ஒன்றும் உண்டாவதில்லை. பொன்னிருக்குமிடத்தில் அங்கே ஒரு மூலிகையும் விளைவதில்லை. அவ்விடத்தில் எப்படிக் குதிரைக்குப் புல்லும், கழுதைக்குத் தீனியும், கிடைப்பதில்லையோ, எப்படிப் பயிராவது, பழந்தரும் மரங்களாவது, திராட்சை விதைகளாவது அவ்விடத்து விளைவதில்லையோ அப்படியே தனது செல்வத்தைப் பற்றியே ஸதா நினைத்துக் கொண்டிருப்பவனது மனதில் ஒரு நன்மையும் குடியிருப்பதில்லை.

செல்வம் ஞானவான்களது ஊழியன்; ஆனால், அது மூடனது ஆத்மாவை அடிமையைப் போல அடக்கியாளுகிறது. பேராசையுள்ளவன் பொன்னுக்குப் பணிசெய்கிறான். பொன் அவனுக்குப் பணிசெய்வதில்லை. வ்யாதிக்காரனிடத்து ஜ்வரமிருப்பதுபோல அவனிடத்துச் செல்வம் தங்குகிறது. அது அவனைச் சுட்டுப் பொசுக்குகிறது. அவன் சாகிறவரையில் அவனை விடுவதில்லை.

பொன் பல்லாயிரம்பேருடைய நற்குணத்தைக் கெடுத்துவிடவில்லையா? யாருடைய நற்குணத்தையாவது அது எப்பொழுதாவது வ்ருத்தி செய்ததுண்டா? மனுஷ்யர்களில் அதமர்களிடத்து அது ஏராளமாக இருக்கிறதல்லவா? பின் ஏன் பொன் படைத்துப் பெருமை பெற எண்ணுகிறாய்? மேதாவிகளென்போர் அதனைச் சிறுகப்படைக்க பேரல்லவா? ஞானமன்றோ ஸுகத்தைத் தருவது?

உன்னிதத்தவரில் மிகக் கேடு கெட்டவர்களல்லவா அதனை அதிகமாகப் படைத்தவர்கள்? அவர்களது முடிவும் அதிக வ்யஸநகரமாகத் தானே கழிகிறது. தரித்ரர்களுக்கு

இல்லாததன்மை யதிகமுண்டு. ஆனால், பணவாசைக்காரர்கள் தங்களுக்கு அநேக ஸுகங்கள் வேண்டாமென்று மறுத்துக் கொள்ளுகிறார்கள்.

பணவாசையுள்ளவன் ஒருவனுக்கும் உபகாரியாயிருக்க முடியாது. ஆனால், அவன் தனக்குக் கொடியவனாயிருக்கும் அளவுக்கு பிறரைச் செய்துகொள்ளலாம்.

பொன்னை யீட்ட முயல். ஈட்டின பொன்னைத் தாராள மாகச் செலவிடு. பிறருக்கு ஸுகத்தைத் தரும்போதுள்ள ஆநந்தம் வேறெப்போதும் ஒருவனுக்கில்லை.

## 2-வது அத்யாயம்.

### ஏராளம்—PROFUSION.

பொருள் சேர்ப்பதில் தீமை ஏதாவதிருந்தால் அது அதனை வீண் கார்யங்களிற் செலவிடுவதில் தான் உள்ளது. தன்னிடத்து மிகும் பணத்தை வீண் செலவு செய்பவன், ஏழைகள் பெறத் தக்கவற்றைத் திருடுகிறவன் போலாவான். பணத்தைத் தூர்த்த வழியில் வாரியிறைப்பவன் நன்மை செய்யும் வழிகளை வேண்டாமென்று மறுப்பவன் போலாவான். தனக்குப் பலனை யளித்துத் தன் ஸுகத்தையே தேடிக்கொண்டிருக்கிற நற்குண நற்செய்கைகளை அவன் வெறுக்கிறான். பணமில்லாமல் ஸுகப்படுவதைக் காட்டிலும், பணத்தோடு நன்றாய் வாழ்வது கஷ்டதரமானது. தரித்ர தசையில் ஒருவன் தன்னை யடக்கியாளுவது லகுவாம். செல்வமுள்ளபோது தன்னை அடக்கிக்கொள்வது அவ்வளவு ஸாத்யமானதல்ல.

தரித்ர தசையில் பொறுமை யென்ற ஒரு குணமே ஒருவனைத் தாங்கும். செல்வகாலத்தில் ஒருவனுக்குத் தர்மம், மிதம், விவேகம் முதலிய பல குணங்களில்லாமற்போனால்

அவன் தீமை செய்யாமலிருக்க முடியாது. ஏழைக்குத் தன் நன்மை ஒன்றுதான் கருதுவதற்குண்டு. பணக்காரனுக்குப் பல்லாயிரம் மனிதரது நன்மையைக் கவனிக்கவேண்டும்.

தன் செல்வத்தை விட்டுவிடுபவன் அதன் கஷ்டங்களையும் விட்டுவிடுகிறான். அதனை விருத்தி செய்கிறவன் துன்பத்தைப் பெருக்கிக் கொள்ளுகிறான். அதிதிக்கு வேண்டியவற்றைக் கொடுக்க மறுக்காதே. உனக்கு வேண்டியதாயிருப்பதையுங்கூட உன் ஸஹோதரன் கேட்டால் இல்லையென்று சொல்லாதே. நீ செலவு செய்யத் தெரியாமல் வைத்துக்கொண்டிருக்கும் கோடிக்கணக்கான பொருளைக்காட்டிலும், நீ தானம்பண்ணின வஸ்துக்கள் உன்னை விட்டுப் போனதில் அதிக ஆநந்தமுண்டென்பதைத் தெரிந்துகொள்.

## 3-வது அத்யாயம்.

### பழி வாங்குகை—REVENGE.

பழி வாங்கவேண்டுமென்று எண்ணுவதற்கு ஆதாரபூதம் உன் ஆத்மாவின் பலவீனமே. மிகத் தாழ்ந்தவர்களும், பயந்தவர்களுமே அச்செய்கையில் மூழ்கியிருப்பவர்கள். கோழைகள் தவிர வேறு யார்தாம் வெறுப்பவர்களைத் துன்பப் படுத்துபவர்கள்.

ஒருவன்மேற் பழிவாங்கத் தோன்றுவதற்குமுன் அவன் செய்த தீங்கு தன் மனத்தில் உறுத்திக் கொண்டிருக்கவேண்டும். ஆனால், பெருந்தன்மையுள்ள மனது 'அத்தீங்கு என் மனதில உறுத்திக்கொண்டிருக்கிறது' என்று சொல்ல இஷ்டப்படுவதில்லை.

ஒருவன் செய்த தீங்கு உன்னால் கருதக்கூடாததாயில்லாமற்போனால், அதைச் செய்தவனும் உனக்கு அத்தன்மை

யனையாகிறான். உன்னிலும் தாழ்ந்தவர்களை யுனக்கு ஸமானமாக்கிக்கொண்டு அவர்களுள் ஒருவனாயிருக்கப் பிரியப்படுவாயா? உனக்குத் தீங்கு செய்பவனையும், உனக்கு மனஸஞ்சலத்தைத் தருபவனையும் அலக்ஷியம் செய்வாயாக. அதனால் உன் மனச்சாந்தியை நீ காப்பாற்றிக் கொள்வதோடு, உனக்குத் தீங்கு செய்தவன்மேல் நேரில் பழிவாங்கப் புகாமலே, எல்லாத் தண்டனையையும் அவன்மேல் சுமத்திவிடுகிறாய்.

புயலும் இடியும் தங்களுக்கு மேலுள்ள சூரியனுக்கும் நக்ஷத்ரங்களுக்கும் யாதொரு தீங்கையும் செய்ய முடியாமல் எப்படித் தங்களுக்குக் கீழுள்ள மரம், கல் முதலியவற்றிற்கே தீங்கை விளைக்கின்றனவோ, அதுபோல ஒருவன் செய்யும் தீங்குகள் பெருமைவாய்ந்தவர்களிடம் உயர்ந்தேறிச் செல்ல முடியாமல், தங்களை புண்ணிடுபவர்கள் பேரிலேயே சென்று கழிகின்றன.

ஆத்மாவின் அற்ப குணம் ஒருவனைப் பழிவாங்கத் தூண்டும், ஆத்மாவின் பெருந்தன்மை அத்தன்மையான குற்றத்தை வெறுக்கிறது. அது மாத்ரமல்ல; தன் சாந்தத்தைக் கெடுத்த அம்மனிதனுக்கு நன்மையையும் திருப்பச் செய்கிறது. மனிதனே! நீ யேன் பழிவாங்க விரும்புகிறாய்? என்ன காரியத்துக்காக அத்தன்மையைப் பின்பற்றுகிறாய்? அதனால் உன் சத்ருவுக்கு இடைஞ்சல் செய்யலாமென்று எண்ணுகிறாயா? அதனால் நேரும் வேதனையை நீயே யுணர்வாயென்று தெரிந்துகொள். பழிவாங்கும் வர்மம் தான் மேற்கொண்ட மனிதனது மனத்தையே யறுக்கிறது. ஆனால் யார் அவ்வர்மத்துக் கெதிரானவனோ அவன் சாந்தமாயிருக்கிறான்.

அவ்வர்மம் தான் படுத்தும் துன்பங்களில் ந்யாய விரோதமுள்ளதா யிருக்கிறது; அதனால் அது உனக்குத் தகுந்ததல்ல. ஏற்கனவே கஷ்டப்பட்டவனுக்கு, இன்னும் அதிக கஷ்டம் வேண்டுமா? மற்றொருவன் தனக்குச் செய்த துன்பங்களோடு பகைமையும் சேர்க்கவேண்டுமா? பழிவாங்கும் வர்மமுள்ளவன் தனக்கு நேர்ந்த துன்பத்தில் திருப்தியடையாதவனும். தன் துன்பத்தோடு மற்றொருவனுக்குரிய தண்டனைகளையும் கூட்டிக்கொள்ளுகிறான். தன்னால் தீங்கு கருதப்பட்டவன் சிரித்துக்கொண்டு தப்பிப்போகத், தீங்கு கருதினவன் தன் துன்பத்தை இரட்டித்துக்கொண்டு பலர் நகைப்புக் கேதுவாகிறான்.

வர்மம் என்னுமதே வ்யஸநகரமானது, பழி வாங்குவதோ அபாயகரமானது. ஒருவன் பிடிக்கும் கோடாலியினது வெட்டு அவன் நினைத்தவிடத்திலேயே எப்போதும் விழுவதில்லை. திரும்பித் தன்மேல் அது அடிக்கவுங் கூடுமென்பதை அவன் ஞாபகத்தில் வைப்பதில்லை. பழிவாங்குஞ் சிந்தையுள்ளவன் தன் சத்ருவுக்குத் தீங்கு தேடுவதில் பெரும்பாலும் தன் நாசத்தையே ஸம்பாதித்துக் கொள்ளுகிறான். எதிரி பிறரின் ஒரு கண்ணை அழியப் பார்க்கும்போது அவனது இரண்டு கண்களும் போய்விடுகின்றன.

தான் கருதினது முடியாவிட்டால் அதற்காகத் துக்கிக்கிறான். தான் கருதினபடி நடந்தேறினால் பின்பு பச்சாத்தாபப்படுகிறான். தர்மத்தின் பயம் அவன் ஆத்மசாந்தியைக் கலைக்கிறது. ந்யாயத்தின் தண்டனைகளிலிருந்து தப்பிக்கொள்ள அவன் எடுக்கும் கவலை அவனுக்கு நண்பர்களைப் போக்கடிக்கிறது. உன் சத்ருவினது துர்மரணம் உன் பகையைத்

தணிக்கக்கூடுமா? அவனைச் சாந்த நிலையிலமரும்படிப் புதைத்துவிடுவது உனக்கு மனச்சாந்தத்தைத் திரும்பிக்கொடுக்குமா? இறந்துவிட்டால் அவன் தனது குற்றத்தை யுணர்ந்து அதற்காக அவன் துக்கிக்கவும் நீ அவனை ஜயித்து மன்னித்துவிடவும் முடியுமா? மரணத்தினால் அவன் உன்னுடைய பெருமையை ஒப்புக்கொண்டதாகாது. உன் கோபாவேசத்தின் கொடுமையையும் அவனிறந்த பின்னர் உணரமாட்டான்.

பழிவாங்குவதில் பலம் ஸாதிப்பவனுக்கு வெற்றிதோன்றவேண்டும். அவனுக் கிடைஞ்சல் செய்தவன் அவன் தனது குறையை யுணரவேண்டும். அதனால் அவன் துன்பப்படவேண்டும். அத்துன்பத்துக்குக் காரணமாயிருந்ததை யெண்ணி அவன் பச்சாத்தாபப் படவேண்டும். இதுதான் கோபத்தினாலெழுந்த வர்மம். ஆனால், மிகக்கொடிய கார்யங்களைச் செய்வது பழிப்புக்கிடமானதாம்.

ஒருவன் செய்த தீங்குக்காக அவனைக் கொல்லுவது கோழைத்தனம். அப்படிச் செய்பவன் சத்ரு உயிரோடிருந்தால் தன்மேற் பழிவாங்குவான் என்ற எண்ணத்தாற் செய்கிறான். அவனது மரணம் கலகத்தை நிறுத்திவிடலாம்; ஆனால் அது கொன்றவனது கெட்டபேரைச் சீர்திருத்துவதில்லை. கொலை தைர்யத்தை யுணர்த்தும் செய்கையல்ல, முன் ஜாக்ரதைக்காகச் செய்வதே. அது க்ஷேமமானதல்ல; கௌரவம் பொருந்தியதுமல்ல.

ஒரு குற்றத்துக்காகப் பழிவாங்குவதைப்போல இலகுவானது ஒன்றுமில்லை. ஆனால், அக்குற்றத்தை மன்னிப்பதைப் போலக் கௌரவமானதுமில்லை. தன்னையடக்கியாளுவதே பெரும் வெற்றியாம். உனக்குப் பழிவாங்குஞ் சிந்தை வரும்

போது, அவன் உனக்குச் செய்த தீங்கை நீ யுணர்ந்து ஒப் புக்கொள்ளுகிறாய். நீ குறைகூறும்போது உனக்கு அதனால் தீங்கு நேர்ந்ததையும் ஒத்துக்கொள்ளுகிறாய். நீ இப்படி நினைப்பதால் உன் சத்ருவினது கர்வம் அதிகமாகிறது. அதிக மான கர்வத்தை அவனுக்குச் சேர்த்துவைப்பது உன் எண் ணமா?

வ்யாகூலமென்பது ஒருவனால் உணரப்பட்டாலன்றோ? பழிவாங்குவதை யிகழ்பவன் அதனை எப்படி யுணரக்கூடும்? ஒரு குற்றத்தைத் தாங்குவது கௌரவஹீனமென்று நினைத் தால் நீ அதை ஜயித்துவிடக்கூடுமே!

> "இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர் நாண
> நன்னயஞ் செய்து விடல்."

நன்மை செய்வது, ஒருவன் உன்னோடு பகையாளியிருப் பதற்காக அவனை வெட்கப்படச் செய்கிறது. ஆத்மவுயர்வு உனக் கிம்சை செய்யாதபடி அவனைப் பயமுறுத்தும். குற்றம் புரி தானை வளவிற்கு அதனை மன்னித்தலும் உனது ஆத்மாவுக்கு அவ்வளவு பெருமையைத் தரும். பழிவாங்குவது எவ்வளவு நீதியாகப்படுகிறதோ அதைவிடசாந்தம் அதிக கண்யமுள்ளது. உன் விஷயத்தில் நீ ந்யாயாதிபதியாயிருக்க உனக்கு அதிகார முண்டா? ஒரு செய்கைக்குக் கர்த்தாவாகவுமிருந்து அதைப் பற்றி தீர்ப்பையுஞ் சொல்லுகிறதா? நீ தண்டனை விதிப்பதற்கு முன் வேறொருவன் அதன் ந்யாயத்தைப்பற்றிச் சொல்லட்டும்.

## 4-வது அத்யாயம்.

### CRUELTY, HATRED, & ENVY.

### க்ரூரமும், பகையும், பொருமையும

பழிவாங்கும் எண்ணம் நிக்ருஷ்டமானது. பின் க்ரூர மென்பதென்ன? ஒருவனது க்ருத்ருமத்தோடு கோபத்துக் குரிய வேஷங்களும் அதிலிருக்கிறது. மனிதர்கள் தங்களுக்கு அது ஸ்வபாவமில்லை யென்கிறார்கள். தங்கள் மனதில் அது குடியிராததுபோல அதைக் கண்டு நாணுகிருர்கள். அதனை அவர்கள் பூத தயையின்மை யென்று விலக்குவதில்லையா? அதனுடைய மூலகாரணம் யாது? எந்த மனித ஸ்வபாவத்தி லிருந்து அது பிறக்கிறது? அதன் தந்தை அச்சமாம், அதன் தாய் மனக்கலக்கமாம்.

வீரன் தன்னை எதிர்க்கும் சத்ருவின்மேல் தன் கத்தியைச் செலுத்துகிறுன். ஆனால், சத்துருவடங்கினதும் அவன் திருப்தியடைகிறுன். பயந்தவன்மேலேறுவது கவுரவமல்ல. தாழ்ந்தவனை யிகழ்வது நற்குணமல்ல. போக்கிரியை யடக்குக. தாழ்ந்தவர்களை விட்டுவிடுக. பின் வெற்றி உன்னுடையதே. இந்நோக்கங்களை யடையத்தக்க நற்குணமும், இவ்வகையாக வெற்றி பெறத்தக்க தைர்யமும் இல்லாதவன் வெற்றிக்குப் பதில் கொலையைத் தேடுகிறுன்.

பயங்காளி எவனேடும் சண்டைக்குப் போகிறுன். கொடுங்கோன் மன்னன் க்ரூரமாயிருப்பதற்குக் காரணம், அவர்கள் எப்போதும் பயத்தோடு குடியிருப்பதுதான். தாழ்ந்த ஜாதியான நாய் ஒரு ப்ராணியை உயிரோடிருக்கும் போது எதிர்க்கப் பயந்துகொண்டிருந்தாலும், இறந்தபின் அதன் சவத்தைக் கிழிக்கும்; ஆனல், வேட்டைநாயோ வேட்

டையில் தான் கிழித்துக் கொல்லும். அது ப்ராணியைச் செத்தபின் தொடாது.

ஊர்க் கலகம் அதிகம் சேதகரமானது ; ஏனெனில் அதில் சண்டை செய்பவர்கள் கோழைகள். சதியாலோசனை செய்பவர்கள் கொலைக் கஞ்சார்கள் ; ஏனெனில், இறந்தவர்கள் ஸங்கதியை வெளிப்படுத்துவதில்லை என்று எண்ணுகிறார்கள். தாங்கள் காட்டிக் கொடுத்துவிடப் படுவார்கள் என்று சொல்லு வது அவர்களது பயமல்லவா ? நீ நிஷ்க்ரூரியாயிருக்கவேண்டு மானால், பகைக் கிடங்கொடாதே. நீ பூத தயையோடிருக்க வேண்டுமானால் பொறாமைக் கிடங்கொடாதே.

ஒவ்வொரு மனிதனையும் இரண்டுவழியாகப் பார்க்க லாம். ஒரு வழியில் அவன் வெகு தொந்தரவு தருபவனாய்த் தோன்றுவான். மற்றொரு வழியில் அதிகக் கஷ்டந்தராதவ னாகக் காணப்படுவான். ஒருவனை அதிக இடைஞ்சல் தராதவ னாகப் பாவித்தால் அவனுக்குத் தீங்கிழைக்க உனக்கு மனம் வராது. மனிதன் தனது நன்மைக் கென்று மாற்றிக்கொள்ள முடியாத வஸ்து என்னவிருக்கிறது ? நம் மனத்தை மிகப்புண் படுத்தும் வஸ்துக்களைப் பற்றிக் குறைகூற அதிகம் ஏதுவுண் டேயொழிய வெறுக்க ஏதுவில்லை. மனிதன் யாரைப்பற்றிக் குறைகூறுகிறானோ அவனோடு ஒத்து வாழ்வான். ஆனால், தனக்காகாத வஸ்துக்களையே நாசஞ்செய்கிறான்.

உனக்கு ஒரு ஆதாயம் கிடைக்காதபடி பிறர் தடுத்தால் நீ கோபாவேசங்கொள்ளாதே. நீ மதியிழப்பது பெரு நஷ்ட மாகும். உன்மேலங்கியை ஒருவன் பறித்துக் கொண்டதற்காக உன் உள்ளங்கியையும கழற்றியெறிவாயா ? கௌரவங்களைத் தரிக்கும் மனிதனைப் பார்க்கும்போது அவனது பட்டங்களும்,

பெருமையும் உனது அகங்காரத்தைக் கிளப்பினால், அவனுக்கு அப்பெருமைகள் எங்கிருந்து வந்தனவென் றெண்ணிப்பார். எவ்வழியாக அவை அவனுக்கு வந்தனவென்று கருதிப்பார்த்தால் உனது பொறாமைக் குணம் மாறி அவனிடத்து உனக்கு இரக்கம் தோன்றும்.

அவ்வளவு பரிதானங் கொடுத்து அப்பெருமை உனக்கு வருகிறதாயிருந்தால், நீ புத்திசாலியானால் அதனை வேண்டாமென்று மறுத்துவிடுவாயென்று நிச்சயமாக நம்பு. பட்டங்களுக்கு காரணம் முகஸ்துதிதான். மனிதனுக்கு அதிகாரம் எப்படிக் கிடைக்கிறது? அவ்வதிகாரத்தை யளிப்பவனுக்கு அடிமை செய்துதானென்று அறிந்துகொள். வேறொருவனது ஸ்வாதந்தர்யத்தை நாசஞ்செய்யும் சக்தி உனக்கு வருவதற்காக உன் ஸ்வாதந்தர்யத்தை இழந்துவிடுவாயா? அல்லது அப்படி இழப்பவனைக்கண்டு பொறாமைகொள்வாயா?

மனிதன் தன் யஜமானர்களிடத்திலிருந்து ஒன்றையும் விலைகொடுக்காமல் பெறுவதில்லை. உலக நடைகளை மாற்ற விரும்புகிறாயா? விலைகொடுத்து வில்லங்கங்களைப் பெறுவாயா? நீ ஒப்புக்கொள்பவற்றை வெறுக்க முடியாதாதலினால், இவ் வெறுப்பு மூலத்தைத் தூரத்தள்ளி உன் க்ரூர வேதனையையும் உன் மனத்தைவிட்டோட்டு. உனக்குக் கௌரவ மிருந்தால், அதைக் கெடுப்பதாற் கிடைக்கும் ஊதியத்தைக் கண்டு பொறாமை கொள்ளுவாயா? நற்குணங்களின் உயர்வு தெரிந்தால், அவற்றை விற்றவர்களைக் கண்டு பரிதாபப்பட மாட்டாயா?

புறத் தோற்றத்தால் விளங்கும் பெருமையைக் கண்டு மன வருத்தப்படாமற் கேட்கக் கற்றுக்கொண்ட தட்சணமே, மனிதர்களது உண்மையான ஸுகங்களை உவப்புடன் கேட்கத்

தலைப்படுவாய். தகுதியானவர்களுக்கு நன்மையுண்டாவதை பார்த்தால் நீ ஸந்தோஷிப்பாய்; ஏனெனில், நல்லவர் ஓங்கி நிற்பதைக்கண்டு ஸந்தோஷப்படுவதே நற்குணத்தின் லக்ஷணமாம். பிறரது ஸௌக்கியங்களில் ஸந்தோஷிப்பவன் தன் ஸந்தோஷத்தை அதுவழியாய் விருத்தி செய்துகொள்ளுகிறான்.

## 5 - வது அத்யாயம்.

### மனோதுக்கம்—HEAVINESS OF HEART.

உத்ஸாஹிகளின் ஆத்மா துக்கிகளின் முகத்தில் புன் சிரிப்பை வரவழைக்கிறது; ஆனால், துக்கிகளினது ஏக்கம் ஸந்தோஷத்தின் ப்ரகாசத்தையுங்கூடக் கெடுத்துவிடுகிறது. ஆத்ம பலவீனத்தைக் காட்டிலும் துக்கமூலம் வேறெது? சைதன்யக் குறைவே துக்கத்துக்குப் பலங்கொடுக்கிறது. அதனோடு போராட நீ தீர்மானிப்பதற்கு முன் அது உன்னை விட்டு ஓடிப்போகிறது. அது மனித ஜாதிக்கே ஜன்மசத்ரு; அதனால், உன் மனத்தைவிட்டு அதனை உடனே தூர ஓட்டு. உன் வாழ்நாளின் இன்பங்களுக்கு அது விஷமூட்டுகிறது. அதனால் அதனை உன் ஆச்ரமத்துக்குள் அணுகவிடாதே.

மேலும், அது உனக்கு நேரும் சிறு நஷ்டத்தை உன் செல்வமத்தனையும் போனதாக மதிக்கச் செய்கிறது. அற்ப விஷயங்களைப்பற்றி யெல்லாம் அது உன் மனத்தை வருத்தும் போது, நீ பெருவிஷயங்களைப் பற்றிக் கவனியாதபடி செய்கிறது. அத்துக்கம் உனக்குச் சொல்லுவதாகத் தோன்றும் விஷயங்களை முன்னுணர்ச்சியோடு கூறுவதாகக் காட்டுவதைப் பார். உன்னுடைய நற்குணங்களை மறைக்கச் சோம்பலைப் பரப்புகிறது. அவற்றைக் கண்டு உன்னை மதிப்பவரது கண்ணில் நீ படாதபடி மறைக்கிறது.—அதாவது அவற்றைத்

தன் வலைக்குட்படுத்தி அவற்றை யடக்கிவைக்கிறது. அதே ஸமயத்தில் நீ யவற்றையதிகம் உபயோகிக்க வேண்டிய அவசியங்களையும் உண்டுபண்ணுகிறது.

அது உனக்குத் தீங்கிழைத்து உன்னை ஹிம்ஸிக்கிறது. உனது பாரத்தை நீக்கமுயலும் உனது கைகளைக் கட்டிவைக்கிறது. நீ அற்பத்தனத்தை விலக்கவெண்ணினால், பயங்காளித்தனத்தை வெறுத்தால், அநீதியை உன் எண்ணத்தைவிட்டு ஓட்டக் கருதினால் துக்கம் உன் மனத்தைப் பற்றிக்கொள்ளாமற் பார். பக்தியென்ற போர்வையில் அது நுழையாமற் பார். ஞானவேஷத்திலும் அது உன்னை ஏமாற்றும விருக்கட்டும். மதம உனது சிருஷ்டிகர்த்தாவுக்கு மர்யாதை செய்கிறது.

அதனால் அதற்கு துக்கமுலாம் பூசவேண்டாம். ஞானம் உனக்கு ஸுகத்தை அளிக்கிறது. அப்படியாயின் துக்கம் ஞானத்துக்கு முன்வர முடியாதென்றறி. துன்பங்களுக்காக வன்றிப் பின் எதற்காக மனிதன் துக்கப்படவேண்டும்? ஸந்தோஷத்தின் மூலங்கள் ஒருவனிடத்திலேயே யிருக்கும் போது அவன் மனம் ஏன் அதனை விட்டுவிடவேண்டும்? இது துன்பத்துக்காகத் துன்பப் படுவது போலில்லையா?

கூலிக்கு மாரடிப்பவள் துக்கித்துக் கண்ணீர்விடுவதைப்போலவே தான் துக்கத்தோடிருப்பதாக ஒருவன் எதையும் பொறுத்துக்கொண்டு ஒழுகுகிறான். ஒருவனுக்குத் துன்பந்தருவது காலம் அல்லது ஸமயமல்ல; ஏனெனில் அதுவே மற்றொருவனுக்கு இன்ப ஹேதுவாயிருக்கும். துக்கிப்பதனால் கார்யங்கள் அநுகூலப்படுமாவென்று ஒருவனைக் கேள்; அது முட்டாள்தனமென்று அவனே யொப்புக்கொள்ளுவான். அது மாத்ரமல்ல; பொறுமையோடு தீமைகளை

ஸஹிப்பவர்களை அவனே புகழுவான்; தைர்யத்தோடு கஷ்டங்களை யலட்சியஞ் செய்பவர்களைக் கண்டு ஸ்தோத்ரம் செய்வான். அக்குணத்தை நினைக்கும்போதே வியப்புண்டாகும். துக்கம் ஸ்வபாவ விரோதி. இயற்கையினது அபிவ்ருத்திக்கு அது ஸங்கடந்தருவது. அவ்வியற்கை குணப்படுத்தி வைத்தவற்றையெல்லாம் சுவையறச் செய்கிறது.

பெருங் காற்றடித்து வீழ்ந்த மரம் பிறகு தலையெடுக்காததுபோல துக்கத்தால் ஆழ்த்தப்பட்டவன் மீண்டும் பலம் பெறுவதில்லை. மலைச்சாரல்களில் ஓடும் மழையருவி நீரால் பனியுருகுவதுபோல, அழுதகண்ணீரால் கன்னங்களின் அழகு கெடுகிறது. போன அப்பனியாவது அழகாவது திரும்பி வருவதில்லை. காடியானது முத்தை மங்கலாக்குவதுபோலத் தோன்றி எப்படிக் கரைத்துவிடுகிறதோ அதுபோலவே மனோதுக்கமும் முதலில் தன் நிழலால் மூடுவதுபோலக்காட்டி ஒருவனை உருக்கி விடுகிறது.

பெருந் தெருக்களில் துக்கம் நிற்பதைப்பார். பலரும் கூடுமிடங்களில் அவளிருப்பதைப்பார்—யாராவது அவளைப் பார்க்கிறார்களா? ஒவ்வொருவரையும் கண்டு அவள் விலகுவதில்லையா? அவள் முன்னிலையினின்று ஒவ்வொருவரும் ஓடுகிறார்களல்லவா? காம்புகிள்ளப்பட்ட பூவைப்போல அவள் தலை கவிழ்ந்து கிடப்பதைப் பார். அவள் கண்கள் பூமியைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார். அவளுக்குக் கண்கள் கண்ணீர் விடுவதற்குத் தவிர வேறொரு பயனுக்கு மில்லையென்பதையும் கவனி.

அவளது வாயில் ஸம்பாஷணையென்பதுண்டா? அவள் மனத்தில் ஜனஸமூக அன்புண்டா? அவளது ஆத்மத்தில்

ஞ்யாயாஞ்யாய விவேகமுண்டா? ஏனில்லை யென்பதன் காரணத்தைக்கேள். அவளுக்கே சொல்லத் தெரியாது. என்றாலும் அவளுடைய பலம் அவளைக் கைவிட்டுவிட்டது. அங்தோ கடைசியாக அவள் கல்லறைவரையிலும் செல்லுகிறாள். அவள் கதியாதாகிறதென்று ஒருவராலும் சொல்ல முடிவதில்லை. உனக்கு ஞானமிருந்தும் இதைக் காணுவதில்லையா? உனக்குத் தெய்வபக்தியிருந்தும் உன்பிழை உனக்குத் தெரிவதில்லையா?

கடவுள் உன்னிடத்துள்ள க்ருபையாலுன்னை ச்ருஷ்டித்தார். நீ ஸுகத்தோடிருக்கவேண்டுமென்று அவர் எண்ணவில்லையானால் உன்னை ச்ருஷ்டித்திருக்கவேமாட்டார். அப்படியிருக்க அவரது ஸந்நிதானத்தைவிட்டு ஓட ஏன் நினைக்கிறாய்? நிர்த்தோஷமாய் நீ ஆநந்தத்தை அநுபவிக்கும்போது நீ அவருக்கு ஸர்வ மர்யாதையும் செய்கிறாய். உன்னுடைய அத்ருப்தி யென்பது அவருக்கு விரோதமாக முணுமுணுப்பைத்தவிர வேறென்ன? எல்லாவஸ்துக்களையும் மாறிக்கொண்டிருக்கும்படி அவர் ச்ருஷ்டிக்கவில்லையா? அவை மாறுவதைக் கண்டு நீ அழத் துணிகிறாயா?

இயற்கையின் விதிகளை உணர்ந்தால் இம்மாறுதல்களைக் கண்டு துக்கிப்போமா? அவ்விதிகளை அறியாதிருந்தால், ஒவ்வொரு நிமிஷமும் நம்மைச்சுற்றிலும் எவ்வளவோ மாறுதல்கள் நடப்பதைப் பார்க்கும் நாம் நம்மைத் தவிர யாரைநொந்துகொள்ளுகிறது? உலக கார்யங்களுக்கு நீ விதியேற்படுத்துபவனல்லவென்று தெரிந்துகொள். உன் வேலை அவற்றிற்குக் கீழ்ப்படிந்து நடப்பதாம். அவை உன்னைத் துன்பப் படுத்தினால அதற்காக நீ படும் துக்கம் உன் ஹிம்ஸைகளை அதிகப் படுத்துகிறது.

வெளித் தோற்றத்தைக் கண்டு ஏமாறாதே; துக்கம் துன்பங்களை நிவர்த்திக்குமென்றும் எண்ணாதே. அது புண்ணாற்ற வந்த மருந்துபோலத் தோன்றும் விஷம். உன் நெஞ்சில் தைத்த பாணத்தைப் பிடுங்குவதுபோல வேஷங்காட்டினாலும் உன்மனத்தில் அதனை ஆழப் பதித்துவிடுகிறது. துக்கம் உன்னை ஸ்நேஹிதர்களிடத்தினின்றும் பிரிக்கும்போது நீ ஸம்பாஷணைக்கு தகுதியில்லாதவனென்று சொல்லவில்லையா? உன்னை அது ஹிம்ஸிக்கும்போது தன்னைத்தானே நோக்கி அது வெட்கப்படுவதாகச் சொல்லுவதில்லையா? துன்பங்களைத் துக்கமில்லாமல் அநுபவிப்பது உனக்கியற்கையல்ல. அது நியாயமுமல்ல. துன்பங்களைத் தாங்குவது ஆண்மகனது கடமை; ஆனால், அவ்வாண்மகனைப் போலவே நீயும் அதனையுணரவேண்டும்

உன் மனத்தினின்று நற்குணம் நீங்காதபோதிலும், கண்களிலிருந்து நீர்த்துளிகள் விழலாம். ஆனால், காரணமில்லாமல் அளவுக்கதிகமாக அக்கண்ணீர் விழாதபடி பார்த்துக் கொள்ளுக. துன்பத்தின் பெருமை கண்ணீர்த் துளிகளைக் கொண்டு அளவிடப்படுவதல்ல. பொறுத்தற்கரிய துன்பங்கள் பார்ப்பவரில்லாமற் கழிகின்றன. அதுபோலவே அளவிறந்த இன்பங்கள் வர்ணிக்க முடியாமலிருக்கின்றன.

துக்கத்தைப்போல ஆத்மாவைப் பலவீனப்படுத்துவது எது? மனோவ்யாதியைப்போல் அதனைக் கீழ் அழுத்துவதும் எது? துக்கி உயர்ந்த கார்யங்களைச் செய்யத் தயாராயிருக்கிறானா? அல்லது நற்குண நற்செய்கைகளுக்காகக் கச்சைகட்டிக்கொள்கிறானா? ஒரு ப்ரதிபலனுமில்லாத துக்கத்துக் கிடங்கொடுக்காதே. தீமைக்காக நன்மை த்வாரங்களை விட்டுவிடாதே

# பத்தாவது காண்டம்.

---

## மனிதன் தன் குணிலைகளினின்று தன்னை உயர்த்திக்கொள்ளக் கூடுமென்பது.

### 1 - வது அத்யாயம்.

ப்ரபுத்வமும் கண்யமும்—NOBILITY AND HONOUR.

ப்ரபுத்வம் ஆத்மாவிலேயே குடியிருக்கிறது. தர்மத்தைத்தவிரச் சிறந்த கண்யமுமில்லை. பாபச்செய்கைகளால் ராஜகுமாரரது தயை ஸம்பாதிக்கலாம். அந்தஸ்தும் பட்டமும் பணத்தாற் கிடைக்கும். ஆனல், இவை உண்மையான கௌரவங்களல்ல. குற்றங்கள் ஒருவனுக்கு உண்மையான உயர்வைக் கொடா. பொன் படைத்து ஒருவன் ப்ரபுத்வம் அடைவது மில்லை.

ஸத்கார்யங்களுக்கு வெகுமதியாகப் பட்டம் அளிக்கப் பட்டபோதும், தன் நாட்டுக்கு நன்மை செய்தவன் உயர்ந்த பதவியில் வைக்கப்பட்டபோதும், அப்பட்டத்தை யளித்தவனுக்கும் கௌரவமுண்டு; அதைப் பெற்றுக்கொண்டவனுக்கும் கௌரவமுண்டு. உலகமும் அதனல் நன்மை யடைகிறது. உனக்கு உயர்ந்த பதவி வேண்டுமா? மனிதர்கள் ஏன் உன்னத பதவியை விரும்புகிறார்களென்று உனக்குத் தெரியுமா? இவனுக்கு எதற்கிது வந்ததென்று பலருஞ் சொல்லும்படியான பதவியை யடைய விரும்புகிறாயா ?

ஒரு வீரனது குணம் அவனது பிள்ளைகளுக்குண்டா கும்போது அவனது பட்டங்களும் அவர்களுடன் வருகின்றன. தகாதவனுக்கு அப்பட்டங்கள் தொடர்ந்துவந்தால் ஜனங்கள் அவனைச் சீர்கேடனென்கிறார்களா, இல்லையாவென்பதை யோசித்துப்பார். வம்சாவளியாக வந்த கௌரவம் மிகச் சிறந்ததாக எண்ணப்படுகிறது. ஆனால், அக்கௌரவத்தை ந்யாயமாய் ஸம்பாதித்தவர்களைத் தான் பலரும் புகழ்ந்துபேசுகிறார்கள். தனக்கென்று யோக்யதை யில்லாத ஒருவன் தனது முன்னோர்களது பெருமையைச்சொல்லிக் கௌரவம் தேடுவது ஒரு திருடன் கோவிலுக்குள் நுழைந்துகொண்டு தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று ப்ரார்த்திப்பது போலிருக்கிறது. தனது பெற்றோர் பார்வையுடையவர்களென்று சொல்வது குருட்டுப் பையனுக்கு என்ன பயனைத்தரும்? தன் பாட்டனார் நாவலரானல் ஊமைப்பேரனுக்கென்ன? அதுபோலவே தமது முன்னோர்கள் நல்ல ஸ்திதியிலிருந்தார்களென்பது அற்பருக்கென்ன பயனைத் தரும்?

நன்மையைக் கருதும் மனது அம்மனத்தைப் பெற்றவனுக்குப் பெருமையைத் தரும். பட்டம் ஒன்றுமில்லாமலே அது அவனைப் பாமரர்களுக்குமேல் தூக்கிவிடும். மற்றவர்கள் கௌரவத்தைக் கொடுக்கப்பெறுகிறார்கள்; இவனோ அதனைத் தானே ஸம்பாதிக்கிறான். ஒருவனை நிழல் சார்வதுபோலக் கௌரவமும் நற்குணத்தைச் சார்ந்துநிற்கிறது. கௌரவம் துணிகரத்தினது குழந்தை. அதனைப்பெற ஒருவன் தன் ப்ராணனைக் கொடுப்பது மாத்ரம் போதாது. கௌரவம், செய்யும் செய்கைக்கல்ல, அது செய்யும் விதத்துக்காகும்.

எல்லோரும் ராஜகார்யத்துக்குத் துணைசெய்ய அழைக்

கப்படுவதில்லை. சேனைகளை நடத்தும் பணி ஒவ்வொருவருக்கும் நேராது. உனக்கிட்ட வேலையைத் திருந்தச்செய். புகழ் உன்னை அடுத்துநிற்கும். கீர்த்திபெறக் கஷ்டங்களை மேற்கொள்ளவேண்டுமென்று சொல்லாதே. உழைப்பும் அபாயமுந்தான் புகழ்பெறும் வழிகளெண்ணாதே. கற்போடிருக்கும் ஸ்த்ரீயைப் புகழாதாருண்டா? யோக்யன் கௌரவிக்கத் தகுந்தவனல்லவா?

கீர்த்தி வேண்டுமென்னும் ஆசை மூர்க்கமானது. கண்ய இச்சை பலமுள்ளது. இவ்விரண்டையும் நமக்களித்தவர் மேலான நோக்கங்களுக்காக நமக்குக்கொடுத்தார். பொதுநன்மைக்காகத் துணிகரச்செய்கைகள் செய்வது அவசியமானபோதும், தேச க்ஷேமத்துக்காக நாம் ப்ராணனை விடவேண்டி வந்தாலும், நமது ஸத்குணத்தோடு ஊக்கமும் சேர்கிறது. பெருந்தன்மை வாய்ந்த மனதுக்கு உவப்பு, கௌரவம்பெற்றதிலில்லை; ஆனால், அகௌரவத்துக்குத் தகுதியுள்ளவனென்ற எண்ணத்தில்தான் ஸந்தோஷம்.

இவனுக்கு ஏவன் அந்தஸ்து கொடுத்தானென்று கேட்பதைக்காட்டிலும், இவனுக்கு ஏன் அந்தஸ்து கொடுபடவில்லையென்று பலரும் விசாரிப்பது விசேஷமல்லவா? அதிகார விச்சையுள்ளவன் ஜனக் கூட்டத்தில் முதன்மையாயிருப்பான். முன்சென்று பின் நோக்குவதில்லை. அவனுக்குத் தனக்குமேலொருவ னிருப்பதைக்கண்டு வ்யஸனமேயொழியப் பலரைத் தூரவிட்டுப் பிரிகிறோமேயென்ற ஸந்தோஷமில்லை. ஒவ்வொருவனிடத்திலும் அதிகார விச்சைக்குரிய மூலமிருக்கிறது. ஆனால், அது எல்லோரிடத்திலும் எழுவதில்லை. சிலரிடத்துப் பயம் அதனை ஆழ்த்திவிடுகிறது. பெரும்பாலார் வணக்க

முடைமையால் அதனைக் கைக்கொள்வதில்லை. அது ஆத்மாவின் உட்போர்வை. பிறக்கும்போதே தோன்றி அது ஒருவன் சாகும்வரையில் நிற்கிறது. அதனை ஸரியாய் உபயோகிப்பது கௌரவ ஹேதுவாம். அதை பிசகான வழிகளில் உபயோகித்தால் உன்னை யவமானத்துக்குள்ளாக்கி யழித்துவிடுகிறது.

சதிகாரன் மனதில் அதிகார இச்சை புதைந்துகிடக்கிறது. கபடம் அவன் முகத்தைத் திரையால் மறைப்பதுபோல மறைக்கிறது. மித்ரபேதம் ம்ருதுவான சொற்களை யூட்டுகிறது. ஆனால், முடிவில் ஜனங்களுக்கு உண்மை வெளியாகிவிடும். பனியால் விறைத்துப் போனாலும் பாம்பு தன் விஷத்தை யிழப்பதில்லை. குளிரால் வாய்மூடிப்போனாலும் அதன் விஷப்பல் ஒடிவதில்லை. அதனிடத்து இரக்கங்கொள். அதன் உண்மை ஸ்வபாவத்தைக் காட்டிவிடும். அதற்குச் சூடுகாட்டிப் பால் ஊற்றினாலும் உன்னைக் கொன்றே தீரும்.

உண்மையாய் நற்குணமுள்ளவன் புண்யத்தைப் புண்யத்துக்காக மதிக்கிறான். அதிகார விச்சையால் வரும் புகழை அவன் வெறுக்கிறான். பிறர் ஸ்துதி பண்ணுதிருக்கும்போது ஆநந்தத்தைத்தராத சீலம் எவ்வளவு பரிதாபத்துக்கிடமானது? ஸத்குணத்துக்கு ப்ரதிபலன் வேண்டியதில்லை. அதற்கு வெகுமதியும் வேண்டாம்.

ஒருவனது நிழலைப்போலவே பெருமையும் தன்னைத் தேடிச் செல்பவன் கைபிலெட்டாமல் ஓடுகிறது. ஆனால், தன்னைக் கண்டு பயந்து செல்பவனைப் பின்பற்றி வெருட்டுகிறது. யோக்யதை யில்லாமல் நீ அதை யடைய விரும்பினால் நீ யொருபொழுதும் அதனைப் பெறமாட்டாய். உனக்கு அதைப் பெறும் யோக்யதையிருந்தால் நீ யொளிந்து திரிந்தாலும்

அது உன்னை விடாது. கண்யமான கார்யங்களைச் செய்யத் தொடங்கு. ஸரியான கார்யத்தைச் செய். உன் மனச்சாக்ஷி யின் ,ஸ்தோத்ரமே உன்னை யூறியாத பல்லாயிரம் பேரினது புகழ்ச்சியைக் காட்டிலும் உனக்கு அதிகம் ஸந்தோஷத்தைத் தரும்.

## 2 - வது அத்யாயம்.

### சாஸ்த்ரமும் படிப்பும்—SCIENCE AND LEARNING.

மனிதன் தன் மனத்துக்குக் கொடுக்கும் பெரும்வேலை ச்ருஷ்டி கர்த்தாவினது ச்ருஷ்டிகளைப் படித்தறிவதாம். இயற்கைஞானம் ஒருவனுக்கு ஸந்தோஷத்தைத் தரும். அது உலக வஸ்துக்களில் ஒவ்வொன்றும் கடவுளது உண்மைக்கு அத்தாட்சியைத் தருகிறது. இவ்வுண்மையை விளக்கும் ஒவ் வொன்றும் பூஜிக்கத் தகுந்ததாயிருக்கிறது. ஒவ்வொரு நிமிஷ மும் அவன் மனம் தெய்வத்தைச் சிந்திக்கிறது; அவனது ஜீவ்யமே பக்திக் கோவையாக முடிகிறது.

அவன் ஆகாயத்தை உற்றுநோக்கும்போது வானத்தில் அற்புதம் நிறைந்திருக்கப் பார்ப்பதில்லையா? பூமியைப் பார்க் கும்போது கடவுளைத் தவிர வேறு யார் என்னை ச்ருஷ்டிக்க முடியுமென்று நாகப்பூச்சி சொல்லுவது போலில்லையா?

க்ரஹங்கள் தங்கள் வட்டத்தில் செல்லுவதையும், ஸூர்யன் தன்னிலையில் நிற்பதையும், தூமகேது ஆகாசத்தில் வீழ்ந்து தன் வீதிக்கு வருவதையும், பார்க்கும்போது கடவு ளைத் தவிர வேறு யார் அவற்றைச் செய்திருப்பார்களென்று படுகிறது? அவற்றையெல்லாம் ச்ருஷ்டித்து அவற்றிற்கு விதி களை யமைக்க அந்த ஸர்வக்ஞனுக்கன்றி வேறு யாருக்கு முடியும்?

அவற்றின் தோற்றம் எவ்வளவு பயங்கரமாயிருக்கிற தென்று பார். என்றாலும், அவை குறைகிறதில்லை. எவ்வளவு வேகமாகச் செல்லுகின்றன? ஆயினும், அவை ஒன்றோ டொன்று மோதிக்கொள்வதில்லை. பூமியின் விளைவைக் கருதிப் பார். அதன் அகட்டில் எவ்வளவு விலையுயர்ந்த லோஹங்க ளும் மணிகளும் இருக்கின்றன? அநந்த ஞானமும் அநந்த சக்தியுமுள்ள வஸ்துவே முற்றிலும் அவற்றை உண்டுபண்ணி யிருக்கவேண்டுமென்று படவில்லையா?

புல்லை முளைக்க வென்று ஆக்ஞாபிப்பது யார்? காலத் தில் அதற்குத் தண்ணீரூற்றுவது யார்? மாடு அதனைத் தின்று விடுகிறது. குதிரையும் ஆடும் அதனால் ஜீவிக்கின்றன. இவற் றிற்கு அப்புல்லைச் சேர்த்து வைப்பது கடவுளல்லவா? நீ விதைக்கும் தான்யத்தை வ்ருத்திபண்ணி ஆயிரக்கணக்காகத் திருப்பியளிப்பவர் யார்? காலத்தில் பயிர்களை விளைவிப்பவர் யார்? உனக்கு அவை விளையும் வகை தெரியாது போயினும் மூல பலாதிகளை விளைவிப்பவர் யார்?

ஒரு அற்ப ஈயாயினும் தன்னைத் தானே ச்ருஷ்டித்துக் கொள்ள முடியுமா? கடவுளினும் தாழ்ந்த நீயாவது ஒரு ஈயை ச்ருஷ்டிக்கமுடியுமா? ம்ருகங்கள் தாங்கள் உயிரோடிருப்பதை உணர்கின்றன. ஆனால், அவைகள் அதற்காக ஆச்சர்யப்படுவ தில்லை. தங்கள் ஜீவ்ய ஸுகங்களைக் கண்டு ஆநந்திக்கின்றன; ஆனால், இறப்புண்டென்ற விஷயம் அவற்றிற்குத் தெரியாது. எல்லா ப்ராணிகளும் பிறந்திறந்துழல்கின்றன. ஆயினும், ஆயி ரந் தலைமுறைக் கொருமுறையாவது ஒரு ஜாதி யழிந்ததென்ப தில்லை. ஒவ்வொரு முழுவஸ்துவும் எவ்வளவு ஆச்சர்யப்படத் தக்கதாயிருக்கிறதோ அவ்வளவு அதன் ப்ரத்யங்கங்களுமிருப்

பதைப் பார்க்கிறாய். அதனால், அவற்றில் தோன்றும் கடவுளது பெருமையைப் பார்ப்பதில் உன் கண்ணையும் அவற்றின் அற்புதங்களைப் பரிசீலிப்பதில் உன் மனத்தையும் உபயோகிக்கலாகாதா? அவற்றின் ரூபாகாரத்தில் கடவுளது சக்தியும், கருணையுங் காட்டப் பட்டிருக்கின்றன; அவற்றின் போஷணையில் நீதியும், ஸத்ஸ்வபாவமும் விளங்குகின்றன. ஒவ்வொரு ப்ராணியும் தன் தன் வழியில் ஸுகமாயிருக்கிறது.

இதனைப் படிப்பதைக் கவனிக்கையில் ஏட்டுக்கல்வி எம்மாத்ரம்? இயற்கைப் பொருட்பாடத்தைக் காட்டிலும் சிறந்த பாடமுமுண்டோ? அவ்வியற்கை அமைப்பை யறிந்த பின் அதன் உபயோகத்தைக் கவனிப்பாயாக. பூமி உனக்குப் பயன்படாத ஒன்றையும் விளைவிப்பதில்லை யென்று அறி. உன் உணவும், துணியும், உன் வ்யாதிக்கு மருந்தும் பூமியிலிருந்தே வருகின்றன வல்லவா? இவ்விஷயத்தைத் தெரிந்தவனைத் தவிர வேறு யார் புத்திமான்? அதைப்பற்றி யோசனை பண்ணாத வேறெவனுக்கு ஞானமுண்டாகும்? மற்ற விஷயங்களில் எந்த ஞானம் உனக்கு மிகப்பயன் தருமோ, எந்தக் கல்வி உன் டம்பத்தைக் குறைக்குமோ அந்தக் கல்வியைப் பின்பற்றி உன் அயலானுடைய நன்மைக்காக அதனைக் கற்று நன்மையடைவாயாக.

பிறப்பு, இறப்பு, ஆக்ஞா, தாஸத்வம், கர்மம், பலன் ஆகிய இவைகளைப் பற்றியன்றோ நீ கவலைப்படவேண்டியது? நல்லொழுக்கம் இவற்றை உனக்குக் கற்பிக்கும். உன் ஜீவ்ய சக்தியைச் சிக்கனமாகச் செலவிடவேண்டுமென்ற எண்ணம் அவ்வழிகளை உனக்கெதிரிற் காட்டும். அவ்வழிகள் ஏற்கனவே உன் மனத்தில் எழுதப் பட்டிருக்கின்றன. நீ யவற்றை ஞாப

கத்துக்குக் கொண்டுவரவேண்டியதுதான். அவை நினைப்புக் கெளியவை; கவனத்தைச் செலுத்தி நீ அவற்றை மனதில் வைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

மற்றைக் கலைஞானங்களெல்லாம் வீண். மற்றைக் கல்வி யெல்லாம் டம்பமே. அவை மனிதனுக்கு வேண்டியவையல்ல. அவனுக்கு நன்மையைத் தருவனவல்ல; அவை அவனை மிக நல்லவனாகவும் யோக்யனாகவும் செய்வதுமில்லை. உன் இஷ்ட தேவதையினிடத்துப் பக்தியும் உன்னைச் சூழ்ந்த ப்ராணியி னிடத்துபூததயையும், ஆகிய இவை உன் உயர்ந்த கடமைக ளல்லவா? கடவுளது ஸ்ருஷ்டிகளைக் கூர்ந்து படிக்கும் படிப்பு இவை இதுவன்றி வேறெது அத்தெய்வ பக்தியையும், பூததயையும் தரும்?

# பதிஞேருவது காண்டம்.

## மனிதனுக்கு நேர்வன.

## 1 - வது அத்யாயம்.

### வாழ்வும் தாழ்வும்—PROSPERITY AND ADVERSITY.

உன்வாழ்வு உன்னையளவுக் கதிகமாக உற்சாகப்படுத்தாம லிருக்கட்டும். உனக்கு வாழ்வு வராத காரணத்தால் உன் ஆத்மா, சாவது நலமென்றெண்ணும்படி துக்கிக்காமலு மிருக் கட்டும். வாழ்வின் குறுநகை நிலைத்ததல்ல. அதனுல் அதனை நம்பியிராதே. அதன் கோபமும் நீடித்தலில்லை. அதனுல், நன் னம்பிக்கை உனக்குப் பொறுமையைப் போதிக்கட்டும். தாழ் வைத் தரித்து நிற்பது கஷ்டமே. ஆனுல், வாழ்வில் மிதமா யிருப்பதே உத்தமஞானம். நன்மையும் தீமையும் உன் மன வோர்மையைப் பரிசோதிக்கும் கருவிகளாம். வேறெதுவும் உன் சக்தியை உனக்குத் தெரிவியாது. அதனுல், உனக்கு வாழ்வுதாழ்வு வரும்போது ஜாக்ரதையாயிரு.

வாழ்வு எவ்வளவு உன்னை முகஸ்துதி பண்ணுகிற தென்று கவனி. உன் பலத்தையும், திறமையையும் உன்னையறி யாமல் அது எவ்வளவு பறித்துவிடுகிறதென்று கருதிப்பார். இல்லாமையி லிருந்தபோதும், கஷ்டத்தி லிருந்தபோதும் ஜயிக்க முடியாமலிருந்த உன்னை, வாழ்வு இலகுவில் ஜயித்து விட்டது. உன் பலம் மீளவும் உனக்கு வருவதில்லை யென்ப தையும், அப்பலம் பின்னொருகாலத்தில் வேண்டியிருக்குமென்

பதையும் நீ அறியாது மறந்துவிட்டாய். துன்பம் ஒருவனது சத்ருக்களின் மனதில் இரக்கத்தை யூட்டுகிறது. ஜயமும், ஸௌகமும் அவனது ஸ்நேஹிதர்களின் மனத்தில் பொறாமையை யுண்டுபண்ணுகின்றன.

துன்பம் நன்மைசெய்வதற் கேதுவாம். வீரத்துக்கும் துணிவிற்கும் தாதியாம்; போதுமான வளவிற்கு பொருளுள்ளவன் அதிகந் தேடப் பிராணனைக் கொடான். ஸௌகவாஸியாயிருக்கும் எவன் உயிருக்குத் துணிவான்? கஷ்டகாலத்தில் எல்லாரும் தன்னைக் கைவிட்டதை ஒருவன் உணர்கிறான்; அதனால், தன் முயற்சியை நம்பி, மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு, கஷ்டங்களை முன்னிட்டு, ஜயிக்கிறான்.

வாழ்வு வந்தபோது தான் பத்ரமாயிருப்பதாக மனப்பால் குடித்துத் தன்னை சூழ்ந்துள்ளவர்களது புன்சிரிப்பு கள்ளங் கபடில்லாததென் றெண்ணி கவலையற்றுத் தன் முன்னிற்கும் அபாயங்களை யுணராது இதரர்களை நம்பி மோசம்போகிறான். ஒவ்வொருவனும் கஷ்டகாலத்தில் தன் மனத்துக்கு ஆறுதல் சொல்லக்கூடும்; ஆனால், வாழ்வு உண்மையை அவன் கண்ணெதிரில் படாதபடி மறைக்கிறது. திருப்திபண்ணிக் கொள்ளக்கூடிய மனோதுக்கம், ஸஹிக்கமுடியாத கஷ்டத்தில் கொண்டுபோய்விடுகிற் ஆநந்தத்தைக் காட்டிலும் சிறந்தது.

நமது மனோவிகாரங்கள் நம்முடைய மூர்க்கதசையில் நம்மை நடத்துகின்றன. மிதமே ஞானத்தின் பயன். உன் ஆயுட்காலம் முழுவதும் நேர்மையுள்ளவனாயிரு. உன் வாழ்நாளின் ஸௌகதுக்கங்களில் த்ருப்தியடை. அதனால் உனக்கு நேரும் எவ்விஷயத்திலிருந்தும் நீ நன்மை பெறுவாய். உனக்கு நேரும் ஒவ்வொன்றும் உனது புகழுக்கு ஏதுவாகும். ஞானி

ஒவ்வொன்றையும் ஆதாய வழியாக்குகிறான். லாபநஷ்டங்களை யொருபடித்தாய்ப் பார்க்கிறான். நன்மையைக் கையாண்டு தீமையை மேற்கொண்டு எதிலும் அசையாதிருக்கிறான்.

வாழ்வு வந்தபோது கர்வங்கொள்ளாதே; தாழ்வு நேர்ந்தபோது ஏக்கமுறாதே. அபாயத்தைத் தேடிக் கொள்ளாதே; அவை வரும்போது அற்பத்தனமாய் அவற்றைக் கண்டு ஓடாதே. உன்னிடத்துத் தங்கிநிற்காதவற்றை வெறுக்கத் துணிகிட்டாதாயின் வெட்டெனமற. தாழ்வு உன் நம்பிக்கையைக் கெடுக்காதிருக்கட்டும். வாழ்வு உன் விவேகத்தை மழுக்காமலிருக்கட்டும். முடிவைப்பற்றி ஏங்குகிறவன் அதனை ஒருபோதும் அடையமாட்டான். தனக்கெதிரிலுள்ள குழியையறிய வியலாதவன் அதில் ஆழ்ந்து நாசமாவான்.

வாழ்வு தான் தனக்கு நன்மையைத் தருவதென்றெண்ணித் தன் ஐஹிக ஸுகங்களை அதனோடு பொருத்துகிறவன், அலையினால் கரைக்கப்படும் மணற்றரையில் தன் கப்பலை நிறுத்திவைக்கிறவனை ஒப்பான். மலையருவி கடல் சேருமுன்னர் எப்படித் தன் கரையிலுள்ள வயல்களிலெல்லாம் பாய்ந்து ஓரிடத்தும் தங்காமல் ஓடிவிடுகிறதோ அப்படியே வாழ்வும் மனிதர்களிடத்து வந்து போய்விடுகிறது. அது அடிக்கடி இடம் மாறிக்கொண்டே யிருக்கிறது. காற்றைப்போல ஸஞ்சலமுள்ளது. அதனால், நீ எப்படி யதனை நிறுத்திவைக்க முடியும்? அது உன்னை ஆசீர்வதிக்கும்போது நீ புண்யசாலிதான். ஆனால், நீ அதற்கு வந்தனமளிக்கத் திரும்புவதற்கு முன் அது உன்னைவிட்டு வேறொருவனிடத்துப் போய்விடுகிறது.

---

## 2-வது அத்யாயம்.

### வலியும், வ்யாதியும்—PAIN AND SICKNESS.

சரீர அசௌசயம் ஆத்மாவையும் பீடிக்கிறது. சரீர ஸுகமில்லாமல் ஆத்மசாந்தியும் ஏற்படாது. துன்பங்களில் சரீரபாதைதான் மிகக் கஷ்டமானது. அதை நிவர்த்திக்கவே இயற்கையில் அநேக நல்ல பரிஹாரங்களிருக்கின்றன. உன் கடைப்பிடி நழுவும்போது உன் பகுத்தறிவைத் துணைக் கழைத்துக்கொள். உன் பொறுமை உன்னை நீங்கும்போது உன் நம்பிக்கையைக் கைவிடாதே. கஷ்டமென்பது, இயற்கை உனக்கு அவசியமென்று அமைத்த ஒன்றும். உனக்கு அது நேராதபடி கடவுளது அற்புத சக்தி காக்கவேண்டுமென்று ப்ரார்த்திப்பாயா? அல்லது எல்லாருக்கும் இது நேருகிறதேயென்று வருந்துவாயா? உனக்குமாத்ரம் விதிவிலக்கு ஏற்படுத்த வேண்டுமென்று எதிர்பார்ப்பது அந்யாயம். உன் அந்தஸ்துக்கென்று ஏற்பட்ட விதிகளுக்கு பணிவோடு அடங்கி நட.

ருதுக்களைப் பார்த்து, 'நான் கிழவனாவேன். ஆதலால் நீங்கள் செல்லாதீர்கள்' என்று சொல்லுவாயா? உன்னால் நிவர்த்திக்க முடியாத விஷயங்களை மனச் சாந்தியோடு பொறுத்துத் தீர்ப்பது நல்லதல்லவா? நாட்படநிற்கும் கஷ்டம் மிதமாயிருக்கும். அதனால், நீ அதைப்பற்றிக் குறைகூறுவதற்கு முன் அதற்காக வெட்கப்படு. உக்ரமான வலி ஸ்வல்ப காலந்தானிருக்கும். உடனே அது தீர்ந்து விடுமென்பதை யெண்ணிப்பார்.

சரீரம் ஆத்மாவுக் கடங்கினதாக ச்ருஷ்டிக்கப் பட்டிருக்கிறது. வலி அல்லது நோய்க்காக நீ ஆத்மாவை வருத்தும்போது நீ புறத்தில் தோன்றும் சரீரத்தை மாத்ரம் கவனிக்

கிறுயென்பதை நோக்கு. தன் வேஷ்டியை முள் கிழித்து விட்டதற்காக ஒருவன் தன் சரீரத்தை வருத்திக் கொள்ளமாட்டான். அதுபோலவே உன் சரீரத்துக்கு வருத்தமேற்பட்டதற்காக உன் ஆத்மாவை ஹிம்ஸித்துக் கொள்ளாதே.

## 3-வது அத்யாயம்.

### மரணம்—DEATH.

ரஸவாதியின் செய்கையால் லோஹம் வேதிக்கப்படுவது போல, நமது செய்கைகளின் நோக்கங்களை ப்ரசுரிக்கிற மரணத்தினால் நம் வாழ்நாள்கள் வேதிக்கப்படுகின்றன. உனக்கு ஒருவனது வாழ்நாளைப்பற்றித் தீர்ப்புச் சொல்லவேண்டுமானால் அவனது ஆயுள்காலம் முழுவதும் பரீட்சை செய். முடிவு உன் ச்ரமத்திற்குப் பலன்தரும். மித்ரபேதமில்லாத விடத்தில் உண்மை வெளிப்படுகிறது. நல்ல மரணத்தை யடையத் தெரிந்தவன் தன் காலத்தை வீணாய்க் கழித்திருக்கமாட்டான். தன் ஆயுள்காலத்தின் இறுதிக் காலத்தை கௌரவ ஸம்பாத்யத்தில் செலவிடுபவன் தன் மற்றக் காலங்களையும் வீண்பண்ணி யிருக்கமாட்டான்.

தான் சாகவேண்டிய தரப்படி சாகிறவன் வீணாய்ப் பிறக்கவில்லையென்றறி. ஸந்தோஷத்தோடு சாவோன் ப்ரயோஜன மில்லாமலும் உயிரோடிருக்கவில்லை. தான் சாக வேண்டுமெனபதைக் கருதுகிறவன் உயிரோடிருக்கும்போது உறுதியாயிருப்பான். அதை மறந்துவிடுகிறவனுக்கு எதிலும் இன்பமில்லை. அப்பேர்ப்பட்டவனுக்கு அவன் ஸந்தோஷங்கள் எப்போது அவனைவிட்டுப் போய்விடுமோ வென்ற ஏக்கம் ஸதா வுண்டு.

உனக்கு நல்ல மரணம்வேண்டுமானால் உன் பாபங்களெல்லாம் உனக்குமுன் சாகட்டும். தனது வாழ்நாளின் முடிவுக்குமுன் தன் கார்யங்களை முடித்துக் கொள்பவனே ஸாதகவான். மரணத் தருவாயில் மரணத்தைத் தவிர வேறு நினைப்பில்லாதவனே ஸாதகவான். தனக்கு இனி உலகத்தில் வேலையில்லாததால் காலதாமத மில்லாமல் இறக்க விரும்புகிறவனே ஸாதகவான். மரணத்தை விலக்க வெண்ணாதே; அது மனோதுர்ப்பலம். அதைக் கண்டஞ்சாதே; அது இன்னதென்று உனக்குத் தெரியாது. உன் துக்கங்களையெல்லாம் முடிவுபடுத்துகிறது என்பதுதான் உனக்கு மரணத்தைப்பற்றித் தெரிந்தது. தீர்க்காயுள் ஸாதாரமானதென் றெண்ணாதே. நன்றாய்ப் ப்ரயோஜனப்படுத்தப்பட்ட ஆயுளே மனிதனுக்குக் கண்யத்தைத் தருவது. அவனே தன் ஆயுட்காலத்திலடைந்த லாபங்களைக் கருதி மரணாந்தரம் ஸந்தோஷிப்பான்.

# பன்னிரண்டாவது காண்டம்.

---

## மதம்—RELIGION.

ச்ருஷ்டிகர்த்தாவாய், லோகநாயகராய், நித்யராய், ஒருவராலும் அறிய முடியாதவராய், எல்லாம் வல்லவராய் ஒரே கடவுளிருக்கிறார். ஸர்வக்ஞராயும், ஸர்வஸம்ஹ்ருத்தாயுமுள்ள அந்தப் பரமேஷ்டிக்கே வந்தனை வழிபாடுகளும், உபசாரமும், ஸ்தோத்ரமு முரியன. அவரே விசாலமான ஆகாயத்தைப் படைத்து ஒவ்வொரு நட்சத்ரத்துக்கும் வழிகாட்டுகிறார். அவரே மகா ஸமுத்ரங்களைக் கரைகடந்து செல்லாதபடி ச்ருஷ்டித்து, ப்ரசண்டமாருதங்களை யமைதியோடிருக்க ஆக்ஞாபிக்கிறார்.

அவரே பூகம்பத்தை யுண்டுபண்ணி மனிதகோடிகளை நடுங்கச் செய்கிறார்; மின்னலை வீழ்த்தித் துஷ்டர்களை ஸம்ஹரிக்கிறார். வாக்கைக் கொடுத்துத் தமது பலத்தால் அவ்வாக்மிக்களையும் மௌனமாக்குகிறார். அதனால் ஸர்வசக்தியுமுள்ள கடவுளுக்கு மர்யாதை செய்யுங்கள். அவர் கோபத்துக்குப் பாத்ரமாகாதீர்கள். அப்படியானால் நீங்கள் நாசமுறுவது நிச்சயம்.

கடவுள் தம் ச்ருஷ்டி முழுவதையும் பராமரிக்கிறார். அநந்த ஞானத்தோடும் அவற்றை யாண்டு நடத்துகிறார். உலக நடைக்கென்று விதிகளை யேற்படுத்தியிருக்கிறார். அற்புதப் படும்படியாக எல்லாவஸ்துக்களுக்கும் ப்ரத்யேக விதியேற்

படுத்தியிருக்கிறார். ஒவ்வொன்றும் தன் ஸ்வபாவப்படி அவ ரிச்சைக்குள் ளடங்கியிருக்கிறது. நிராசையால் எல்லா அறிவையுங் கடிழற்றுகிறார். கால ரஹஸ்யங்கள் அவருக்குத் தெளிவாய்த் தெரிகின்றன.

உனது மனப்போக்கு அவருக்கு வெள்ளிடை மலையெனத் தெரிகிறது. நீ நிச்சயிப்பதற்கு முன்பு உன் நிச்சயங்களை யவர் உணர்கிறார். அவருடைய முன்னறி ஞானத்தை ஸந்தேஹிப்பதற்கில்லை. அவருடைய பராமரிப்பில் ஆகஸ்மிகம் அல்லது அத்ருஷ்டமென்பதில்லை. தமது வழிகளில் அற்புதமாகக் காணப்படுகிறார். அவருடைய யோசனைகளை ஒருவராலும் உணர்ந்தறிய முடியாது. அவர் அறியும் விதத்தைச் சிந்திக்குந் திறமை நமக்கு வாய்ந்ததல்ல. அதனால் அவரது ஞானத்துக்கு ஸர்வ மர்யாதையும் பக்தியுங் காட்டு. அவருடைய ஆக்ஞைகளுக்குத் தாழ்ந்து வணங்கிநட.

ப்ரபு அன்பும் நன்மையுமுள்ளவர். அன்பு, தயை இக்குணங்களாலேயே உலகத்தைப் படைத்தார். அவரது நன்மை எல்லாப் படைப்பிலும் த்வனிக்கிறது. அவர் செம்மைக்கோர் ஊற்று; பூரணத்துக்கு நிலயம். அவரது ச்ருஷ்டிகள் அவரது நன்மையை ப்ரபலப்படுத்துகின்றன. அவற்றின் இன்பமெல்லாம் அவரது ஸ்துதியே. அவர் அவற்றை யழகாற்போர்த்து, ஆகாரத்தாற் காத்துத், தலைமுறை தத்வமாக இன்பத்தோடு வளர்க்கிறார்.

ஆகாயத்தை யண்ணாந்து பார்த்தால் அவரது கீர்த்தியே ப்ரகாசிக்கிறது. பூமியைக் குனிந்து நோக்கினால் அவரது நன்மையே நிறைந்திருக்கிறது. குன்றுகளும், பள்ளத்தாக்குகளும் அவர் சீரையே பாடி ஸந்தோஷிக்கின்றன;

வயல்களும், ஆறுகளும், காடுகளும் அவரது ஸ்துதியையே எதிரொளிக்கின்றன. மனிதனே! உன்னிடத்துச் சிறப்பான கருணையைக் காட்டி எல்லா ஜந்துக்களுக்கும் மேலாக உன்னை வைத்திருக்கிறார். உன் அதிகாரத்தைப் பாதுகாக்கப் பகுத்தறிவை யுனக்களித்திருக்கிறார்.

ஜனஸமூகத்தில் உன்னை அபிவ்ருத்தி செய்துகொள்ள உனக்கு வாக்கை யளித்திருக்கிறார். ஒருவராலும் பார்த்து அடையமுடியாத அவருடைய குண ஸம்பத்துக்களை நினைத்துத் துதிக்கத் தபஸை யுனக்களித்திருக்கிறார். அதனால் வந்த ஞோபசாரப் பாட்டுக்களால் அவரது நன்மையைத் துதி. அவரது அன்பின் அற்புதங்களை மௌனமாகக் கண்டு சிந்திப்பாயாக. உன் மனம் நன்றியோடும் விச்வாஸத்தோடும் பொங்கி வழியட்டும். உன் நாக்கு ஸதா அவரைத் துதித்தவண்ணமாயிருக்கட்டும். உன் செய்கை அவரது ஆக்ஞையினிடத்துள்ள அன்பை வெளிப்படுத்தட்டும். ப்ரபு ந்யாயவாதி ; ஸத்கார்ய துரந்தரர் ; பூலோகத்தாரை ந்யாயத்தோடும், உண்மையோடும் தீர்மானிப்பார்.

அவரது விதிகளை நன்மையினாலும் தயையினாலும் நிலைநிறுத்தியிருக்க, அவ்விதிகளை மீறி நடப்பவர்களைத் தண்டிக்க மாட்டாரா? க்ஷணிகரான மனிதனே! உனக்குத் தண்டனை கிடைக்கக் காலதாமதமாயிற்றென்று கடவுளது கரம் பலவீனப்பட்டதாக எண்ணாதே. உன் செய்கைகளைக் கண்டு இடங்கொடுத்துக் கொண்டிருக்கிறாரென்றும் பெருமை பேசிக் கொள்ளாதே. அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என்று கேட்டதில்லையா?

ஒவ்வொரு அந்தரங்க ரஹஸ்யங்களையும் அவரது கண்

பார்க்கிறது ; அவர் ஒன்றையும் மறப்பதுமில்லை. மனிதர்களை யாவது அவர்களது உலகப் பெருமைகளையாவது அவர் கவனிப் பதில்லை. உயர்ந்த அந்தஸ்துள்ளவர்களும், தாழ்ந்தவர்களும், பணக்காரரும், ஏழைகளும், ஞானிகளும், மூடர்களும் ஆகிய எல்லாருடைய ஆத்மாக்களும் இந்தச் சரீர மூட்டையைக் கழற்றியெறிந்துவிட்டுப் போனதும் அவருடைய ந்யாயத் தீர்ப்பைப் பெற்றுப் புண்யபாபச் செய்கைகளுக்குத் தக்கபடி பலனையனுபவிப்பார்கள்.

அப்பொழுது துஷ்டர்கள் பயந்து நடுங்குவார்கள் ; ஆனால், ஸத்துக்களது மனம் அவரது தீர்ப்பைக்கேட்டுக் குதூஹலிக்கும். அதனால் உன் வாழ்நாள் முழுவதும் கடவுளுக் குப் பயந்து நட; அவர் ஏற்படுத்தின வழிகளிலேயே நட. விவேகம் உன்னை எச்சரிக்கட்டும் ; மிதம் உன்னை அடக்கியாளட்டும்; நீதி உன்னை நடத்தட்டும் ; நன்மை உன் மனத்தில் ச்ரத்தையை யூட்டட்டும் ; கடவுளிடத்து நன்றி உனக்குப் பக்தியை யுண்டுபண்ணட்டும். இவை உனக்கு இஹத்தில் ஸுகத்தையளித்துப் பரத்தில் மோக்ஷத்தை யளிக்கும். இவ்வழிகளை யநுஸரிப்பவன் மனிதனது ஜீவ்ய சக்திகளை நிதானமாய்ச் செலவிட்டவனாவான். சுபம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மகா[illegible]பாத்தியாய
டாக்டர் [illegible] சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

THE GUARDIAN PRESS, MADRAS.

மாணாக்கர்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும்

கேஸரியின் அமிருதா

# ரக்த சுத்தி திராவகம்.

இந்த அவுஷதம் ரக்தசுத்தி யுண்டுபண்ணி மலபந்தகம், மந்தபுத்தி, அஜீரணம், சுக்ல நஷ்டம், கண் எரிச்சல், தலைவலி, சோம்பல், சர்மவியாதிகள் முதலியவைகளை நிவர்த்திப்பதற்கு வஜ்ராயுதம். இது ஹிந்து வைத்தியசாஸ்திர முறைப்படி மூலிகைகளினால் தயார் செய்யப்பட்ட சிறந்த அவுஷதம்.

இதன் விலை பெரியபுட்டி 3—0—0.

,, சிறியபுட்டி 1-10—0.

---

கேஸரியின்

# வசந்தமாலதி தைலம்

இதனால் ஸ்நானம் செய்துவந்தால் கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், தலைவலி, நித்திரை பங்கம், வயிறு சிரசு சம்மந்தமான வியாதிகள் நிவர்த்தியாய் கண்ணுக்கும், மூளைக்கும் குளிர்ச்சியும், புத்திக்கு சுறுசுறுப்பும் கொடுத்து அநேக மணி நேரம் படிப்பதற்கும், வேலை செய்வதற்கும், உத்சாகம் கொடுக்கும். இது ஒவ்வொரு மாணாக்கர்களிடத்திலும், உத்தியோகஸ்தர்களிடத்திலும் அவசியமாய் இருக்கவேண்டிய அபூர்வமான தைலம்.

இதன் விலை ரூபா 1—0—0.

எங்களுடைய விலாசத்துக்கு எழுதினால் பெரிய கேட்லாக் அனுப்புகிறோம்.

"கே. என். கேஸரி குடீரம்"

ஆயுர்வேத அவுஷதசாலை,

9, பந்தர் தெருவு, மதராஸ்.

# நான் மாணவர் தோழன்

டிராம் வண்டிகள் என்னை தூக்கிச் செல்கின்றன
நகரின் சுவர்கள்
என்னை பெருமையாய்க் கூறுகின்றன.



பத்திரிகைகள் என்னை
விளம்பரம் செய்கின்றன.
ஜனங்கள் என்னை புகழ்கிறார்
கள். வியாபாரிகள் என்னை
விரும்புகிறார்கள்.

## நான் தான்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.
பலவிருத்தி மருந்து.
நரம்பு ஸ்தானங்களை யெல்லாம்
உறுதிப்படுத்தி மூளைக்கு வலு
வைக் கொடுக்கிறேன்.

## என் வினா

நீங்கள் அறிந்திருப்பீர்களெ
ன்று நினைக்கிறேன். என்னைவாங்கி
என்னை முயற்சிசெய்துபாருங்கள்.

**32.** மாத்திரைகளின்
விலை ரூபா **1.**




வைத்திய சாஸ்திரி
**மணிசங்கர் கோவிந்தஜி,**
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம், 157 பிராட்வே, மதராஸ்,
96, மவுண்ட்ரோட், மதராஸ்.

HALLO ! WHAT IS THIS ?

THIS IS TNE TONIC OF WORLD WIDE REPUTATION

# MADAN MANJARI PILLS




These pills are prepared by a hereditary Royal Physician for the rejunevation of human kind. These pills are in daily use all over the world for brainfag, debility, nervous exhaustion, and loss of manhood. These pills are indispensable to young and old deserving the retentive power.

**Price per tin of 40 pills Rs. 1.**

---

**OUR FAMOUS AND INVALUABLE**

## 'VAIDYA VIDYA'

A manual containing 144 pages which leads you to perfect health, happy life and lasting wealth is offered to you.

---

*GRATIS & POST FREE*

Order for a Copy to-day and insure your life, moral mental, and physical dangers.

---

**Raj Vaidya Narayanji Keshavajee,**
**20, China Bazaar Road,**
**MADRAS.**

இது ஹிந்துதேசத்தில் நல்ல மூலிகைகளாலும், லோகங்களாலும் தயார் செய்யப்பட்டது. ரத்தத்தை விருத்தியாக்கும் மேக வாத நோய்களை போக்கடிக்கும், எல்லாவித பலஹீனங்களையும் போக்கும்.

## ஜீவாமிருதம்

பாண்டுரோகிகளுக்கு நல்லது, மார் அதிர்ச்சியை போக்கும், கர்ப்பகாரகங்களை நீக்கும், மூர்ச்சைகளுக்கு நல்லது, மூளைக்கு வலுவை யுண்டாக்கும், நரம்புகளுக்கு வலிவை ஜாஸ்தி கொடுக்கும், வித்யார்த்திகளுக்கு பிராண மித்திரமானது, பிராணசக்தியை ஜாஸ்தியாக்கும், க்ஷயரோகிகளுக்கு மிகவும் நன்று, மாருக்கு அதிக பலத்தை கொடுக்கும்.

விலை புட்டி 1-க்கு ரூபா. 3.

உபயோகவிதி மருந்துடன் அனுப்பப்படும்.

---

இது சிரஸ்ஸையும் கண்களையும் எப்போதும் காப்பாற்றும், பாரிசநோய்களை தூரமாக்கும், கன்னங்கள் நோயை நிர்மூலமாக்கும் பீனஸரோகத்தை வரவொட்டாது

## அமிருதாமலகதைலம்

மூளைக்கு வலிவை யுண்டாக்கும், காதுநோய்களை போக்கடிக்கும், கண்களுக்கு குளிர்ச்சியை யுண்டாக்கும், மயிரை நரைக்கவொட்டாமல் செய்யும், மயிரை பட்டுபோல் வளரச் செய்யும், நரைத்த மயிரை கருக்கச்செய்யும், யோசனை செய்வோருக்கு ரொம்பவும் மேன்மையானது, தலையிடியை நிர்மூலமாக்கும், வித்யார்த்திகளுக்கு சர்வதாஹிதம், சர்மரோகிகளுக்கு நல்லதைச்செய்யும், தலை எரிச்சலை போக்கும், அதிக நித்திரையை குறைக்கும்.

விலை புட்டி 1-க்கு அணா 12

வைத்யரத்ன பண்டித டி. கோபாலாசார்லு,

எ. வி. எஸ். எ. யம். பி. ஆயுர்வேதாச்ரமம்,

55, ஆசாரப்பன் தெருவு, ஜி. டி. மதராஸ்.

# சர்வதேள் விஷ சஞ்சீவி

**கதரிவந்தவன் களிப்புடன் செல்வான்!**

**விஷந் தீண்டினவன் நிமிஷத்தில் குணமடைவான்!!**

**குணமில்லாவிட்டால் ரூபாய் 100 இனாம் கொடுக்கப்படும்!!!**

நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் பாலர்களிருக்கிற அறையிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்க முடியாமல் அவஸ்தைப் படுவதை நாம் அனேகரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி, நாம் அதிக கஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டு பிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பிய டாக்டர்களாலும், தமிழ்வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப்பெற்றது.



இவ்விஷ சஞ்சீவியை இன்னும் பல்லி, நாய், பூரான், செய்யான், பாம்பு நண்டுகள் முதலிய பல்வித விஷ ஜெந்துக்கள் தீண்டின போதிலும், டைரக்ஷனில் சொன்னபிரகாரம் உபயோகித்தால் குணமடையும்.

இந்த லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள். இவ்விஷ சஞ்சீவியை ஒவ்வொருவரும் அவசியம் வைத்துக்கொள்ள வேண்டியது.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை பாக்கெட் 1-க்கு ரூ. 0-8-0  டசன் 1-க்கு ரூ. 5-0-0**

**வி. எ. எஸ். பாணி கம்பெனி,**


**3, இருளப்பன் தெரு, மதராஸ்.**

இனாம்! பவுன்டன் பேனா இனாம்!!

## சுந்திரமான அமெரிக்கன் கெடியாரங்கள்.

குறைந்த விலை ரூ. 3—0—0.

இப்படத்தில் காணும் கெடியாரத்தை அமெரிக்காவிலிருந்து தருவித்து இருக்கிறோம். பார்வைக்கு வெகு அழகுடையதும் தலைச்சாவி உள்ளதும், நடுத்தர அளவானதுமாகயிருக்கும். இக்கெடியாரத்தை வாங்குகிறவர்களுக்கு ஒரு அழகான பவுண்டன் பேனா ஒரு ரூபா விலையுள்ளது. இனாமாய் கொடுக்கப்படும். சொற்ப விலையில் நெடுநாளைக்கு உழைக்கக்கூடிய கெடியாரம் இது ஒன்றே. 5-வருஷம் உத்திரவாதம் பெற்றது.




விலை கெடியாரம் 1-க்கு இனாம் உடன் ரூ. 3-0-0.
தபாற் செலவு 4-0-0.


வி. எ. எஸ். பாணி,
நெ. 3, இருளப்பன் தெரு,
மதறாஸ்.

இனும்! பவுன்டன் பேனு இனும்!!

# சுந்திரமான அமெரிக்கன் கெடியாரங்கள்.

குறைந்த விலை ரூ. **3—0—0**.

இப்படத்தில் காணும் கெடியாரத்தை அமெரிக்காவிலிருந்து தருவித்து இருக்கிறோம். பார்வைக்கு வெகு அழகுடையதும் தலைச்சாவி உள்ளதும், த்தர அளவானதுமாகயிருக் . இக்கெடியாரத்தை வாங்கு வர்களுக்கு ஒரு அழகான ண்டன் பேனு ஒரு ரூபா லையுள்ளது. இனுமாய் கொ கப்படும். சொற்ப விலையில் நெடுநாளைக்கு உழைக்கக்கூடிய கெடியாரம் இது ஒன்றே. 5-வருஷம் உத்திரவாதம் பெற்றது.




விலை கெடியாரம் **1**-க்கு இனும் உடன் ரூ. **3-0-0.**
தபால் செலவு **4-0-0.**

**வி. எ. எஸ். பாணி,**
நெ. 3, இருளப்பன் தெரு,
மதுரை.